# எஸ்.எஸ்.தென்னரசு

431



# மலடி பெற்ற பிள்ளை

வானதி
பதிப்பகம்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# மலடி பெற்ற பிள்ளை

தென்னரசு

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : பிப்ரவரி 1983
உரிமை பதிவு

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 5-00

கயல் அச்சகம்
155, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை - 600 086,
தொலைபேசி : 89849.

# செட்டி நாட்டுக் கதை

இந்தக் கதை- செட்டி நாட்டில், நகரத்தார் தலை நகரங்களில் ஒன்றான நாட்டரசன் கோட்டையில் நிகழ்ந்ததாகக் கேள்விப் பட்டேன். நாட்டரசன் கோட்டை இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை வட்டத்தில் இருக்கிறது.

அங்கு, கண்ணுத்தாள் கோயில் என்ற பெண் தெய்வத்தின் ஆலயம் பிரசித்தி பெற்று விளங்குகிறது. அதனை, கண்ணகியின் கோயில் என்றும் அந்த வட்டார மக்கள் நினைக்கிறார்கள். நானும் செட்டி நாட்டுப் பகுதியைச் சேர்ந்தவன் என்ற எண்ணத்தில், நேரில் அங்கு சென்று, அதன் சூழலை மையமாக வைத்து இந்தக் குறு நாவலை எழுதியுள்ளேன்.

பத்திரிகையில் இது தொடர் கதையாக வந்த போது அந்தப் பகுதி மக்களிடமிருந்து ஏராளமான பாராட்டுக் கடிதங்கள் வந்தன. அப்போது படிக்காதவர்களுக்கு மற்றொரு வாய்ப்பை அன்பிற்குரிய வானதி திருநாவுக்கரசு அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள். நன்றி. வணக்கம்.

*அன்புள்ள*

**தென்னரசு**

# மலடி பெற்ற பிள்ளை

கண்ணுவின் கடைவிழிகளில் மலரத் துடிக்கும் மொட்டுகளைப் போலக் கண்ணீர்த் துளிகள் ததும்பி நின்றன. ஒரு நாள் கூட கண்ணு இவ்வளவு மனச்சங்கடத்தைத் தாங்கிக் கொண்டிருந்ததில்லை. அன்று மட்டும் அவள் அடங்காத் துயரத்திற்கு ஆளாகித் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தாள்.

"கண்ணு!" முகப்புக் கதவு தட்டும் சத்தம் கேட்டது.

இந்தக் குரலைத்தான் கண்ணு நெடுநேரமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த நேரத்தில் அந்தக் குரல் பிருந்தாவனத்திலிருந்த கண்ணனின் குரலைப் போல் அவள் மனதுக்குப் பட்டது. புருஷனின் குரல் எவ்வளவுதான் கரகரப்பாக இருந்தாலும் மனைவிக்கு அதுதானே புல்லாங்குழல் இசை!

"என்ன கண்ணு ஒரு மாதிரியாக இருக்கிறாய்?"

கண்ணு பதில் பேசாமல் தேம்பித் தேம்பி அழத் தொடங்கி விட்டாள்.

கண்ணப்பன் அவளைத் தழுவியபடி அழைத்துக் கொண்டு உள்ளே போய் விட்டான்.

உள்ளே போனதும் படுக்கை அறையிலுள்ள இரட்டைக் கட்டிலில் அவள் குப்புறப் படுத்துக்கொண்டு கோ என்று கதறினாள்.

"என்ன கண்ணு இதெல்லாம்? உன் அத்தைக்குத் தெரிந்தால் ஒரு மாதிரியாகப் பேசுவார்கள். விஷயத்தைச் சொல்லு!"

"எத்தனையோ முறை ஜாடை, மாடையாக உங்களுக்குச் சொன்னேன். நீங்கள் புரிந்து கொள்வதில்லை. இன்றைக்கு வெளிப்படையாகவே பேச ஆரம்பித்து விட்டார்கள்.

கண்ணுத்தாள் அடிக்கடி ஏன் கண்கலங்கி நிற்கிறாள்? இதற்காக இருக்குமோ, அதற்காக இருக்குமோ என்று குழம்பிக்

கொண்டிருந்த கண்ணப்பனுக்கு அன்று தெளிவாகப் புரிந்து விட்டது.

"உன் மனக்குறை லேசானதில்லை கண்ணு! உன்னைப் போன்றவர்களுக்காகத்தான் 'சுவீகாரம்' என்ற முறையை நம் ஜாதிக்காரர்கள் பின்பற்றி வருகிறார்கள்!" என்று கண்ணப்பன், கண்ணுவுக்கு ஆறுதல் சொன்னான். சமாதானம் சொல்லும் கணவனது ஆறுதல் மொழிகள் அந்த நேரத்திற்கு வேண்டுமானால் சங்கீதமாகத் தெரியலாம். ஆனால் அதையே மனக்குறை அகற்றும் மாமருந்தாக எந்தப் பெண்ணும் எடுத்துக்கொள்வதில்லை.

கோயிலூர்!

ஒரு பெண் தெய்வத்தின் ஆலயத்தைச் சுற்றி அந்த ஊர் அமைந்திருந்தது. செட்டிநாட்டில் பெரும்பாலான சிற்றூர்கள் அப்படித் தான் அமைந்திருக்கும்.

கோயிலின் முன்வாசல் மண்டபம் சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த கல் தூண்களால் நிறுவப்பட்டிருந்தது. கோடைகாலமாக இருந்தாலும் சரி, மழை காலமாக இருந்தாலும் சரி-அந்த ஊர் மக்கள் ஓய்வு நேரத்தை அந்தக் கல் மண்டபத்தில்தான் கழிப்பார்கள்.

கோயிலுக்கு எதிரே ஒரு அழகான தெப்பக்குளம். செம் மண் கலந்த சுவையான அந்த நீர்த்தடாகத்தின் நடுவே ஒரு மையமண்டபம். ஒரு பக்கத்திலே சிறிய கடை வீதி; இன்னொரு பக்கத்திலே பெரிய திறந்தவெளி மைதானம். அந்தக் கோயிலுக்கு ராஜகோபுரம் இல்லாவிட்டாலும் அருகில் வந்து பார்ப்போருக்கு அந்தப் பெண் தெய்வத்திற்கு ஏதோ ஒரு பூர்வீக வரலாறு இருப்பதுபோலவே தோன்றும். மற்ற இந்துக் கோயில்களில் இருப்பதுபோல இந்தக்கோயிலில் கம்பத்தடி கிடையாது. நந்தி இல்லை. கோயில் வாசல் கதவைத் திறந்ததும் மூலஸ்தானத்தைத் தரிசித்து விடலாம்.

இந்தக் கோயில் இந்து அறநிலையத் துறைக்குக் கட்டுப்பட்டதென்றாலும், சிவகங்கை சமஸ்தானத்தின் நேரடி மேற்பார்வையில் இயங்கி வந்தது.

இந்தத் தெய்வத்திற்கும் நிறைய அணிமணிகள் உண்டு! வைகாசி விசாகம் புகழ் பெற்றது. விசாகத் திருவிழாவை நாட்டுக்கோட்டை வம்சத்தார் தங்களுக்குக் கிடைத்த தேசியத் திருவிழாவாக எண்ணி வீட்டுக்கு வீடு விருந்து வைத்து ஆரவாரத்துடன் கொண்டாடுவார்கள்.

இந்த ஊரில் கூரை வீடுகளைவிட கெட்டியான மச்சு வீடுகளே அதிகம். பெரும்பாலானவர்களுக்கு வெளிநாட்டு வியாபாரம். சிலருக்கு பர்மாவிலே வட்டிக்கடை, வேறு சிலருக்கு சிங்கப்பூரிலே ஜவுளிக்கடை, மிகுதிப்பேருக்கு சுமித்ரா, ஜாவா பகுதிகளில் கமிஷன் கடைகள்.

நாளடைவில் பர்மா சுதந்திரம் அடைந்தது. பர்மாவின் எழுச்சி, அங்கு வாழ்ந்த தமிழர்களின் தொழிலுக்கும், முன்னேற்றத்திற்கும் தடையாக அமைந்து விட்டது. அதனால் பர்மா தமிழர்கள் வாழ்க்கையில் நொடித்துப் போனார்கள். பர்மா பணம் இந்தியாவிற்கு அனுப்புவது தடை செய்யப்பட்டது.

இதனால் தமிழ் நாட்டிலுள்ள சிங்கப்பூர் கடைக்காரர்கள் வாழ்விழந்த பர்மாக் கடைக்காரர்களை ஏளனமாகக் கருதினார்கள். சிங்கப்பூர் கடைக்காரர்கள் கை ஓங்கியது. மேலும் மேலும் அவர்கள் சொத்துக்களை வாங்கிக் கொண்டே வந்தார்கள். அதற்கு நேர்மாறாக பர்மாக்கடைக்காரர்கள் குடியிருந்த வீடுகளையே இடித்து விற்கத்தலைப்பட்டார்கள். மிகவும் கஷ்டப்பட்டு பர்மாவிலே இருந்து கொண்டுவந்த சித்திர வேலைப்பாடுகளுடன் கட்டப்பட்ட வண்ண வண்ண தேக்குமர உத்திரங்களைக் கொண்ட வீடுகள் குறைந்த விலையில் விற்பனைக்கு வந்து விட்டன. சிங்கப்பூர் கடைக்காரர்கள் மலிவாக அவைகளை வாங்கி புதிய மோஸ்தரில் வீடுகளைக் கட்டினார்கள்; புதிய கார்கள் வீட்டுக்கு வீடு நின்றன. பாவம் பர்மாக் கடைக்காரர்கள் பல்லுப் போன பழைய காலத்துப் பந்தயக் குதிரைகளைப்போல மனமொடிந்து போனார்கள். தாங்கள் பர்மாவில் இருந்தோம், வாழ்ந்தோம் என்பதற்கு அடையாளமாக அவர்கள் தங்கள் கைகளில் ஒரு பவள வேரையும், காலில் மரக்கட்டைச் செருப்பையும் தான் அணிந்திருந்தார்கள்.

ஒரு காலத்தில் ரங்கோன் மொகல் ரோட்டில் மூன்றடுக்கு மாளிகையில் வாழ்ந்தவர்கள் இன்று கோயிலூரில் அதே கல் மண்டபத்தில், மேல்துண்டைச் சுற்றித் தலையணையாக்கி வைத்துக்கொண்டு தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

இதைவிட கோயிலூருக்கு இன்னொரு துர்பாக்கியம் ஏற்பட்டு விட்டது. செல்வ நிலையை யொட்டி அந்தக் கிராமம் செயற்கையாக இரண்டு பகுதிகளாகப் பிரிந்து விட்டன. ஒரு பகுதியில் சிங்கப்பூர் கடைக்காரர்கள் புதிய வீடுகளிலும் அடுத்த பகுதியில் பர்மாக் கடைக்காரர்கள் அவர்களது பூர்வீக வீடுகளிலும் வாழ்ந்து வந்தார்கள். இதனால் வெளியூர் வியாபாரிகள் யாரும் பர்மாக் கடைக்காரர்கள் இருக்கும் பழைய வலவிற்கு வருவதில்லை. காய்கறிக்காரன், மளிகைக் கடைக்காரன், உப்பு வண்டிக்காரன் உட்பட எல்லோருமே புதிய வலவிற்குத்தான் போய் வந்து கொண்டிருந்தார்கள். பழைய வலவிலே இருந்த பர்மாக் கடைக்காரர்களுக்கு எதுவுமே கிடைப்பதில்லை.

வாழ்க்கையில் என்னதான் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டாலும் உறவும், உரிமையும் அழிந்துபோய் விடுமா? தாய்மாமன், சகோதரி, சம்பந்தி என்ற உறவுமுறை அற்றுப்போய்விடாதல்லவா? ரத்தபாசம் என்பது சமையலறையில் பிடித்த கரி மாதிரி! எத்தனைமுறை சுண்ணாம்படித்தாலும் சுவரில் படிந்து போயிருக்கும் புகைக்கரியை மாற்றவே முடியாது!

தமிழ் ஆராய்ச்சியில் கற்றுத்தேர்ந்த கண்ணப்பனுக்கு இது தெளிவாகத் தெரிந்த ஒன்று. பர்மாவின் வீழ்ச்சியினால் அவனது மாமனார் வீடு மிகவும் நொடித்துப் போய்க்கிடந்தது. கண்ணப்பன் திருமணத்தின்போது அவன் மாமனார் வீடு இருந்த நிலை வேறு, இப்போதிருக்கும் நிலை வேறு. நாலு முகப்பு நாராயணன் செட்டியார் என்ற புகழ் அவன் மாமனாருக்கு இருந்தது. ஆம்; நாராயணன் செட்டியார் வீட்டுக்கு நாலு தலைவாசல்கள் இருந்தனவாம்! ஐந்தாண்டு காலத்திற்குள் சரசர வென்று அவர் குடும்பம் சரிந்து விட்டது. அதற்காக அவர் மரியாதையை இழந்து விடவில்லை. மற்றவர்களைப்போல அவர் கோயில் கல் மண்டபத்து வாசியாகி விடவில்லை. கிராமத்திலே விளையும் நெல்லை வைத்துக் குடும்பத்தை நடத்திக் கொண்டு வந்தார்.

நாராயணன் செட்டியார், கண்ணுவின் கல்யாணத்தை தடபுடலாக நடத்தினர். நாதசுரக் கச்சேரி முதல் நாட்டியக் கச்சேரி வரை, கண்ணுவின் திருமணத்தை அமர்க்களப் படுத்தின. இன்று நாராயணன் செட்டியார் குடும்பம் நசித்துப் போய் விட்டது என்பதற்காக கண்ணப்பனுக்கும் கண்ணுவுக்குமுள்ள பந்தமும், பாசமும், ரத்தக் கலப்பும் வற்றிப் போய் விடுமா?

எந்த மாமனர் ஒரு காலத்தில் கண்ணப்பனுக்கு வலிய வலிய வந்து அள்ளி அள்ளி கொடுத்தாரோ, எந்த மாமனர் ஒரு காலத்தில் மகள் கண்ணுவுக்கு வெள்ளியிலும், வெண்கலத்திலும் வண்டி வண்டியாகப் பாத்திரங்களை அனுப்பி வைத்தாரோ அந்த மாமனர் இன்று விடியற் காலையில் எழுந்ததும் வேப்பங் குச்சியைப் பல்லில் வைத்துத் தேய்த்துக்கொண்டு முகட்டையே பார்த்துக் கொண்டிருப்பது கண்ணப்பனை வாட்டத்தான் செய்தது.

கண்ணப்பன் குடும்பத்திற்கு மூத்தவன். அவன்தான் தலை மகன் ஒரு குடும்பத்தில் மூத்தவனுக்கே குழப்பம் ஏற்பட்டு விட்டால் அந்தக் குடும்பத்திலே குதூகலம் இருக்காது. அந்த வீடே உரமில்லாத பயிரைப்போல், உவட்டுத்தரையில் குன்றி நிற்கும் தென்னையைப்போல் பளபளப்பை இழந்து விடும். எல்லாம் தெரிந்த கண்ணப்பனுக்கு இது தெரியாமல் இல்லை. அவன் ஒரு பட்டதாரி. தமிழிலும் பாண்டித்தியம் பெற்றவன். இருந்தாலும் அவன் உள்ளத்தின் ஒரு மூலையில் 'குறுகுறுப்பு' இருந்துகொண்டு தானிருந்தது. அதனல் அவன் பலவீனமடைந்துவிட்டவனைப் போல் தோன்றலானன். உடல் பலவீனமடைந்தால் மருந்து சாப்பிடலாம். மனம் பலவீனமடைந்தால் எந்த மருந்தைச் சாப்பிடுவது? ஆயிரம் களம் நெல்லை ஒரு பெரிய களஞ்சியத்திலே போட்டுப் பூட்டி விடலாம். அதற்குள்ளே ஒரு அந்து புகுந்து விட்டால் யாராலும் அந்தக் களஞ்சியத்தைக் காப்பாற்ற முடியுமா?

அன்று கண்ணப்பனுக்குத் தூக்கமே வரவில்லை. மல்லாந்து படுத்தபடி எப்போது விடியும் என்றே விழித்துக் கொண்டிருந்தான். அவனது அறையின் கிழக்கு ஜன்னல் வழியாக சிறுகச் சிறுக வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. அறைக்குள்ளே இருந்த

டைம்ப்பீஸ் கடிகாரம் அலறியது. கண்ணப்பன் எழுந்து சுவரில் மாட்டப்பட்டிருந்த மறைமலை அடிகள் படத்திற்கும், பாரதி தாசன் படத்திற்கும் வணக்கம் போட்டு விட்டு அடுத்த தாழ் வாரத்திற்குப் போய் அங்கே கிடந்த 'கர்லாக்' கட்டையை எடுத்துச் சுற்ற ஆரம்பித்தான். அவன் தேகப்பயிற்சி செய்ய ஆரம்பித்து அரை மணி நேரம் கூட ஆகவில்லை. அதற்குள்ளாக கண்ணு அந்த இடத்திற்கே காபியை கொண்டு வந்து விட்டாள். அவள் அங்கு வருவது எப்போதும் இல்லாத பழக்கம்; எப் போதுமே தேகப்பயிற்சி முடிந்து கண்ணப்பனுகக் கேட்ட பிறகு தான் கண்ணு காபியைக் கொண்டு வருவாள்; அன்று மட்டும் கண்ணு முந்திக் கொண்டாள்.

"இன்னுமா இந்தப் பழக்கம் போகவில்லை? நமக்கு எதற்கு இதெல்லாம்?"

"நீ சொல்லுவதும் சரிதான் கண்ணு. ஒரு நல்ல பழக்கத்தை திடீரென்று நிறுத்தி விட்டால் உடல் கெட்டுப் போய் விடுமே என்று யோசிக்கிறேன். அதுவும் போக, ஒரு நல்ல பழக்கம்போய் புதிதாக ஏதாவது கெட்ட பழக்கம் வந்து உடம்பு கெட்டு விடக் கூடாதே என்ற பயமும் எனக்கு இருக்கிறது!"

"உடம்பினுலே ஒன்றுமில்லை" என்ருள் கண்ணு.

இது சாதாரண பதில்தான். ஆனால் இந்தப் பதில் கண்ணப் பன் உள்ளத்தில் முள் தைப்பதுபோல் பட்டது.

"நீ சொல்வது எனக்கும் புரிகிறது கண்ணு! உனக்கும் எனக் கும் இப்போது இளமையா போய் விட்டது? எத்தனையோ பெண்களுக்கு நாற்பது வயதுக்கு மேலே குழந்தை பிறந்த தில்லையா?"

கண்ணப்பன். கண்ணுவுக்குப் பதில் சொல்லி விட்டானே தவிர, அவன் மனதுக்குப் பதில் சொல்லிக் கொள்ள அவனுல் முடிய வில்லை.

கண்ணுத்தாளின் கண்களில் நீர் கோத்து விட்டது.

"அத்தை முன்னைப் போல இப்போது என்னேடு கலகலப்

பாகப் பேசுவதில்லை. பெட்டகத்துச் சாவி, உக்கிராணச் சாவி எப்போதுமே என்னிடம்தான் இருக்கும், இரண்டு சாவிகளையும் அத்தை என்னிடமிருந்து நேற்று வாங்கிக் கொண்டார்கள்.''

''அம்மா, பாதுகாப்பிற்காக வாங்கிக் கொண்டிருப்பார்கள். வேறு எதுவும் காரணமிருக்காது'' என்று கனிவாகச் சொன்னான் கண்ணப்பன்.

''நீங்கள் எப்போதுமே இப்படித்தான். எல்லாவற்றையும் மூடிமூடி மறைப்பீர்கள்'' என்று முணுமுணுத்தாள் கண்ணு.

''உனக்கு ஏதாவது காரணம் தெரிந்தால் சொல்லு! அம்மாவை நானே கேட்கிறேன்'' என்றான் கண்ணப்பன்.

''ஆறு வருஷமாக என்னிடமிருந்த சாவிக் கொத்து திடீரென்று ஏன் கைமாற வேண்டும்? பேரன் மேலே வந்த பிரியம் சின்ன மருமகள் மீது தாவிவிட்டது! இதுதான் காரணம்''— கண்ணு இவ்வளவு கடுப்பாக என்றைக்கும் பேசியதில்லை.

''விஷயத்தை இப்படி விளக்கமாகச் சொன்னால் தானே எனக்கும் புரியும்? அம்மா உன்கிட்டே இருந்த சாவிக் கொத்தைப் பிடுங்கி மீனுவிடம் கொடுத்துவிட்டார்கள்; அவ்வளவு தானே?''

''உங்களுக்கு இது சாதாரணமாகத் தெரியலாம்; ஆனால் எனக்கு அப்படி இல்லை!''

''உனக்கு அவமானமாகத் தெரிகிறது என்கிறாய்! அந்த அவமானமும் என்னால்தான் வந்தது என்று எனக்கு இடித்துக் காட்டுகிறாய்!''

கண்ணு இதற்குப் பதில் சொல்லவில்லை. வாய்விட்டு அழ ஆரம்பித்துவிட்டாள்.

''கண்ணு, உன் நோக்கம் எனக்குப் புரிகிறது, என் அம்மாவுடைய மனமாற்றமும் எனக்குப் புரிகிறது. உனக்குக் குழந்தை இல்லாததால் உன் மீதுள்ள பிரியமெல்லாம் மீனுவின் பக்கம்

போய்விட்டது. அதற்குக் காரணம் அவளுக்குக் குழந்தை இருக்கிறது என்பது உனது மனக்குமுறல்! என் அம்மாவின் அன்பை இழந்ததற்கு நீ மட்டும் பொறுப்பாளி அல்ல. நானும் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியவன்தான்! இதில் எதற்கு ஒளிவு மறைவு எல்லாம்?''

''இருந்தாலும் அத்தை என்னை இவ்வளவு அசிங்கப்படுத்தியிருக்க வேண்டியதில்லை. நான் அவர்களை எவ்வளவோ மதித்தேன். மரியாதை செலுத்தினேன். அவர்கள் அதை வர வரப் பொருட்படுத்துவதே இல்லை. எல்லாமே மீனுதான்அவர்களுக்கு! அதனாலே மீனுவும் என்னை மதிப்பதில்லை. ''அக்கா அக்கா!'' என்று அன்பொழுகப்பேசிய மீனு இப்போது ஜாடை பேசத்தொடங்கி விட்டாள்.''

''மீனு ஏழை வீட்டுப்பெண்; நம் குடும்பத்திற்குப் பொருத்தமானவள்; கருப்பாக இருந்தாலும் கவர்ச்சியாக இருக்கிறாள் என்று என் தம்பிக்கு மீனுவை முடித்துவைத்தவளே நீதானே!''

''அதையெல்லாம் இப்போது யார் நினைத்துப் பார்க்கிறார்கள்! மீனுவின் தாயும் தகப்பனும் நம்ம வீட்டுக்கு நடையாய் நடந்தார்கள். நீ சொன்னால்தான் உன் மாமி கேட்பாள் என்று என்னைக் கெஞ்சாக் குறையாகக் கேட்டார்கள். இப்போது அவர்களிடம் நான் படுகிறபாடு சொல்லத் தரமில்லாததாகி விட்டது!''

''இதெல்லாம் ஒரு பெரிய குடும்பத்தில் நடக்கக்கூடிய சம்பவங்கள் தான்! அதற்காக உன் மனக்குறையை நான் மதிக்காமல் இல்லை கண்ணு!''

''எனக்குப் பிராப்தம் இவ்வளவுதான் என்று நினைத்து மீனுவின் பிள்ளையை என் பிள்ளையாக எண்ணி மகிழக்கூட அனுமதிக்க மாட்டோம் என்கிறார்கள். பிள்ளையைத் தூக்கிக்கொஞ்சினால் வேலைக்காரியை அனுப்பி குழந்தையைப் பிடுங்கி வைத்துக் கொள்கிறார்கள்.''

கண்ணுவின் இந்தப் பிடியிலிருந்து கண்ணப்பனால் தப்ப முடியவில்லை.

"என்ன இருந்தாலும் நீ தான் மூத்த மருமகள். அதை யாராலும் குறைத்துவிட முடியாது. மீனு எத்தனை பிள்ளைகளைப் பெற்றாலும் இந்த வீட்டில் உனக்குள்ள உரிமை அவளுக்கு வந்து விடுமா, அல்லது அவள் தான் உனக்கு மூத்தவளாகிவிடப் போகிறாளா?"

இதைத் தவிர வேறு சமாதானத்தை கண்ணப்பனால் சொல்ல முடியவில்லை.

"உங்கள் சமாதானம் உங்களுக்கு வேண்டுமென்றால் சரியாகப்படலாம். வயிறு எரிகிறது என்கிறேன், நீங்களோ—வாழைப் பழத்தைச் சாப்பிடு சரியாகிவிடும் என்கிறீர்கள்."

"கண்ணு, நீ வருத்தப்படுவதிலே நியாயம் இருக்கிறது. ஆனால் உன் வருத்தம் உடனடியாகத் தீரக்கூடியதா? இதற்கு மருந்து கடைவீதியில் கிடைக்குமென்றால் என்ன விலை கொடுத்தும் வாங்கி வந்து விடுவேனே."

"இரும்புப் பெட்டியில் பணம் இருந்தால்தான் அதற்குப் பெயர் பெட்டகமாம்! இல்லாவிட்டால் அது வெறும் இரும்பு தானும். அத்தை அடிக்கடி இப்படி என்னை இடித்துக் காட்டிப் பேசுகிறார்கள்!"

"உனக்கிருக்கும் மனத்தாங்கல் எனக்கும் இருக்கிறது. ஆனால் உன்னைப் போல் என்னால் வெளிக்காட்டிக் கொள்ள முடியவில்லையே! பெண்கள் வீட்டுக்குள் சண்டையிட்டுக்கொண்டால் கொஞ்ச நாளில் கூடிக்கொள்வார்கள். அதுவே ஆண்கள் மத்தியில் வந்துவிட்டால் பாகப்பிரிவினை வரை போய்த்தான் நிற்கும்! இந்தப் பிரச்சினையால் எனக்கும் தம்பிக்கும் அபிப்பிராயபேதம் வந்துவிடக் கூடாதே என்றுதான் பார்க்கிறேன். எதற்கும் ஒரு முடிவு வரும். அதுவரை காத்திருப்போம்" என்று கண்ணப்பன் கண்ணுவின் தோளைத் தொட்டு ஆறுதல் சொன்னான்.

இந்தச் சமயத்தில் கண்ணப்பனின் தந்தை முத்துக்கருப்பர் உள்ளே வந்தார்.

"என்னம்மா, காலை நேரத்திலேயே அவனைப் பாடாய்ப் படுத்த ஆரம்பித்திருக்கிறாய்?" என்று கேட்டுக் கொண்டேதான் நுழைந்தார். அவர் தோளில் அவரது பேரப் பிள்ளை—மீனாவின் மகன்— தொத்திக் கொண்டிருந்தான்.

"பெரியப்பாவைக் கேளுடா, என்னைப் போல ஒரு புள்ளையை நீங்களும் பெத்தா என்னப்பானு கேளுடா" என்று பேரனுக்குச் சொல்லிக் கொடுத்தார் முத்துக்கருப்பர்.

இதைக் கேட்டதும் கண்ணப்பன் துணுக்குற்றுப்போனான். கண்ணா எவ்வளவு பெரிய தாக்குதல்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறாள் என்பதை அப்போதுதான் நிதர்சனமாகத் தெரிந்துகொண்டான்.

கண்ணா துக்கத்தைத் தாங்க முடியாமல் வீட்டின் பின்கட்டுக்கு விரைந்தாள். கண்ணப்பனும் அவளுக்கு ஆறுதல் சொல்லுவதற்காக கண்ணாவைப் பின்தொடர்ந்து சென்றான்.

எவ்வளவு சமாதானம் சொல்லியும் கண்ணாவின் அழுகை அடங்கவில்லை.

"இந்த வீட்டில் இதற்கு மேல் ஒரு விநாடி கூட இருக்க முடியாது" என்றாள் கண்ணா.

"கண்ணா, உன்னுடைய முடிவுக்கு நான் உனக்கு முன்னாடியே வந்து விட்டேன். ஆனால் எனக்குக் கொஞ்சம் அவகாசம் தேவைப்படுகிறது. அதை மட்டும் நீ எனக்கு அனுமதி! கண்ணா, என் பெற்றோர்கள் உன்னை மட்டும் பரிகசிக்கவில்லை. என்னையும் சேர்த்துத்தான் இழிவு படுத்துகிறார்கள். அதனால்தான் கொஞ்சம் அவகாசம் தேவை என்கிறேன்."

"பொறுத்துப் பொறுத்துத்தான் என் கன்னங்கள் நிரந்தரமாகக் கறை படிந்து விட்டதே! இன்னும் நான் பொறுத்தால் என் கண்களே அவிந்து போனால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை."

இந்த நேரத்தில் மீனா அங்கே வந்தாள்.

"அக்கா, இந்தப் பிரச்சினையில் நீங்கள் என்னைச் சம்பந்தப் படுத்திப் பேசுவது சரியில்லை."

இதற்கு கண்ணு ஏதாவது விபரீதமான பதிலைக் கூறி விடுவாளோ என்று நினைத்து கண்ணப்பனே குறுக்கிட்டு விட்டான்.

"மீனு, நம் வீட்டுப் பிரச்சினை உன்னைப் பற்றியோ, கண்ணுவைப் பற்றியோ எழுந்ததல்ல; வெளிப்படையாகச் சொல்லுவதானுல் அது என்னைச் சுற்றிவளைத்திருக்கும் பிரச்சினை. நான் தான் அதற்கு முடிவு எடுக்க வேண்டும். ஆனுல் மீனு நீ ஒன்றை மட்டும் மறந்து விடக்கூடாது. நீ இந்த வீட்டில் சிறிய மருமகளாக வருவதற்குக் கண்ணுதான் முக்கிய காரணம் என்பதை மட்டும் மறந்து விடாதே!"

மீனு வாயடைத்துப் போனுள். ஏனெனில் கண்ணப்பனும், மீனுவும் ஒரு நாள்கூட நேருக்கு நேராக நின்று பேசிக் கொண்டதில்லை. தன் கணவரோடு பிறந்த மூத்தவரை தமிழ்நாட்டுப் பெண்கள் அவ்வளவு உயர்வாக மதிப்பார்கள்.

நாட்கள் செல்லச் செல்ல கண்ணுவின் உள்ளம் மேலும் துயரத்திற்கு இலக்காகிவிட்டது. அந்த அனல் கண்ணப்பனையும் லேசாகச் சாடியது. எல்லாவற்றிற்கும் மனம் தான் காரணம் என்று சொல்லுவது வெறும் பேச்சல்ல. அது ஒரு தத்துவம்; பெரிய உண்மை. நமக்குப் பிடித்தமானவர்கள் பாதிக்கப்பட்டால் நமக்கு மனம் துடிக்கிறது. நமக்கு வேண்டாதவர்கள் சகிக்க முடியாதபடி துன்பப்பட்டால் கூட நம் மனம் தூக்கதிலிருந்து கண் திறக்க மறுத்து விடுகிறது.

"கண்ணு, குடும்பம் என்பது ஒரு குருவிக் கூடு மாதிரி. அதில் ஆயிரம் பின்னல்கள் இருக்கும் என்று நீ வந்த மறுதினமே சொன்னேனே இப்போது ஞாபகம் இருக்கிறதா?"

"நீங்கள் குருவிக்கூடு என்றுதானே சொன்னீர்கள்? இது பாம்புப் புற்ருக அல்லவா அத்தான் மாறி விட்டது?"

"கண்ணு, உன் மனத்தை ஆற்றுவதற்கு நான் தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்."

"எத்தனை நாளைக்குத்தான் மகாத்மா சொன்னுர் மறைமலை

சொன்ஞர் என்ற உபன்யாசங்களை நான் தாங்கிக் கொண்டிருப் பது?''

''கண்ணு, நீ ஒரு சுத்தக் கர்நாடகம்! தத்துவங்களே ஒரு மன ஆறுதலுக்காக சிருஷ்டிக்கப் பட்டவைதான். அவைகளில் சிலது மனதுக்கு இதம் அளிக்கலாம். ஏதாவது உன் மனதைத் தொடுகிறதா என்றுதான் தொடர்ந்து எதையாவது சொல்லிக் கொண்டே இருக்கிறேன். ஆனால் எதுவும் உன் நெஞ்சை நெருங்கக் கூட முடியவில்லை.''

''இப்படியே பேசிப்பேசி காலத்தை ஓட்டி விடலாம் என்ற எண்ணமா?''

''பொறு கண்ணு! உன்னையும் அழைத்துக்கொண்டு எர்ணு குளத்திற்குப் போய் குடியேறுவதாக முடிவு செய்து விட்டேன். அப்பாவிடம் நேற்று இரவே பேசிவிட்டேன். வருகிற வெள்ளிக் கிழமை நாம் எர்ணுகுளம் போகிறோம்.

''எர்ணுகுளமா? அது எங்கே இருக்கிறது?'' விகர்ப்பமில்லா மல் கேட்டாள் கண்ணு. அவள் படிக்காதவள். கோயிலூர் எலி மெண்டரி ஸ்கூலோடு படிப்பு முடிந்து விட்டது.

''எர்ணுகுளம் மலையாளத்தில் இருக்கிறது; ஏன், உனக்கு யானைகள் என்ருல் பயமா?'' கண்ணுவிடம் கொஞ்சலாகப் பேசி ஞன் கண்ணப்பன்.

''இந்த வீட்டை விட்டு எங்கே போனுலும் எனக்கு மகிழ்ச்சி தான். ஆனுல் மலையாளத்தில் போய் நான் யாரோடு பேசுவது என்றுதான் யோசனை!''

''மாமியார் ஊமையாக இருந்தால் மருமகளுக்கு சந்தோ ஷம்; மனைவி செவிடாக இருந்தால் புருஷனுக்குச் சந்தோஷம்! இப்போது நாம் போகிற இடம் நம் இரண்டு பேருக்குமே நிம் மதியைத் தரும், கவலைப்படாதே!'' என்று அவளைத் தயார்ப் படுத்தி விட்டான் கண்ணப்பன்.

கண்ணப்பனும் கண்ணுவும் எர்ணுகுளத்திற்கே குடியேறப் போகும் சேதி கோயிலூர் முழுவதும் பரவியது.

"ஆனோ, பெண்ணோ—ஒரு பிள்ளையைப் பெற்றுக்கொண்டு தான் இந்த வீட்டுப்படி ஏறவேண்டும் என்று முத்துக்கருப்பர் கண்டிப்பாகச் சொல்லி கண்ணுத்தாளை வெளியே தள்ளிவிட்டா ராம்! என்ன இருந்தாலும் பெரியவர் இப்படிச் செய்திருக்கக் கூடாது. பிள்ளை பிறக்கவில்லை என்பதற்காக வீட்டுக்கு மூத்த வளை வீட்டைவிட்டுத் துரத்துவது நம் ஜாதிக்கு பழக்கமா? முத்துக்கருப்பருக்கு எப்போதும் ஈவுஇரக்கம் இருந்ததே இல்லை. இந்தத் தகவல் தூத்துக்குடி உப்பளத்திலே வேலை பார்க்கும் சின்னவன் சொக்கநாதனுக்குக்கூடத் தெரியாதாம்! அண்ணன் தம்பிகள் என்றால் ராமர் — லெட்சுமணர் மாதிரி அவ்வளவு ஒற்றுமை!"

கண்ணப்பன் எர்ணுகுளத்திற்குப் புறப்படும் முன்னரே இந்த ஊர்ப்பேச்சுக்கள் அவன் காதுக்கும் போய் விட்டன.

"அத்தான் ஊர் என்ன சொல்லுவது? நானேகூட அந்தச் சபதத்தோடுதான் இந்த வீட்டை விட்டு இறங்குவதாக இருக்கிறேன்."

"கண்ணு!"

"என்னுடைய சபதத்தை நான் மாற்றிக் கொள்வதாக இல்லை! இது உங்கள் மீது சத்தியம்!" கண்ணுவின் கண்களிலிருந்து கண்ணீர் உதிர்ந்தது.

கண்ணப்பன் ஊரிலே உத்தமன் என்று பெயர் எடுத்தவன். ஒரு அழகான பெண்ணுக்குக் கணவன் என்ற பெருமை வேறு அவனுக்கு இருந்தது.

கண்ணப்பன் சின்னப்பிள்ளையிலிருந்தே கண்டியில் வளர்ந்தவன். கண்டியில் அவர்களுக்கு வட்டிக்கடை இருந்தது. சிங்கப்பூர் கடைக்குப் போகப் பிடித்தமில்லாமல் கண்டிக்கடைக்கே போய் வந்து கொண்டிருந்தான்.

கண்டியில் கொஞ்சநாள், தமிழ்ச் சங்கத் தலைவனாக இருந்தான். தமிழ், தமிழன் என்றால் கண்ணப்பனுக்கு உயிர்தான். வாரம்தோறும் தமிழில் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்வான்.

கட்டுரைப் போட்டிகளையும் வைப்பான். இப்படியே கண்ணப்ப னின் தமிழார்வம் வளர்ந்தது.

கண்ணப்பனுக்கு பெற்றோர்கள் மீது தணியாத மரியாதை உண்டு. அதைப்போலவேதான் அவன் தம்பி சொக்கநாதனிடத் திலும்! ஊருக்கு வந்தால் சின்ன விஷயத்தைக்கூடத் தம்பியைக் கலக்காமல் செய்ய மாட்டான்.

கண்ணு அந்த ஊரிலேயே அழகான பெண். அவளுடைய முழுப்பெயர் கண்ணுத்தாள். அந்த ஊர்க்கோயிலில் குடிகொண் டிருக்கும் தெய்வத்தின் பெயரும் கண்ணுத்தாள்தான். கோயி லூரில் பெரும்பகுதி மூத்த பெண்களுக்குக் கண்ணுத்தாள் என் றும், மூத்த பையன்களுக்குக் கண்ணப்பன் என்றும் தான் பெயர் சூட்டுவார்கள். திருமணத்திற்குப் பிறகு தான் கண்ணப்பன் கண்ணுத்தாளை 'கண்ணு' என்று செல்லமாக அழைக்கத் தொடங்கினன்.

கண்ணப்பனுக்கும், கண்ணுத்தாளுக்கும் நிச்சயமாயிற்று. கண்ணப்பனைக் கேட்காமலே முத்துக் கருப்பர் கண்ணுத்தாளை நிச்சயித்து விட்டுக் கடிதம் எழுதினர். ஏனென்ருல் கண்ணுத்தா ளுக்கு அவ்வளவு போட்டி இருந்தது.

கண்ணப்பன் தமிழகம் திரும்பி கண்ணுத்தாளை மணந்து கொண்டான். அதற்குப் பிறகு கண்ணப்பன் கண்டிக்குப் போக வில்லை, ஆனால் அங்கே பழகிய தேகப்பயிற்சியும், அங்கே ஏற் பட்ட தமிழ்ப்பற்றும் கண்ணப்பன் உடம்போடு ஒட்டிய அவயங் களாகி விட்டன.

ஊருக்கு வந்ததும் ஊரின் ஒரு முனையில் மறைமலை அடிகள் மன்றம் அமைத்தான். மன்றத்தின் கொள்ளையில் ஒரு தேகப் பயிற்சி சாலையையும் நிறுவிக்கொண்டான்.

கண்ணுத்தாளும், கண்ணப்பனும் எர்ணுகுளத்திற்குப் பயணமானர்கள். கண்ணப்பன் எர்ணுகுளத்தில் ஒரு 'பைனன் சிங் கம்பெனி'யைத் தொடங்கினன். அங்கு அவன் என்னதான் தொழில் நடத்தினலும் அங்கும் அவனது தமிழ்ப்பற்று அவனை

விட்டு நீங்கவில்லை. கொச்சித் துறைமுகத்தில் வேலை பார்க்கும் தமிழர்களிடத்தில் அவன் 'கொடுக்கல் வாங்கல்' பண்ணிக் கொண்டே தமிழ்ப் பணியிலும் ஈடுபட்டான். நாளடைவில் துறைமுகத் தமிழர்களின் தலைவனுகி விட்டான் கண்ணப்பன். கொச்சித் துறைமுகத் தமிழர்கள் மத்தியில் எழும் குடும்பச் சண்டைகள் முதல் பெரிய தகராறுகள் வரை கண்ணப்பன் தலையீடு தேவைப்பட்டது. கண்ணப்பன், காலக்கிரமத்தில் தமிழர்களின் அன்பால் 'கண்ணப்பர்' ஆகிவிட்டான். கண்ணப்பர் இங்கு இருக்கும் வரை மலையாளத் தமிழர்கள் மத்தியில் ஒற்றுமை குறையாது என்ற நம்பிக்கை கொச்சியில் ஒவ்வொரு தமிழனின் உள்ளத்திலும் வேரூன்றி இருந்தது.

புகழ் இருக்கிறதே அது இலக்கியத்தில் வரும் காதலைப் போன்றது. அரசகுமாரியின் ஆசை ஆண்டியைத் தேடி அலையும்; பிரபு வீட்டுப்பிள்ளை பிச்சைக்காரியைச் சுற்றி வட்டமிடுவான். அதைப் போலத் தான் புகழும்! புகழை விரும்பிச் செயல்படுவோருக்கு அது கிட்டாது. புகழ் யாரை விரும்புகிறதோ, அது அவனைத் தேடி அலைந்துகொண்டிருக்கும். கண்ணப்பன் கதையும் அப்படித்தான். அவன் அங்கு பைனுன்சிங் கம்பெனி வைக்கப் போனுன். அங்கே 'தலைவர்' பதவி அவன் காலடியில் காத்துக் கிடந்தது.

கண்ணுத்தாளுக்கு இவையெல்லாம் பெரிதாகப் படவில்லை. அவளுக்கு அவள் விடுத்து வந்த சபதம் தான் அவள் மனக்கண் முன் வந்து படமெடுத்து ஆடிக்கொண்டே இருந்தது. வட்டித் தொழிலில் போட்ட மூலதனம் முறையாகத் திரும்பவில்லையே என்ற கவலையை விட வயிற்றில் குழந்தை உருவாகவில்லையே என்ற கவலைதான் அவள் உள்ளத்தில் மேலோங்கி நின்றது.

"கண்ணு!"

"இருக்கிறேன்; நான் எங்கே போகப் போகிறேன்".

"துறைமுகத்திலிருந்து வேறு யாராவது வந்தார்களா?"

"இரண்டு பேர் வந்து வட்டிப்பணத்தைக் கட்டிவிட்டுப் போனுர்கள்!"

"நான் அதையா கேட்டேன்? யாராவது தமிழ்ச்சங்கம் சம்பந்தமாக வந்தார்களா என்று கேட்கிறேன்."

இது கண்ணுத்தாளின் மனதைச் சுட்டது.

"என்னங்க நீங்களும் தொழிலைக்கவனிக்காமல் இப்படியே அலைந்தால் கம்பெனி என்ன ஆகும்?"

"நீ சொல்லுவதும் உண்மைதான்; அதற்காக அதிலேயே மூழ்கிவிட முடியுமா? எனக்கு மட்டும் நான் இதைச் சொல்லிக் கொள்ளவில்லை. உனக்கும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். நீயும் வேலை இல்லாத நேரத்தில் தமிழர் வீடுகளுக்குப் போய் வரலாம்."

"எனக்கு வெளியில் போக ஆசைதான். ஆனால் போய் விட்டு வந்ததும் வீட்டில் தூக்கம் வராமல் நான் தவிக்கிறேன்."

"அது என்ன அப்படி ஒரு வியாதி?"

"குழந்தைகளைக் கண்டாலே எனக்கு மயக்கம் வந்து விடுகிறது! தலை சுற்றுகிறது; மகாலட்சுமி போல் இருக்கிறாய்; பகவான் உனக்கு ஒரு குழந்தையைக் கொடுக்காமல் இப்படிச் சோதிக்கிறானே என்று வேறு கேட்கிறார்கள். அது ஒரு பக்கம் என் நெஞ்சைத் துளைக்கிறது."

கண்ணப்பன் சிரித்தான்.

"என்னத்தான் சிரிக்கிறீர்கள்! நான் சொல்லுவது உங்களுக்கு வேடிக்கையாக இருக்கிறதா?"

"இல்லை கண்ணு! உன் பேச்சு ஒரு அறிஞனின் தத்துவத்தை எனக்கு நினைவு படுத்துகிறது. ஏழைகளுக்கும் வைரத்திற்கும் ஏன் பகை வந்தது தெரியுமா? ஏழைகளுக்கு அது கிடைக்காததால் அவன் வைரத்தைப் பார்த்துக் கோபப்பட ஆரம்பித்தான் என்று அந்த அறிஞர் கூறியிருக்கிறார்."

இந்த நேரத்தில் வாசல் கதவை யாரோ தட்டினார்கள்.

கண்ணுத்தாள் கதவைத் திறந்தாள். தபால்காரன் ஒரு கடிதத்தைப் போட்டு விட்டுப் போனான். அந்தக் கடிதம் கண்ணுத்தாளுக்கு அவள் தகப்பனார் எழுதியது.

"கண்ணு என்ன கடிதம் அது?"

"உங்கள் மாமனுர் எழுதியிருக்கிறுர். என்னஎழுதியிருப்பார் என்று உங்களுக்குத் தான் தெரியுமே! அவர் கவலே அவருக்கு!"

"உனக்கு வளே காப்பு வைக்க எனக்கு வாய்ப்பில்லாமல் போய் விட்டதே என்று எழுதியிருக்கிறுரா கண்ணு?"

"அதுதான் சொல்லி விட்டீர்களே! அதே தான்!"

"நாட்டிலே பிள்ளேகளுக்கா பஞ்சம்! எத்தனேயோ பேர் பிள்ளேகளே ஏராளமாக பெற்றுப் போட்டு விட்டுத் தத்தளித்துக் கொண்டிருக்கிறுர்கள். அவைகளில் நாம் ஒன்றை எடுத்துக் கொண்டால் போகிறது! இதற்கு ஏன் கப்பல் மூழ்கி விட்டதைப் போல் கண்களேக் கசக்கிக் கொண்டே இருக்க வேண்டும்?"

"ஊரார் பிள்ளேயை எடுத்து வளர்த்து விடலாம்; அதை ஊர் ஒப்புக் கொள்ளுமா? உங்களுக்கும் எனக்கும் உள்ள அவப் பெயர் தான் போய்விடுமா?"

"ஊர் இதுவரை எடுத்தவுடன் எதையாவது ஒப்புக்கொண்டிருக்கிறதா? அதிலும் சொந்த ஊர்—பிறந்த ஊர் எதையாவது பெருந்தன்மையோடு ஒப்புக் கொண்டதாகச் சரித்திரம் உண்டா? கஷ்டப்பட்டு ஒருவன் பணக்காரனுகி விட்டால் அவனேக் கள்ள நோட்டுக்காரன் என்பார்கள். உண்மையிலேயே ஒருவன் கள்ளநோட்டின் மூலம் பணக்காரனுகியிருப்பான். அவனே இந்திரன் சந்திரன் என்று வர்ணிப்பார்கள். கண்ணு நான் சொல்லுவதை நம்பு. ஊருக்காக வாழ்ந்தவர்கள் யாரும் இறுதிவரை நிம்மதியாக இருந்ததே இல்லே. உனக்கு குழந்தை வேண்டும்; அதை நீ கொஞ்சி மகிழவேண்டும். எனக்கும் புரியாமலில்லே. குழந்தைகள் பூக்கள் மாதிரி. அவை எந்தத் தோட்டத்தில் மலர்ந்தாலும் அவைகளின் மனம் மாறுது. கொள்ளேயிலே பூக்கும் மல்லிகைக்கும் கோயில் நந்தவனத்திலே பூக்கும் மல்லிகைக்கும் வித்தியாசம் உண்டா? ஏழை வீட்டுக் குழந்தை மூக்கிலே சளியை வடித்துக்கொண்டு தெருவிலே விளேயாடும்; பணக்கார வீட்டுக் குழந்தை பளிங்குத் தரையில் ரப்பர் பொம்மைகளே வைத்து விளேயாடும்! ஆனுல் இரண்டு குழந்தைகளின் முகங்களிலே கூத்

தாடும் மகிழ்ச்சிப்பெருக்கு ஒரே மாதிரியானதுதான்'' கண்ணப்பன் இப்படி அடுக்கிக் கொண்டே போனுன்.

''அத்தான் நீங்கள் எதைத்தான் சொல்லுங்கள்; அதெல்லாம் படிக்கத்தான் பயன்படுமே தவிர நடைமுறைக்கு ஒத்து வராது.''

''எனக்கும் பொழுது போக வேண்டும்; உனக்கும் கவலே ஒழிய வேண்டும். கண்ணு நீ இப்போது என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிருய்? என்ன இருந்தாலும் வளர்ப்புக் குழந்தை நம் வயிற்றில் பிறக்கும் குழந்தைக்கு ஈடாகுமா என்கிருயா அல்லது 'அவள் மலடி' என்ற அவச்சொல்லே அழித்துக் கொள்வதற்காகக் குழந்தை கேட்கிருயா?

''ஆண் பிள்ளேகளேப் போல பெண்கள் எல்லாவற்றையும் வெளிப்படையாகப் பேசிவிடமாட்டார்கள். அப்படிப் பேசவும் கூடாது. ஆண்கள் கலகலப்பாகப் பேசினுல் அவர்களே விஷயமில்லாதவர்கள் என்பார்கள். பெண்களும் அப்படியே பேசினுல் 'இவள் சுத்த வெகுளி' என்று இகழ்ந்து தள்ளிவிடுவார்கள். புருஷனுக்குத் தெரியாத ரகசியங்கள் கூட ஒரு பெண்ணிடம் இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான்அவள் பெண். விரித்த புகையிலேயும், சிரித்த பெண்ணும் ஆகாது என்று சொன்னது எதற்காக?'' கண்ணுத்தாளும் விட்டபாடில்லே.

''அது சரி......இன்றைக்கென்ன இவ்வளவு தத்துவார்த்தங்களேப் பொழிந்து தள்ளிக் கொண்டிருக்கிருய்?''

''இது நீங்கள் படித்துவிட்டுப் பேசும் வேதாந்தமல்ல; உண்மைகளே நான் சொல்லுகிறேன். ஒரு பெண்—'அதுவும் குழந்தைப் பேற்றுக்காக தவம் கிடக்கும் ஒரு பெண் என்ன நினைக்கிருள், அவள் மனம் என்ன பாடுபடுகிறது என்பதை புருஷன் தெரிந்துகொள்ள வேண்டாமா?''

''நீ உன் வாதத்தில் பிடிகொடுத்து விட்டாய்! புருஷனுக்குத் தெரியாத ரகசியம் ஒரு பெண்ணிடம் இருக்கலாம் என்கிற போது ஊருக்குத் தெரியாத ரகசியம் ஒரே குடும்பத்திற்குள் இருப்பது தவறில்லேயே?''

"புருஷனுக்கும், பெண்ஜாதிக்குமிடையே எவ்வளவோ ரகசியங்கள் இருக்கலாம். அதெல்லாம் ஊருக்குத் தெரிந்தால் குடும்பம் உருப்படுமா?"

அன்று சனிக்கிழமை. துறைமுகத் தொழிலாளர்களுக்கு அன்றுதான் சம்பளநாள். கண்ணப்பன் வட்டிப் பணத்தை வசூலிப்பதற்காகப் புறப்பட்டுப் போனான். வழியில் அவன் நினைவெல்லாம் கண்ணாத்தாளைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அவளுடைய கலங்கிய விழிகளில் துறைமுகப்பட்டணமே மிதப்பது போல அவனுக்குத் தோன்றியது. ஓவியம் போன்ற தன் மனைவி குழந்தையில்லாக் கவலையால் ஒட்டி உலர்ந்து சருகாகி விடுவாளோ என்ற துக்கம் ஒருபக்கம் அவனை அழுத்திக்கொண்டிருந்தது.

மனிதன் படுத்துக்கொண்டு சிந்திப்பதைவிட, நடந்துகொண்டு சிந்திப்பதையே அதிகம் விரும்புகிறான்; அதில்தான் அவன் சுகமும் காண்கிறான். கண்ணப்பன் தூரம் தெரியாமல் போய்க்கொண்டே இருந்தான். அப்போது கண்களில் ஒரு டீஸ்டாலின் போர்டு தென்பட்டது. அதில் 'கொரியன் டீ ஸ்டால்' என்று எழுதப்பட்டிருந்தது. கண்ணப்பனுக்குப் பழைய நினைவுகள் திடீரென்று பிரசவித்து விட்டன.

கண்ணப்பன் கண்டியில் இருந்தபோது அவனோடு நெருங்கிப்பழகிய ஒரு நண்பனின் பெயர் கொரியன். அவன் திருவனந்தபுரத்தைச் சேர்ந்தவன்; கண்டியில் டாக்டராக இருந்துவிட்டு கண்ணப்பனுக்கு முன்பே சொந்த ஊருக்குத் திரும்பிவிட்டான் தென்னிந்தியர்கள் என்ற முறையில் இருவரும் உற்ற நண்பர்களாகிவிட்டார்கள். அதுமட்டுமல்ல; இருவரும் ஒரே தேகப்பயிற்சி சாலையில் தேகப் பயிற்சி எடுத்தவர்கள். அவர்களின் நட்பே கர்லாக் கட்டைகளுக்கு மத்தியில்தான் உதயமானது.

கண்ணப்பனுக்கு டாக்டர் கொரியனைப் பார்க்க பெரிதும் ஆசை! அவனைச் சந்தித்து தனது மனக் கவலையைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்று துடித்தான். கடிதம் எழுதினால் அது போய்ச்சேருமா, சேராதா என்று கூட யோசிக்காமல் மறுநாளே

ஒரு கடிதத்தை எழுதிப்போட்டான். திருவனந்தபுரம் ஒருபெரிய நகரம்; மொட்டையாக 'கொரியன்' என்று மட்டும் எழுதிப் போட்டால் கிடைத்து விடுமா? கொரியன் என்ன அரசியல் வாதியா, பெயரைப் பார்த்ததும் கடிதம் வீடு போய்ச் சேர் வதற்கு?

பதினைந்து நாட்கள் வரை பதில் இல்லை. திடீரென்று ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று கண்ணப்பன் திருவனந்தபுரத்திற்குப் புறப்பட்டுப் போனான். அங்கு கொரியன் என்ற பெயரில் பல டாக்டர்கள்இருந்தார்கள். எல்லோரையும் பார்த்தான். உருவம் மட்டுப் படவில்லை. இறுதியில் கண்ணப்பன் விரக்தி யடைந்து எர்ணுகுளத்திற்குத் திரும்பும் போது அவனுடைய நண்பன் டாக்டர் கொரியனைப்பற்றி வியப்புறும் செய்தி கிடைத்தது. திருவிதாங்கூர் மன்னரின் டாக்டரே கண்ணப்பனின் நண்பன் கொரியன்தான்என்பதை அறிந்து அளவில்லா மகிழ்ச்சியடைந்து அவனை நேரில் சென்று பார்த்துவிட நடந்தான்.

கொரியன் வயதில் இளைஞன். கண்ணப்பன் வயதுதான் அவனுக்கும். பழைய பாணியில் கேரள நாட்டு முறையில் கட் டப்பட்ட அரண்மனை போன்ற ஒரு மாளிகையில் கொரியன் குடியிருந்தான். சுவரில் பல படங்கள் மாட்டப்பட்டிருந்தன. கண்ணப்பன் அவனைக் கண்டதும் கட்டித் தழுவி அணைத்துக் கொண்டான்.

"பத்தாண்டுகளுக்குப் பிறகு என் நினைவு உனக்கு எப்படி வந்தது?" கொரியன் பிரியத்தோடும், ஆச்சரியத்தோடும் கேட் டான்.

"எனக்குக் கூட அது ஒரு சிதறலான நினைவாகத்தான் தோன்றியது. தெருவில் போய்க்கொண்டே இருந்தேன். கொரி யன் டீ ஸ்டால் என்ற ஒரு போர்டைப் பார்த்தேன். அது முதல் உன்னை வலை போட்டுத் தேடிக்கொண்டிருக்கிறேன்."

"உன் தமிழார்வமெல்லாம் எப்படி இருக்கிறது?"

"தமிழர்களைப் பொறுத்தமட்டில் பண ஆசையும், தமி ழாசையும் ஒன்றுதான். விட்டுக்கொடுக்க மாட்டார்கள்!"

“குழந்தைகள்?”

“உனக்கு எத்தனை குழந்தைகள்? முதலில் நீ சொல்லு!”

வைத்தியம் பார்க்க வரும் பிள்ளைகள் தான் என் பிள்ளைகள்!” —கொரியன் பெருமூச்சோடு இப்படிச் சொன்னான்.

“டாக்டர்! என் கதிதானா உன் கதியும்! நான் எதிர்ப்பார்க்கவில்லை கொரியன். நான் உன்னைச் சந்திக்க வந்ததே இந்தக் கவலையைத் தீர்த்துக் கொள்ள ஏதாவது மார்க்கமுண்டா என்று கேட்டுத் தெரிந்துகொண்டு போகத்தான்!” —கண்ணப்பனுக்கு வார்த்தைகள் சரியாக வரவில்லை.

“என் நிலைமை உனக்கு நேர்ந்துவிடக்கூடாது என்று நான் இறைவனைப் பிரார்த்திக்கிறேன். சில நேரங்களில் பிரார்த்தனைகளும் பயனற்றுப் போய் விடுவதுண்டு! என்னைப் பொறுத்த வரையில் இனி நான் தனி மரம்தான். என் மனதில் இருந்த ஆசைகள் இற்றுத் தூளாகி விட்டன. கடவுள் எனக்கு பனைமரத்தைப் போல் நெடிய ஆயுளைக் கொடுத்தால் நான் ஆலமரத்து நிழலைப் போல் பலருக்கு பயன்படுவேன்!”

“இந்த விஷயம் உன் மனைவிக்குத் தெரிந்தால் அவர்கள் வேதனைப்பட மாட்டார்களா?”

“எப்படியோ அவளுக்குத் தெரிந்துவிட்டது. அதனால் அவள் கவலைப்பட்டுக் கவலைப்பட்டு எலும்புக்கூடாகி காற்றோடு கலந்து விட்டாள் கண்ணப்பா!”

“எப்போது இதெல்லாம் நடந்தது? எப்படி அவர்களுக்குத் தெரிந்தது?”

“புருஷனுக்கும், மனைவிக்குமிடையே கூட சில ரகசியங்கள் இருக்க வேண்டும் என்பதை என் மனைவியின் மரணத்தின்போது தான் உணர்ந்தேன். திருமணமாகி மூன்றாண்டுகளுக்குப் பிறகு என் உள்ளத்தில் சிறு அருவருப்பு ஏற்பட்டு கேரளத்திலுள்ள ஒரு பெரிய டாக்டரிடம் நானும் என் மனைவியும் ரத்தப்பரிசோதனை செய்து கொண்டோம். பதினைந்து நாட்கள் வரை அவரிடமிருந்து எனக்கு எந்த ‘ரிசல்ட்டும்’ வரவில்லை. நான்

ஊரில் இல்லாத நேரத்தில் திடீரென்று அவரிடமிருந்து 'ரிசல்ட்' வந்துவிட்டது. அதில் அவர் 'இனிமேல் உனக்குப் புத்திர பாக்கியம் இல்லை! இந்த ரகசியம் உன் மனைவிக்குத் தெரியக்கூடாது'' என்று எழுதி விட்டார். நான் இல்லாத நேரத்தில் அந்தக் கடிதம் வந்ததால் என் மனைவி அந்தக் கடிதத்தை உடைத்துப் பார்த்து விட்டாள். அந்தக் கடிதமே அவளுக்கு எமனாக அமைந்து விட்டது.

அவளை எவ்வளவோ தேற்றினேன். ''எனக்கு இந்த வயதிலேயே, வாழ்க்கையின் எல்லை தெரிந்துவிட்டதே இனிமேல் நான் ஏன் வாழவேண்டும்'' என்று அவள் என்னைக் கேட்டது என் நெஞ்சில் இன்றும் கல் வெட்டைப்போல் பதிந்து கிடக்கிறது. அது மட்டுமா அவள் கேட்டாள்? ''ஒரு புருஷனின் இரத்தத்தில் கருப்பொருள் இல்லை என்று மனைவிக்குத் தெரிந்து விட்டால் அவளுக்கு புருஷனிடத்தில் மரியாதைக் குறைவும், தாழ்வு மனப்பான்மையும் எப்படி ஏற்படாமல் போகும்? அந்தப் பாவத்திற்கு ஆளாக நான் விரும்பவில்லை'' என்றும் என் மனைவி எனக்கு போதனைகளைக் கூறினாள். மிஸ்டர் கண்ணப்பன் நான் எத்தனை நோயாளிகளைக் காப்பற்றி அவர்களைச் சிரிக்க வைக்கிறேன். என்னைச் சிரிக்க வைக்க இறைவன் மறந்து விட்டான்.''

''நான் சிரிக்காவிட்டாலும் பரவாயில்லை. என்னைத் தவிர வேறு தெய்வம் இல்லை என்று எண்ணி வாழ்ந்த என் மனைவியை இழந்து நான் தினசரி அழுதுகொண்டிருக்கிறேன்!'' கொரியன் விவரம் அறியாத குழந்தையைப்போல் தேம்பினான்.

''பெரிய டாக்டர் எழுதிய கடிதத்தை உன் மனைவி படிக்காதிருந்தால் அவள் இந்த முடிவுக்கு வந்திருக்க மாட்டாள் அல்லவா?''

''நிச்சயமாக வந்திருக்கவே மாட்டாள். புருஷனும், மனைவியும் எவ்வளவுதான் பாசமுள்ளவர்களாக இருந்தாலும் சில விஷயங்களை மனைவியிடம் வடிகட்டித்தான் சொல்ல வேண்டும். மனித வாழ்க்கைக்கு - அதுவும் ஒரு குடும்ப வாழ்க்கைக்கு - என் வாழ்க்கைக்கு ஒரு அபாய அறிவிப்பு'' என்றான் கொரியன்.

கண்ணப்பன் நெற்றியைச் சுளித்தான்.

"நீ ஏன் நெற்றியைச் சுளிக்கிறாய்? உனக்கும் அப்படி இருக்குமோ என்ற அச்சம் தானே?" என்று வினவினான் கொரியன்.

"அப்படி ஒரு பீதி எனக்கு! உனக்கு ஏதாவது காரணம் சொன்னாரா டாக்டர்?"

"நானே நேரில் சென்று கேட்ட பின்புதான் அவர் காரணத்தைச் சொன்னார். எனது ரத்தம் அடியோடு முறிந்து போய் விட்டதாம். நான் அதிர்ச்சியடைந்துவிட்டேன். ஒரு மனிதனின் உடலுறுப்புக்கள் ஒரு விமானத்தின் எஞ்சினை விட நுணுக்கமானவை என்கிறார் அந்த டாக்டர். என்னுடைய ரத்தம், எனது திருமணத்திற்கு முன்பே முறிந்து விட்டது என்கிறார் அவர். எனக்கு அப்போதே விவரம் தெரிந்திருந்தால் நான் திருமணமே செய்துகொண்டிருக்க மாட்டேன். நம் நாட்டில் எல்லோரும், திருமணத்திற்குப் பிறகுதான் வாழ்க்கையே துவங்குகிறது என்று நினைக்கிறார்கள். அதனால் விளைந்த வினையைப் பார்த்தாயா?"

கண்ணப்பன் பதில் சொல்ல முடியாமல் திணறினான். அவனுக்கு குடை ராட்டினத்தில் உட்கார்ந்து சுற்றுவது போலிருந்தது.

"சிங்கம் போலச் சீறிப் பாயக்கூடியவன். இன்று எப்படியோ போய் விட்டானே! அவன் பேச்சில் இருந்த கம்பீரம், அவன் குரலில் இருந்த மிடுக்கு — எல்லாமே இருந்த தடம் கூடத் தெரியாமல் அழிந்து விட்டதே?" என்று கண்ணப்பன் மனதுக்குள்ளேயே நினைத்துக் கொண்டான்.

"நீயும் அந்த டாக்டரிடம் சோதித்துக்கொண்டால் நல்லது என்று நினைக்கிறேன். முடிவு செய்ய வேண்டியது உன் உரிமை!"

"எனக்கும் அதுதான் முடிவாக இருந்தால் என்ன செய்வது கொரியன்?" கண்ணப்பன் நடுக்கத்துடன் கேட்டான்.

"முடிவு அது தான் என்றால் அதை எப்படி மாற்ற முடியும்? அதைத்தான் விதி என்றும், தலையெழுத்து என்றும் மதவாதிகள் கூறுகிறார்கள். என் தலையெழுத்து இப்படி! அதற்காக நான் சனியும் புதனும் எண்ணெய் தேய்த்துக் குளித்திருந்தால் அந்தத் தலையெழுத்து அழிந்து போயிருக்குமா?" கொரியன் இப்படி

பேசிக்கொண்டிருக்கும் போதே கண்ணப்பனின் உள்ளம் கண்ணுத்தாளைத் தேடி ஓடியது.

"அப்படியானால் அடுத்த ஞாயிற்றுக்கிழமை என் மனைவியையும் அழைத்துக்கொண்டு வந்து விடட்டுமா?"

"தேவை இல்லை என்பது என் கருத்து. உன் மனைவிக்குத் தெரியாமலே நீ சோதித்துக்கொள்வதுதான் உன் எதிர்காலத்திற்கும் பாதுகாப்பு. உனக்கு 'ஆல் ரைட்' என்று டாக்டர் சொல்லிவிட்டால் அதற்குப் பிறகு வேண்டுமானால் உன் மனைவியைச் சோதிக்கலாம். இந்த விஷயம் உன் மனைவிக்குத் துளியும் தெரியக்கூடாது. ஏனென்றால் பெண்கள் பிறவியில்தான் கோழைகள்! வாழ்க்கையில் முடிவெடுப்பதில் வேகமானவர்கள். தவறு யார் பக்கம் என்று யோசிக்காமலே தற்கொலைக்கும் தயராகி விடுவார்கள். சாவது எளிது, ஆனால் சாவை நினைப்பதுதான் பயங்கரமானது — என்ற தத்துவங்களெல்லாம் தென்னாட்டுப் பெண்களிடம் தோற்றுப்போய்விட்டன" டாக்டர் கொரியன் தன் மனைவியின் அகால மரணத்தின் மூலம் பெண்களைப்பற்றி ஒரு தீர்க்கமான ஆராய்ச்சியையே செய்து முடித்தவரைப் போலப் பேசினான்.

கண்ணப்பன் சோதனைக்குத் தயாரானான். சோதனைக்குப் பிறகு அந்தப் பெரிய டாக்டர் பல கேள்விகளைக் கண்ணப்பனிடம் கேட்டார்.

"உங்களுடைய பால்ய காலத்தை எங்கே கழித்தீர்கள்?"

"கண்டியில் பத்து வருஷங்கள் இருந்தேன்!"

"அங்கே உங்களுக்கு என்ன பொழுதுபோக்கு?"

"தமிழ்ப்பணி, தேகப்பயிற்சி, மல்யுத்தம்- இவைகள்தான் எனது பொழுதுபோக்குப் பணிகள்!"

"அந்தக் காலங்களில் நீங்கள் ஏதாவது மருந்து, மாத்திரைகள் சாப்பிட்டதுண்டா!"

"வடஇந்தியாவில் இருந்து வந்த புகழ்பெற்ற அந்தக் குஸ்தி

பயில்வானிடம் நாங்கள் மல்யுத்தம் பயின்றோம். அவர் எங்கள் உடல் வளத்திற்காக தினசரி கொஞ்சம் லேகியம் கொடுப்பார். அப்படியே நாங்கள் ஆறு மாதங்கள் சாப்பிட்டோம்."

பெரிய டாக்டர் புருவத்தை நெறித்தார். பிறகு டாக்டர் கொரியனை நிமிர்ந்து பார்த்தார்.

"மிஸ்டர் கண்ணப்பன், அந்த லேகியம் சாப்பிட்டபின் உங்கள் உடலில் ஏதாவது மாற்றம் தெரிந்ததா?"

"சதை இறுகியது. அது எங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. உடல் பளபளத்தது. அது எங்களுக்கு ஒரு விதமான உற்சாகத்தை வழங்கியது!"

இதைக் கேட்டதும் பெரிய டாக்டர் உதடுகள் விரிய லேசாகச் சிரித்துக் கொண்டார்.

"என்ன டாக்டர் நீங்களாகச் சிரித்துக் கொள்கிறீர்கள்?" கொரியன் உரிமையோடு கேட்டான்.

"ஒன்றும் வித்தியாசம் தெரியவில்லையே மிஸ்டர் கொரியன்!"

"கண்ணப்பன் லக்கிமேன்! இல்லையா டாக்டர்!"

"நான் அப்படிச் சொல்லவில்லை. அப்படி இருந்தால் நான் ஏன் சிரிக்க வேண்டும்? உங்கள் ரத்தத்திற்கும் இவருடைய ரத்தத்திற்கும் ஒரு சதவிகிதம் கூட வித்தியாசம் இல்லாமல் இருக்கிறதே! கூடப்பிறந்த சகோதரர்களுக்குக்கூட இப்படி ஒரு ஒற்றுமையைப் பார்க்க முடியாது!"

இதைக் கேட்டதும் கண்ணப்பனுக்கு முகமெல்லாம் வியர்த்துவிட்டது. அவன் மயக்க நிலையை அடைந்து விட்டான்.

"அப்படியானல் இவனுக்கும் புத்திர பாக்கியம் இருக்காது என்கிறீர்கள்! இல்லையா டாக்டர்!"

"ஆம்; இவரும் உன்னைப் போல் இருக்கவேண்டியவர்தான்.

ஆனால் இவரையாவது எச்சரிக்கையாக இருக்கச் சொல்லுங்கள். இந்த விஷயம் காற்றுவாக்கில்கூட இவர் மனைவிக்கு எட்டிவிடக் கூடாது. இதற்கு மாற்று மருந்து இன்னும் கண்டு பிடிக்கப்பட வில்லை'' பெரிய டாக்டர் ஒரு பெரிய கொலை வழக்கில் தீர்ப்புச் சொல்வதைப் போல் அறிவித்தார்.

## கேரயிலார்!

கண்ணப்பனின் தகப்பனார் முத்துக் கருப்பர் நிம்மதியற்றிருந்தார். ஊரார் பேச்சு அவர் நெஞ்சைத் துளைத்துக் கொண்டிருந்தது. "மூத்தவனை வீட்டை விட்டுத் துரத்தி விட்டு முண்டம் போல வீட்டிலே உட்கார்ந்திருக்காரே இவருக்கு இருதயமே இல்லையா?'' என்று பக்கத்து வீட்டுக்காரர்கள் கூட பேசத் தொடங்கி விட்டார்கள். ஒரு விழாவிற்கோ, கோயிலுக்கோ அவரால் மகிழ்ச்சியாகப் போய் வரமுடியவில்லை.

"திடீரென்று முத்துக் கருப்பர் கண்களை மூடி விட்டால் என்ன செய்வார்? கொள்ளி வைக்கவேண்டியவன் கொச்சியிலிருந்து வந்து தானே பிரேதத்தை எடுக்கவேண்டும்? அதற்குள் பிணம் நாறிப் போகாதா? மூத்தவன் இருக்க, இளையவன் கொள்ளி வைக்கலாமா?''

முத்துக்கருப்பர் உயிரோடு திடகாத்திரமாக இருக்கும் போதே அவரது பிரேதத்தைப்பற்றி ஊரார் பேசத் தொடங்கி விட்டார்கள். எவ்வளவோ தூற்றல்களைத் தாங்கிக் கொண்டு பழகப்பட்டவர் முத்துக்கருப்பர். மிகவும் கஷ்டப்பட்டு சிங்கப்பூருக்கு போய் இன்னொரு வீட்டில் கணக்கப் பிள்ளையாகச் சேர்ந்து, பின்பு தனிக்கடை வைத்து முன்னேறியவர். முதலில் யாரும் அவருக்கு பெண் கொடுக்க முன் வரவில்லை. குடியிருக்க வீடில்லாதவன், சம்பளத்திற்கு வேலை செய்பவன் என்றெல்லாம் அவரை இகழ்ந்தார்கள். அப்போதெல்லாம் சின்னவயதில் அந்தப் பேச்சுக்களை சவாலாக ஏற்றுக்கொண்ட முத்துக்கருப்பரால் இப்போது ஊரில் பேசப்படும் அவதூறுகளைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. கொச்சிக்குப் போய் எப்படியாவது கண்ணப்பனைக் கூட்டி வந்து விடுவது என்று முடிவு செய்து விட்டார்.

"இந்த நேரத்தில் நீங்கள் வெகுதூரம் பிரயாணம் செய்வது நல்லதுதானு?"

ஒரு முட்டுக் கட்டையைப் போட்டுப் பார்த்தாள் முத்துக் கருப்பரின் மனைவி.

"ஊரிலே தூற்றிக் கொண்டிருப்பது உன் காதுகளுக்குக் கேட்கவில்லையா? நீ ஒரு இருசியாம்! நான் ஒரு இரக்கமற்றவனும்! இந்த அவப்பெயரெல்லாம் நம் குடும்பத்திற்கு அவசியம் தானு??"

எதைத்தான் ஊரிலே பேசவில்லை? அதுவும் இந்த ஊர் மோசம்; மகாமோசம்?

"எது எப்படி வேண்டுமானுலும் ஆகட்டும். தலைப்பிள்ளையை கண்காணுத தேசத்திற்கு அனுப்பிவிட்டு தள்ளாத வயதிலே பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்க நான் தயாரில்லை!"

"நாமா அவனைப் போகச் சொன்னேம்? கண்ணுத்தாள் போட்ட தூபத்திலே அவன் கோபப்பட்டுப் போய் விட்டான். அதற்கு நாம் என்ன செய்வது?"

"கோபத்திலே போனுல் அவனை அப்படியே விட்டு விடுவதா?"

"எனக்கொன்றும் அவன் மீது கோபமில்லை! அவன் என்ன எனக்குப் பகையாளியா? பெற்ற மகன் தானே?"

"என்ன ஆனுலும் பரவாயில்லை. நாளைக்கே கொச்சிக்குப் போய் அவனையும், கண்ணுத்தாளையும் திரும்பிக் கூட்டி வருவது தான் என்னுடைய முதல் வேலை!"

"கோபித்துக் கொள்ளாதீர்கள். அது மட்டும் உங்களால் நடக்காது. கண்ணப்பன் வந்தாலும் வருவானேதவிர, கண்ணுத்தாள் ஒரு நாளும் வரமாட்டாள். அவள் ஒரு சபதம் போட்டு விட்டுத்தானே போயிருக்கிருள்!"

"அப்படி என்ன அவளுக்கும், நமக்கும் அவ்வளவு கொடிய மனஸ்தாபம்?"

"இந்த வீட்டுக்கே இனிமேல் அவளுக்கு வளைகாப்பு நடத்தி விட்டுத்தான் வருவாளாம்; போகும்போதே இப்படி ஒரு சபதத்தோடு போயிருக்கிறவளைக் கூப்பிட்டால் வருவாளா? அவன் தான் அனுப்புவானு?"

"அங்கே உற்பத்தியாகிற கரு இங்கே இருந்தால் உற்பத்தியாகாது என்கிருளா? இது என்ன பைத்தியக்காரத்தனமான சபதம்!" என்று முத்துக்கருப்பர் முனங்கிக்கொண்டிருந்தார்!

இந்தச் சமயத்தில் வாசல்பக்கமாக இருந்து மீனுவின் மகன் ஓடி வந்து முத்துக்கருப்பரிடம் கூவினன்.

"தாத்தா! பெரியம்மா வந்துக்கிட்டிருக்கு!"

"அட போடா இவனொருத்தன்! உங்க பெரியம்மா உன்னைப் போலே ஒரு பிள்ளையைச் சுமந்துகொண்டுதான் நம்ம வீட்டுக்கே வருவாளாம்!" என்று செல்லமாகக் கடிந்துகொண்டார்.

ஆனால் சிறுவன் சொன்னது உண்மைதான்.

கண்ணுத்தாள் தங்க ரதத்தைப்போல உள்ளே வந்து கொண்டிருந்தாள். முத்துக்கருப்பரும், அவர் மனைவியும் திகைத்துப் போனுர்கள்.

தமிழ் நாட்டில்தான் ஒரு பெண்ணின் வரலாறு ஒரு நாவலைப்போல் அமைந்துவிடுகிறது. அதுவும் ஒரு அழகான பெண்ணுக்குத் துன்பம் ஏற்பட்டுவிட்டால் அவளுடைய வாழ்க்கையில் பல திருப்பங்கள் ஏற்பட்டுவிடுகின்றன.

திருவனந்தபுரத்தில் சோதனை செய்து பார்த்துவிட்டு வந்த பிறகு கண்ணப்பன் தெம்பில்லாதவனைப்போல் நடந்துகொண்டான். தன் வாழ்க்கையில் ஊடாடிவிட்ட அந்த ரகசியத்தை எப்படிக் காப்பாற்றப் போகிறேம் என்ற மன உளைச்சல் அவனையும் அறியாமலேயே கண்ணப்பனைச் சோர்ந்திடச் செய்தது.

மனதிலே ஊறிக்கொண்டிருக்கும் கூச்சத்தை மறப்பதற்காக சில நாட்கள் கண்ணுத்தாளைப் பிரிந்திருக்க விரும்பிய அவன், அவளை ஊருக்குப் போய் அவளுடைய பெற்றோர்களைப் பார்த்து விட்டு வரும்படி அனுப்பிவைத்தான். அதற்கு அனுகூலமாக கண்ணுத்தாளின் தகப்பனார் உடல் நலமில்லாதிருக்கிறார் என்று வந்த கடிதத்தைப் பயன்படுத்திக் கொண்டான்.

கண்ணுத்தாள் ஊருக்குப் போய் பதினைந்து நாட்களுக்கு மேலாகிவிட்டது. அவளிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை. கண்ணப்பன் தனி ஆளாக இருந்து ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். மீன் அவன் உடம்புக்கு ஒத்துவராத ஒரு உணவு. கொச்சியில் மீன் சமைக்காத கடை அரிதாக இருந் தது. அதனால் பெரிதும் துன்பப்பட்டான்.

கண்ணுத்தாள் அவளது தாய் வீட்டில் இத்தனை நாட்கள் தொடர்ந்து இருந்ததே இல்லை. திருமணமான காலத்திலிருந்து ஒரு முறை கூட அவள் சேர்ந்தாற்போல இரண்டு நாட்கள் எங்கேயும் தங்கியதும் இல்லை.

“பாவம் கண்ணுத்தாள்! தனக்குக் குழந்தையே பிறக்காது என்ற தகவல் அவளுக்குத் தெரிந்தால் அவளும் டாக்டர் கொரியன் மனைவியைப் போலத்தான் முடிவெடுப்பாள்.” கண் ணப்பனுக்கு அவன் மனைவியின் அழகின் மீதுள்ள மயக்கத்தை விட அவளுடைய குணத்தின் மீதுள்ள பற்றுதான் அதிகமாக இருந்தது.

“பெண்ணின் அழகு பூவின் அழகைப்போல் நிரந்தரமற் றது. ஆனால் பெண்ணின் குணம் தங்கத்தின் குணத்தைப்போல் ஒளிமங்காதது” என்று அடிக்கடி கண்ணப்பன் கண்ணுத்தா ளிடம் கூறி அவளைப் பெருமைப்படுத்தியிருக்கிறான்.

கண்ணுத்தாளும் அவனிடம் அப்படித்தான் பழகினாள். எவ்வளவு நேரமானாலும் கண்ணப்பன் வந்த பிறகு தான் அவள் சாப்பிடுவாள். கண்ணப்பனுக்குப் பிடித்தமானதைத்தான் அவள் சமைத்து வைப்பாள். ஒரு பெண்ணுக்குப் புருஷன்தான் மூலதனம். புருஷன் அவளிடம் காட்டும் அன்புதான் மனைவிக்

குக் கிடைக்கும் வட்டி — என்பதில் கண்ணுத்தாள் இரண்டாவது கண்ணகியாகவே விளங்கிஞள்.

கண்ணுத்தாள் கொச்சிக்குத் திரும்பாதது கண்ணப்பனுக்குப் பலவிதமான சந்தேகங்களைக் கிளப்பிக் கொண்டிருந்தது. இத்தனை வயதுக்கு மேலே நமக்கு இனி பிள்ளையே பிறக்காது என்று அவள் தீர்மானித்து தகாத முடிவுக்கு வந்துவிட்டால் என்ன செய்வது? எப்போதுமே நெருக்கடியான நேரங்களில் தான் மனிதனுக்கு குழப்பங்கள் ஏற்படுகின்றன! அதுவும் அடிக்கடி நெருக்கடிகளைச் சந்தித்திராத செல்லப்பிள்ளைகளுக்குக் குழப்பங்கள் வந்துவிட்டால் அவர்கள் கற்பனையின் உச்சக் கட்டம்வரை போய்த்தான் திரும்புவார்கள்.

"கண்ணப்பர் இதற்கெல்லாம் குழம்பலாமா?" — என்று யாராவது அவனைக் கேட்டால், அதிகமாக இலக்கியமோ, தமிழோ படித்து விட்டால் இப்படித்தான் என்பான். அதோடு விடமாட்டான் - கவிச்சக்கரவர்த்தி கம்பன் சிறிய துன்பத்தைக் கூடத் தாங்கிக் கொள்ள மாட்டாராம்! நாவலாசிரியர் டூமாஸ் குடும்பக்கவலையால் நாவல் எழுதுவதையே நிறுத்தி விட்டாராம் அதில் நான் மட்டும் விதி விலக்காக இருக்க முடியுமா?— என்று விரிவுரை வேறு சொல்ல ஆரம்பித்து விடுவான். புதிதாகச் சந்திப்பவர்கள் அவனை ஒரு மாதிரியாக நினைத்துக் கொள்ளும் அளவுக்கு அவனது நடவடிக்கைகளும் பேச்சு வார்த்தைகளும் அமைந்துவிடும்.

இளகிய உள்ளத்தை எளிதில் துன்பம் வசப்படுத்திக் கொண்டு விடுகிறது. கண்ணீரைக் கண்டு கலங்கும் நெஞ்சம் துன்பம் ஏற்பட்டதும் நடுங்கித் தவிக்கிறது. அதனுல்தான் இளகிய நெஞ்சமுடையவர்கள் கோழைகளாக வாழத் தொடங்கிவிடுகிருர்கள்.

கண்ணப்பன் பிறவியில் கோழை அல்ல; சபலத்தால், தோல்வி மனப்பான்மையால் கோழையாகி விட்டான். தூற்றல் களும் கேலிப்பேச்சுகளும் அவனை அரைமனிதனுக்கி விட்டன. மனிதமனம் கூட ஒரு வகையான உலோகம் போன்றதுதான்.

நெருப்பிலே வாட்டினால் அது எப்படி உருகிவிடுகிறதோ அது போலத்தான் துன்பத்தால் தாக்குண்டால் மனித மனமும் கருகிவிடுகிறது.

கண்ணுத்தாள் பதினைந்து நாட்கள் தன்னோடு இல்லாதது, உலகத்தில் எல்லோரும் அவனைக் கைவிட்டு விட்டதைப்போல் கண்ணப்பனுக்குப்பட்டது. பைனான்சிங் கம்பெனிக்கு அவன் ஒழுங்காகப் போகவில்லை. தினசரி வசூலை முறையாகக் கவனிக்க வில்லை. கடை, வரவு செலவில் அவன் கவனம் சிறிதும் நாட வில்லை. வெளியூரில் படிக்கும் மாணவன் ஒவ்வொரு நாளும் பெற்றோர்களிடமிருந்து பணம் வருகிறதா என்று தபால்காரனை எதிர்பார்த்திருப்பதைப் போல கண்ணப்பன் ஒவ்வொரு நாளும் கண்ணுத்தாளின் வரவை எதிர் பார்த்திருந்தான்.

அன்று எதிர்பாராத வகையில் அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. அது கண்ணுத்தாளின் தகப்பனார் எழுதியது. தனக்கு உடல் நலமில்லாததால் கண்ணுத்தாள் இன்னும் கொஞ்ச நாளைக்கு ஊரில் இருந்து விட்டு வரட்டும் என்றுதான் தனது மாமனார் எழுதியிருப்பார் என்று கண்ணப்பன் நினைத்தான். ஆனால் அந்தக் கடிதம் ஒரு பயங்கரமான வெடி குண்டோடு வந்திருந்தது. கடிதத்தைப் படித்ததும் அவன் தலைசுற்றியது.

"அன்புள்ள மாப்பிள்ளைக்கு,

எப்போதும் காணாத மகிழ்ச்சியோடு நான் இந்தக் கடி தத்தை எழுதியிருக்கிறேன். பல வருஷங்களாக நான் கும்பிட்ட தெய்வங்கள் என்னைக் கைவிட்டு விடவில்லை. ரதிக்கிளி போன்ற என் மகள் ஊரார் பேச்சுக்கு ஆளாகி விட்டாளே என்று நான் ஒவ்வொரு நாளும் கடவுளை நிந்தித்துக் கொண்டிருந்தேன். எதற்கும் ஒரு முற்றுப்புள்ளி உண்டல்லவா? அந்த முற்றுப்புள்ளி இப்போது என் மனக்கவலைக்கும் வந்துவிட்டது. நீங்கள் மலே யாள தேசத்திற்குப் போன முகூர்த்தமாகக் கண்ணுத்தாள் கருவுற்றிருக்கிறாள். அங்கே உள்ள தெய்வங்களுக்கெல்லாம் நீங்கள் நேரில் சென்று காணிக்கை செலுத்த வேண்டும்.

கண்ணுத்தாளின் திருமணத்திற்குப் பிறகு என் வீட்டில்

நடக்கப்போகும் பெரிய விசேஷம் கண்ணுத்தாளுக்கு நடைபெற இருக்கும் வளைகாப்பு விழாதான். அதற்கு நாள் குறிப்பதற்கு உங்கள் அபிப்பிராயத்தை அறியத்தான் இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறேன். ஐந்தாவது மாதத்தில் அல்லது ஏழாவது மாதத்தில் தான் வளைகாப்பு நடத்துவது வழக்கம். உங்கள் விருப்பம் அறிந்துதான் விழாவிற்கு தேதி குறிப்பிட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்,

இப்படிக்கு.

நாராயணன் செட்டியார்."

கடிதத்தைப் படித்து முடித்ததும் தலையிலே மண்ணெண்ணெயை ஊற்றிக்கொண்டு நெருப்பை வைத்துக்கொள்ளலாம் போல் தோன்றியது கண்ணப்பனுக்கு. பல ஆண்டு காலமாக சேகரித்து வைக்கப்பட்ட உண்டியல் திருட்டுப் போனதைப் போல, உழைத்துச் சம்பாதித்துக் கட்டிய வீட்டில் இடி விழுந்து விட்டதைப் போல அவன் மனம் புழுவாகத் துடித்தது.

"குழந்தை ஆசையால் குடும்பத்தின் ஆணி வேரையே கிள்ளி எறிந்து விட்டாளே! நான் இல்லாத நேரத்தில் வீட்டில் ஏதாவது தப்பு நடந்திருக்குமோ? சேச்சே! பல ஆண்டு காலம் என் ரத்தத்தோடு ரத்தமாகப் பழகியவள் அப்படி நடந்திருக் கவே மாட்டாள்." கலங்கிய குட்டையில் பூச்சி, புழுக்கள் மிதப்பதைப் போல அவன் உள்ளத்தில் பல சந்தேகங்கள் அணி வகுத்துத் தலை தூக்கின.

கண்ணப்பன் உள்ளத்தில் மனப்போராட்டம் வலுத்தது.

"கொரியனின் மனைவி உத்தமி; மகாலெட்சுமி. அவளுக்கு அவன் கோயில் கட்டிக் கும்பிட வேண்டும். தனக்குப் பிள்ளை பிறக்காது என்றதும் அவள் தன்னையே மாய்த்துக்கொண் டாள்."

"ஆனால் இவள்? சுத்தமான சுயநலக்காரி. தனக்குப் பிள்ளை வேண்டும் என்பதற்காக என் உயிரையே வாங்க எண்ணி விட்டாள். ஊரில் இப்படிப்பட்ட தவறுகள் செய்ய முடியாது. என்பதால்தான் வீட்டை விட்டுப்போகவேண்டும் என்று அடம் பிடித்திருக்கிறாள்."

“பெண்கள் மிகவும் மோசமானவர்கள். அதிலும் ஏமாற்ற மடைந்த பெண்கள் மிகவும் ஆபத்தானவர்கள். அற்ப ஆசைக் காக அரசாங்கத்தையே கவிழ்ப்பவர்கள் என்பதால்தான் முனி வர்களே அவர்களைச் சாடியிருக்கிருர்கள்”

—இப்படி கிறுகிறுத்துப் போஞன் கண்ணப்பன். அப்போது அவன் கொச்சி நண்பன் சசிகுமார் உள்ளே நுழைந்தான்.

சசிகுமார், கண்ணப்பனுக்குக் கிடைத்த கொச்சி நண்பன். அவன், ஒரு தமிழ் பெண்ணுக்கும் ஒரு மலையாளிக்கும் பிறந்த வன். அவனுடைய தந்தை தமிழ் நாட்டில் அதிகாரியாக இருந்த போது அங்கேயே ஒரு பேராசிரியையைத் திருமணம் செய்து கொண்டார். அவரது சொந்த ஊர் எர்ணுகுளம். பதவிக்காலம் முடிந்ததும் அவர் சொந்த ஊருக்குத் திரும்பி விட்டார்.

சசிகுமாருக்குத் தமிழும் தெரியும், மலையாளமும் தெரியும். அவனும் கொச்சித்துறைமுகத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந் தான். கண்ணப்பனின் தமிழ்ப்பற்று சசிகுமாரைக் கவர்ந்ததால் சசி அவனுக்கு உற்ற நண்பஞகிவிட்டான்.

கல்யாணமாகாத ஆணும், பெண்ணும் சந்தித்தால் அது காதலாகிவிடுகிறது. ஆகாவிட்டாலும் உலகம் அதைக் காதல் என்றே சொல்லிவிடும். ஆஞல் இரண்டு ஆடவர்கள் சந்தித் தால் அதைப்பற்றி உலகம் கவலைப்படுவதே இல்லை.

சசி அன்று வீட்டுக்குள் நுழைந்தபோது கண்ணப்பனிட மிருந்து என்றும் போல் வரவேற்பு கிடைக்கவில்லை.

“சசி, இன்று என் மனம் சரியில்லை. என்னவோ போல் இருக் கிறது. சூரியோதயத்திலிருந்து பத்துநாழிகைவரை மனம் நிம் மதியாக இருந்துவிட்டால் அன்று முழுவதும் கவலை அணுகாது என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிருர்கள். ஆஞல், நேற்று மாலையிலேயே என்னைத் துக்கம் முற்றுகையிட்டு விட்டது” என்ருன் கண்ணப்பன்.

“நல்ல நூல்களைப் புரட்டிஞல் எல்லாம் சரியாகிவிடும்”

“இந்த யோசனையை என்றைக்கும் நான் ஏற்றுக் கொண்ட

தில்லை. மனம் சரியாக இல்லாதபோது மனிதன் எதையும் ரசிக்க முடியாது. கோபமாக இருந்தாலே சாப்பிட முடிவதில்லை. கோபம் என்கிற போதை தணிகிறவரை குழந்தைகளின் குமிழ் சிரிப்புக்கூட மனதுக்குக் குளிர்ச்சி தருவதில்லை.'' கண்ணப்பன் இப்படி பதில் சொன்னான்.

"வீட்டில் அண்ணியார் இல்லையா? ஊருக்குப் போனவர்கள் இன்னும் திரும்பவில்லையோ?'' சசி பேச்சை மாற்றினான்.

"பெண்கள் தாய் வீட்டுக்குப் போனாலே இப்படித்தானே! அவர்களது பழைய நினைவுகள் மறையவே பத்து நாட்களாகும். சிறுமியாக இருந்த போது சிட்டிவைத்து விளையாடியதிலிருந்து செப்புக்குடம் எடுத்து சேங்கைக்குப்போன காலம் வரை பேசிப் பேசிப் பொழுதைப் போக்குவார்கள்!'' என்றான் கண்ணப்பன்.

"சரி, இன்று நீங்கள் சோகமாக இருப்பதற்கு என்ன காரணம் என்பதைத் தெரிந்து கொள்ளலாமா?''

"கவலைகள் பலவிதம் உண்டு சசி, பிறர் தலையிட்டால் தீர்ந்து விடக்கூடிய கவலைகளும் உண்டு. யார் தலையிட்டாலும் தீராத கவலைகளும் உண்டு. இதில் என் கவலை இரண்டாவது வகை. இந்தத் திருவிதாங்கூர் மன்னரே வந்தாலும் என் கவலையைத் தீர்க்க முடியாது. தானாக அந்தக் கவலை கரைந்தாலொழிய அல்லது நானாக மடிந்தாலொழிய என் கவலை தீரவே தீராது'' என்றான் கண்ணப்பன்.

"கவலைகள் என்பது எல்லோர் மனத்திற்கும் பொதுவானதுதான். எப்பேர்ப்பட்ட கவலைக்கும் குறிப்பிட்ட ஆயுள் தான் உண்டு! நாள் செல்லச் செல்ல அதன் வேகம் தானாகக் குறைந்து விடும். இரண்டு வருஷங்களுக்கு முன் எங்கள் குடும்பத்தில் திடீரென்று புகுந்த கவலை இப்போது தணிந்து விட்டது. எங்கள் குடும்பத்தில் அனைவருமே அன்று தற்கொலை செய்து கொண்டு மடிந்து விடலாம் என்றுதான் நினைத்தோம். பிறகு எப்படியோ நாங்களாகக் கொஞ்சம் கொஞ்சமாக ஆறுதல் அடைந்து விட்டோம்'' என்றான் சசி.

"சசி, இவ்வளவு நாட்களாக நீ இதை என்னிடம் சொல்லவே இல்லையே! அது என்ன உன் குடும்பத்தையே உலுக்கிய கவலை?"

"காணுமல் போன சுபத்ரா என்ற என் தங்கையைப்பற்றிய கவலைதான்!"

"இரண்டு வருஷங்களுக்கு முன் போனவளா இன்னும் திரும்பவில்லை?"

"ஆம்; அவள் இறந்துவிட்டாள் என்று நாங்கள் தீர்மானித்துக் கொண்டோம். என் தாயிடமும் அப்படியே சொல்லிவிட்டோம். அவள் இருக்கிருள் என்று இன்று நினைத்தாலும் என் தாயார் திடீரென்று மனம் குன்றிப்போய் விடுகிருர்கள்."

கண்ணப்பனுக்கு இது ஒரு அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

கண்ணப்பன் அடைந்திருந்த அதிர்ச்சியை தபால்காரனின் மணிச்சத்தம் கலைத்தது. தபால்காரன் ஒரு கடிதத்தைக் கண்ணப்பனிடம் கொடுத்தான். அது கண்ணுத்தாளிடமிருந்து வந்த கடிதம். கண்ணப்பனுக்கு அவள் மீதிருந்த கோபத்தினுல் அந்தக் கடிதத்தை நெருப்பு வைத்துக் கொளுத்திவிட நினைத்தான்.

"சண்டாளி, ஏதாவது போலிச்சமாதானத்தை எழுதியிருப்பாள்; என்னதான் அவள் எழுதியிருந்தாலும் நான் அதை நம்பப்போவதில்லை, ஒரு டாக்டரின் பரிசோதனைக்கு பிறகு — உனக்கு இனிமேல் கருத்தரிக்க வழியே இல்லை என்று சொன்ன பிறகு இவளுக்கு வளைகாப்பு வருகிறதென்ருல் இதைவிட ஒரு புருஷனுக்கு மானக்கேடான சம்பவம் உண்டா?" — என்ற மனக் குமுறலுடன் அவன் அந்தக் கடிதத்தை பிரித்தான். ஆனுல் அதில்,

"அன்புள்ள அத்தான் அவர்களுக்கு' வணக்கம். நேற்று என் தகப்பனுரின் தபால் உங்களுக்குக் கிடைத்திருக்கும். அதைப் பார்த்ததும் அளவில்லாத ஆனந்தம் அடைந்திருப்பீர்கள். நாம் எர்ணுகுளத்திற்குப் போன முகூர்த்தமாக நமக்குக் குழந்தை

பிறக்கப் போகிறது என்று புளகாங்கிதம் அடைந்திருப்பீர்கள். ஆனால் அந்த மகிழ்ச்சியை இந்தக் கடிதம் உடைத்துத் தூளாக்கி விடப்போகிறதே என்பதை எண்ணி என் மனம் பெரிதும் துன் புறுகிறது.''

அத்தான், எனக்கு வளைகாப்பு நடத்திட நாள் குறித்து அனுப்பும்படி என் தகப்பனார் உங்களுக்குக் கடிதம் எழுதியிருப்ப தாக இங்கே பேசிக் கொள்கிறார்கள். இல்லாத ஒன்றை இருப்ப தாகக் கற்பனை செய்து கொண்டு எழுதிய கடிதம் அது! வளை காப்பு என்பது ஐந்தாவது மாதம் அல்லது ஏழாவது மாதத்தில் நடத்தப்பட வேண்டிய நிகழ்ச்சி. உங்களுக்குத் தெரியாமலா எனக்கு வளைகாப்பு வந்துவிடும்? ஆனால் இங்கே இருக்கிறவர் களுக்கு அதெல்லாம் தெரிந்திட நியாயமில்லை அல்லவா? எல் லாமே நீங்களும் நானும் எதிர்பாராத நாடகமாக நடந்து விட்டது.

நாம் இருவரும் சென்ற வருஷம் எர்ணாகுளத்திற்குப் புறப் படும்போது—நான் இனிமேல் கோயிலுருக்குத் திரும்பும்போது வளைகாப்பு விழாவிற்குத்தான் வருவேன் என்று என் வயிற்றெ ரிச்சலைச் சபதமாக போட்டுவிட்டு வந்தேன். அது உங்களுக்கும் தெரியும். அதை உண்மை என்று எண்ணிக் கொண்டு உடல் நலமில்லாத தாய் தகப்பனைப் பார்க்க வந்த என்னை என் பெற் றோர்களும், உங்கள் பெற்றோர்களும் சேர்ந்து கர்ப்பவதியாக்கி விட்டார்கள். அதை மறுக்கவோ, தெளிவுபடுத்தவோ அவர்கள் எனக்கு அவகாசம் அளிக்கவில்லை, அவ்வளவு குதூகலம் அவர் களுக்கு! ஊர் முழுவதும் ஒரே பேச்சு — கண்ணுத்தாளுக்கு வளை காப்பு வந்துவிட்டதென்று! உறவினர் வீட்டுப் பெண்களெல் லாம்—வயிறு சிறிதாக இருப்பதால் பெண் குழந்தையாகத்தான் இருக்கும்—என்று ஜோசியம் சொல்லத் தொடங்கிவிட்டார்கள் எர்ணாகுளம் தண்ணீர் நல்ல தண்ணீர்; குருவாயூரப்பன் ஒரு வரதையான தெய்வம் என்ற வர்ணனைக்கும் இங்கே குறை வில்லை. பிள்ளை இல்லாதவர்களெல்லாம் இனிமேல் ராமேஸ் வரத்திற்கோ, காசிக்கோ போகவேண்டியதில்லை. எர்ணாகுளம் போய் குடியிருந்தால் போதும் — என்று கிண்டலாக ஊரில்

பேசிக்கொள்வது இரவு முழுவதும் என் காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டிருக்கிறது.

ஆனால் நீங்கள் முன் கடிதத்தைப் பார்த்து என்ன நினைப்பீர்கள் என்று என்னால் கற்பனைக் கூடச் செய்து பார்க்க முடியவில்லை. பிள்ளை இல்லை என்பதற்காக மூத்தவளான என்னை அவமானப்படுத்தினார்களே, இனி அவர்களைத் தலைகுனிய வைத்தே தீருவேன் என்று எக்காளமாக எண்ணிக் குதூகலித்துக் கொள்வீர்கள். இந்த வதந்தி, புரளி எல்லாம் உண்மையாக இருந்திருக்கக்கூடாதா என்றுதான் நான் ஏங்கிக் கொண்டிருக்கிறேன். பெண்களின் வாழ்க்கையில் சில சம்பவங்கள் ஏன் நடந்தன என்று எண்ணிவிடத் தோன்றுகிறது; ஆனால் ஒரு சில பெண்களின்வாழ்க்கையில் இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்கக்கூடாதா என்று நினைத்துவிடவும் நேரிடுகிறது!

இப்போது உங்கள் பெற்றோரும் என் பெற்றோரும் உங்களின் கடிதத்தை எதிர்பார்த்திருக்கிறார்கள். திருமணத்தை நிச்சயித்துவிட்ட வீட்டைப்போல இங்கே ஒரே அமர்க்களமாக இருக்கிறது. நான் வடிக்கும் கண்ணீரை இங்கே இருப்பவர்கள் ஆனந்தக்கண்ணீர் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். எந்தப் பெண்ணுடைய வாழ்க்கையிலும் இப்படி ஒரு கட்டம் வந்திருக்கவே முடியாது. உலகத்தில் எல்லோரும் தூங்கிக் கொண்டு கனவு காண்பார்கள்; நான் நடந்துகொண்டும், பேசிக் கொண்டும் ஊமைக்கனவு கண்டுகொண்டிருக்கிறேன். அந்தக் கனவைக் கலைக்க வேண்டியது, அல்லது எனக்கு சுயநினைவை ஊட்ட வேண்டியது என்றும் போல் உங்கள் பொறுப்புத்தான்; வழக்கமாக நான் யாரிடம் வரம் கேட்டு நிற்பேனோ அந்தத் தெய்வத்திடம்தான் இப்போதும் வரம் கேட்டு நிற்கிறேன்.

என்றும் தங்கள்
கண்ணாத்தாள்,"

— என்று குறிப்பிட்டிருந்தது.

கடிதத்தைப் படித்து முடிக்கு முன்பே அவன் முகம் வியர்த்து விட்டது. உடம்பெல்லாம் புல்லரித்து விட்டது. கோபத்தில்

தெய்வத்தை இகழ்ந்து விட்ட பக்தனைப் போல் தலையில் அடித்துக் கொண்டான். அடுத்த வீட்டுக்குத் தெரியாமல் வாழ்பவன் கூட தன்னை துன்பம் தாக்கும் போது தாங்கிக்கொள்ள முடியாமல் அடுத்த தெருவுக்கே கேட்கும்படி அலறி விடுகிறான். அதிலும் கோழை மனம் படைத்த செல்லப் பிள்ளைகளின் உள்ளம் இம்மாதிரி நேரங்களில் உடைந்து நொறுங்கி பின்னிக்கிடக்கும் முருக்கைப் போல கலகலத்து விடுகின்றன. சற்று முன்பு சண்டாளியாகத் தெரிந்த கண்ணாத்தாள் இப்போது கண்ணப்பனுக்குத் தேவதையாகத் தெரிந்தாள்.

"என்னை மன்னித்துவிடு கண்ணு! உன்னை எவ்வளவு சீக்கிரத்தில் நான் லேசாக எடைபோட்டு விட்டேன். மலடி என்ற அவச் சொல்லை நீ துடைத்துக் கொள்வதற்காகப் புருஷனை நெருப்பாற்றில் தள்ளிவிட்டாயே என்று நான் உன்னைப் பற்றிப் போட்டுக் கொண்ட கணக்கு எவ்வளவு தவறாகப் போய் விட்டது கண்ணு! என்னைச் சாவிலே இருந்து ஒரு நொடியில் காப்பாற்றிய உன்னை நான் என்றும் தலைகுனிய விடமாட்டேன்" என்று தனக்குள்ளே ஏதோ தீர்மானித்துக் கொண்டவனாய் வீட்டுக்குள் ஓடி கண்ணாத்தாளுக்கு பதில் கடிதம் எழுதினான் கண்ணப்பன்.

கண்ணப்பனிடமிருந்து யாருக்கும் கடிதம் வரவில்லையே என்று எல்லோரும் திகைத்துப் போயிருந்தார்கள். ஒரு வாரத்திற்குப் பிறகு கண்ணாத்தாளுக்கு மட்டும் அவனிடமிருந்து கடிதம் வந்தது.

"பிரியமுள்ள கண்ணுவுக்கு, உன் கடிதம் கிடைத்தது. அந்தக்கடிதம் என்னை மறுபிறவி எடுக்க வைத்து விட்டது. தக்க நேரத்தில் உன் கடிதம் வந்து சேர்ந்திராவிட்டால் நம் இருவருடைய வாழ்க்கையிலும் விபரீத விளைவுகள் ஏற்பட்டிருக்கும்.

கண்ணு, கடிதத்தில் எதையும் விரிவாக எழுதவேண்டாமென்று நினைத்துச் சுருக்கமாகவே எழுதியிருக்கிறேன். உன்னை எல்லோருமாகச் சேர்ந்து கர்ப்பவதியாக்கி விட்டார்கள் என்று மட்டும் எனக்குப் புரிகிறது. அதுவும் ஒருவகைக்கு நல்லதுதான்.

இனிமேல் நீ எதையும் அடித்துப்பேசி அகப்பட்டுக் கொள்ள வேண்டாம்; ஆகவே என் கண்ணு கர்ப்பவதிதான்! ஆம்; கர்ப்ப வதியாக நடித்துவிடும்படி உனக்குச் சொல்லுகிறேன். மற்றவை களைப் பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம். இந்தக் கூத்தினுல் மலடி என்ற கேலிப் பேச்சும் இனி உன்னைத் தீண்டமுடியாது; பிள்ளை இல்லாதவன் என்பதால் நான் என் வீட்டில் இழந்த மரியாதையையும் திருப்பிக் கொள்வேன். நாமே பெற்ருல்தானு பிள்ளை? கண்ணு ஒரு முறை நீ சொன்னுயே—குடும்பம் என்ருல் ஏதாவது ரகசியம் இருக்கவேண்டும் என்று! அதைக் காப்பாற்ற வேண்டியது இன்று முதல் நம் வீட்டுப் பொறுப்பு.

இப்படிக்கு உன் கணவன்
கண்ணப்பன்."

கண்ணுத்தாளுக்கு இந்தக்கடிதம் துப்பறியும் கதை படிப் பது போல இருந்தது. கடிதத்தை மறைத்துக்கொண்டு அறைக் குள் ஓடினுள்.

"கண்ணுத்தா!"

"உன் மாப்பிள்ளை என்ன எழுதியிருக்கார்?"

"இந்த மாதத்திலேயே வைத்துக் கொள்ளலாம் என்று எழுதியிருக்கிருர் அப்பா!" அதற்குமேல் அவளால் பேச-முடியுமா?

கண்ணுத்தாள் இப்போது கர்ப்பவதி. உண்மையான கர்ப்ப வதிகூட அப்படி நடந்துகொள்ள முடியாது; அதைவிட அதிக மாக கண்ணுத்தாள் உடலை அலட்டிக் கொண்டாள்.

மாமியார் வீட்டில் இப்போது கண்ணுத்தாளுக்கு அளவு கடந்த மரியாதை. இட்லரிடம் இழந்த இடங்களை ஸ்டாலின் மீட்டுக் கொண்டதைப் போல கண்ணுத்தாள் உற்சாகமாக இருந்தாள்.

வளைகாப்பு விழா வெகு விமரிசையாக நடந்தது. கண்ணப் பன் பெண்ணைப்போல் வெட்கப்பட்டுக் கொண்டு யாரோடும் அதிகம் பேசாமலே நேரத்தைப் போக்கினுன்.

கண்ணப்பன் தம்பி சொக்கநாதனும் வளைகாப்பிற்கு வந்திருந்தான். கண்ணப்பன், சொக்கநாதனைச் சந்தித்து இரண்டு வருஷங்களுக்கு மேலாகிவிட்டது. கண்ணப்பன், எர்ணுகுளத்திற்கு போவதற்கு ஒரு ஆண்டுக்கு முன்பு சொக்கநாதன் விசாகத்திருநாளுக்கு ஊருக்கு வந்திருந்தபோது இருவரும் சந்தித்துக் கொண்டார்கள். அதற்குப் பிறகு கண்ணுத்தாளின் வளைகாப்பு விழாவில்தான் அவர்கள் சந்திப்பு ஏற்பட்டது.

சொக்கநாதன் கவர்ச்சியானவன். கண்ணப்பனைவிடத் திட காத்திரமானவன். சுருட்டை மயிர், ஆடை உடுத்துவதிலும் அலங்காரம் செய்து கொள்வதிலும் சிறு பிள்ளையிலிருந்தே சொக்கநாதனுக்கு அதிக நாட்டமுண்டு!

சுருட்டைமயிர் நன்றுகப் படியவேண்டும் என்பதற்காகத் தலைக்குக் கரடிக்கொழுப்புப் போட்டுக் கொள்வான். அன்று முழுவதும் நறுமணம் வீசவேண்டும் என்று எண்ணி சட்டையில் 'அவிஞேலியா' சென்ட் தடவிக்கொள்வான். அடிக்கடி புதுச் செருப்பு மாற்றுவதும் அவனுக்கு வாடிக்கை. காகிதத்தகடு போன்ற வாயல் வேஷ்டிகளே அவனுக்குப் பிடிக்கும், கையில் ஒற்றைக்கல் வைர மோதிரம் அணிந்திருப்பான்.

இரண்டு வருஷங்களுக்கு முன் ஒரு அரசகுமாரனைப்போல் விளங்கிய சொக்கநாதன் முகத்தில் இப்போது அருள் இல்லை. பூச்சி விழுந்த இலையைப் போல் அவன் சுருங்கியிருந்தது. அவன் சிரிப்பும் நடவடிக்கைகளும் செயற்கையாகவே இருந்தன. சொக்கநாதன் ஏன் இப்படி ஆகிவிட்டான்? அவன் உடலுக்குள்ளே ஏதாவது நோய் புகுந்து கொண்டு அவனை ஆட்டிப் படைக்கிறதா? — கண்ணப்பனுக்கு இப்படியெல்லாம் ஒரு சிந்தனை.

"சொக்கு!"

"வந்திட்டேன்!"

"என்ன உன் உடம்புக்கு? ஏதாவது வைத்தியம் செய்து கொள்வது தானே?"

"அப்படி ஒன்றுமில்லை! எல்லோரும் என்னை இங்கு வந்ததும் இப்படித்தான் கேட்கிறார்கள். எனக்கு ஏதாவது வியாதி இருந்தால்தானே வைத்தியம் செய்து கொள்வதற்கு?"

அப்போதுதான் கண்ணப்பன் விளங்கிக் கொண்டான்!

சொக்கநாதன் நன்றாகக் குடித்திருந்தான். அவன் பேசும் போது சாராய நெடி கண்ணப்பனின் மூக்கைத் துளைத்தது.

சுபத்ரா!

இவள் அழகானவள்; மிகவும் அழகானவள். அவள் தோற்றம் காண்போர்களை உறுத்தக் கூடியது. சுபத்ரா பி. ஏ. பட்டம் பெற்று விட்டு வேலைக்காகக் காத்திருந்தாள்.

சுபத்ரா இசையிலும் வல்லவள். சின்ன வயதிலேயே அவள் வயலின் வாசிக்கக் கற்றுக் கொண்டாள். பொழுது போகாத நேரங்களில் புத்தகம் படிப்பதைப்போல அவள் வயலின் வாசித்துக் கொண்டே இருப்பாள்.

ஒருநாள் அவளுக்கு திடீரென்று திருவனந்தபுரத்திலிருந்து ஒரு இண்டர்வியூ வந்தது. மறுநாளே அவள் திருவனந்தபுரத்துக்குப் புறப்பட ஆயத்தமானாள். அவளுடைய அண்ணன் சசிகுமார் சுபத்ராவை திருவனந்தபுரத்திற்கு அனுப்பிவைத்தான். சுபத்ரா பகல் நேரத்தில் திருவனந்தபுரம் வந்து சேர்ந்தாள். அவள் வந்ததும் வராததுமாக இண்டர்வியூக்குக் கிளம்பினாள். சுபத்ரா, திருவனந்தபுரத்திற்குப் புதியவளாக, வெளியூரே போயிராத வெகுளியாகப் பார்ப்பவர்களுக்குத் தோன்றினாள்.

"டேவிட்!"

"என்ன பாஸ்?".

"மான் மருளுவதைப் பார்த்தாயா?"

"இளங்கன்று பாஸ்! துருதுருவென்று இருக்கும் இருவிழிகள் தொட்டால் சிவக்கும் பருவப்பதுமை!"

"போதும்!"

அந்த உரையாடல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் சுபத்ரா. இரண்டு போலீஸ்காரர்கள் அவளருகே வந்து கொண்டிருந்தார்கள்.

"ஏய், யார் நீ?" என்றான் ஒருவன்.

"எங்கே புறப்பட்டே சொகுசா?" என்றான் அடுத்தவன்.

"பெரிய ஸ் டா ர் மாதிரியில்லே கெளம்பிட்டா, டிக்கட் போடுறவ போலேருக்கு!" போலீசாரின் பேச்சு அத்துமீறியது.

"பிராத்தல் கேசப்பா இது! பட்டணத்துக்கு ஏற்றுமதி யாகுது! ம்...! கிளம்பு ஸ்டேஷனுக்கு!" என்று ஒருவன் மிரட்ட, அடுத்தவன் லத்தியை வைத்து சுபத்ராவைத் தள்ள—அவள் எப்படியோ ஒரு டாக்சியில் ஏற்றப்பட்டாள்.

அழகு சில பெண்களுக்கு வாழ்வின் சூரியோதயமாக அமைகிறது; வேறு சிலருக்கு வாழ்வின் அஸ்தமனமாக ஆகிவிடுகிறது.

"இப்ப எங்கே போகணும்?" டாக்சிக்காரன் கேட்டான்.

"போய்க்கொண்டே இரு! இப்ப நீ எந்தப் பாதையில் போகிறாய்?"

"நாகர்கோயில் பாதை இது!"

"ரொம்பச்சரி!"

சுபத்ரா தீக்குளித்தவளைப்போல் காருக்குள் சுருண்டு கிடந்தாள். மயக்கம் அவளைப் புரட்டிப் புரட்டிப் போட்டது.

"மூன்று வருஷத்துக்கிடையிலே இப்படி ஒரு உருப்படி கெடைச்சதே இல்லே. இன்று நமக்கு நல்ல லக்கு!"

சுபத்ரா திகைத்தாள். இவர்கள் உண்மையான போலீஸ்காரர்கள் இல்லையென்று அப்போதுதான் அவளுக்குப் புரிந்தது.

“இரண்டாயிரத்திற்குக் குறையக் கூடாது. கட் அண்ட் ரைட்டாப் பேசிடணும். முந்தி ஒருத்தியைக் கொடுத்தோம். நானூறு ரூபாய் தான் கொடுத்தான். ஆனால் அவன் இரண்டே நாளிலே அந்தத்தொகையை எடுத்துட்டான். அந்த பாய் இருக்கானே அவன் ஒரு மலை விழுங்கி! பத்து வருஷமா நாம் இப்படியே தான் இருக்கோம். அவன் லாரி வாங்கிட்டான். வீடுகட்டிட்டான். திருநெல்வேலியிலே இன்னக்கி அவன் பெரிய புள்ளியாம். நகரசபைத் தேர்தலுக்கும் நிக்கப் போறானும். பாய், கொடுத்து வச்சவன்; இன்னக்கி ஒரு கைபடாத ரோஜா கிடைக்கும்னு அவன் சொப்பனம் கூடக் கண்டிருக்க மாட்டான்.”

இந்தப் பேச்சு சுபத்ராவுக்கு மதிமயக்கத்தை அதிகரிக்கச் செய்து விட்டது. அவள் நினைவை இழந்தாள்.

பொழுது புலர்வதற்குள் டாக்சி திருநெல்வேலி வந்து விட்டது. கிழக்கு வெளுக்கப்போகும் நேரம். டாக்சி, நகரில் பல தெருக்களைத் தாண்டி இடுக்கும், முடுக்கும் நிறைந்த ஒரு பகுதிக்குள் வந்து விட்டது.

“வாழ்க! ஆகா, பிரமாதம்!” என்று வரவேற்புக் கொடுத்தான் ராசாக்கிளி ராவுத்தர். குடித்தவனைப் போல் பேசினான். ஆனால் அவன் குடிக்கமாட்டான். அப்படி அவனுக்கு ஒரு பேச்சுப் பழக்கம்.

ராசாக்கிளி ஒரு விநோதமான தோற்றமுடையவன். ஒரு அழுக்குப்பிடித்த கைலி; மேலே ஒரு முண்டா பனியன்; இடுப்பிலே பச்சை பெல்ட்; டக்டக் என்று பயங்கரமான ஓசை தரும் ‘பூட்’சுகள் காலில்; இளம் தாடி; ஆனால் மீசை இல்லை. பெண் குரலுக்கு எதிரான எருமைக் குரல். சிங்கத்தை அடக்கும் சர்க்கஸ்காரனைப் போல் நடவடிக்கைகள்.

சுபத்ராவைப் பார்த்ததும், நன்றாகப் பழக்கமான பெண்ணுடன் பேசுவதைப்போல் அவளை கனிவோடு உள்ளே அழைத்துக் கொண்டு போனான். லாயத்திற்குள் நுழைய இடக்கு செய்யும் புதிய குதிரையைப் போல் சுபத்ரா திமிறினாள். இரவெல்லாம் அழுது அழுது அவள் கண்கள் பாழடைந்து கிடந்தன. மழைபெய்து ஓய்ந்த ஏரிக்கரையைப்போல அவள் கன்னங்களில் கறைக்கோடுகள் காய்ந்து தெரிந்தன.

ஒருவன் காபி கொண்டு வந்து கொடுத்தான். சுபத்ரா அதைத் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை. இன்னொருவன் சீப்பும், கண்ணாடியும் கொண்டு வந்து வைத்தான். சுபத்ரா அந்தத் திசைப்பக்கமே திரும்பவில்லை. அது, அந்த மாளிகைக்கே உரிய ஒரு பல்லுப் போன சீப்பு; சில்லுப்போன ஒரு கண்ணாடி!

கொஞ்ச நேரத்திற்குள்ளாக சுபத்ராவைக் கடத்திக் கொண்டு வந்த கார் புறப்பட்டு விட்டது. அப்போது சுபத்ரா வின் மனத்தில், 'இந்த ராசாக்கிளி ராவுத்தரைவிட தன்னைக் கடத்தி வந்தவர்கள் பரவாயில்லை' போல் தோன்றியது வெயிலில் நடந்து களைத்த அவள் மனதுக்கு பனைமரத்து நிழல் கூட ஆலமரத்து நிழலாகத் தெரிகிறது.

ராசாக்கிளி ராவுத்தர் புதுக்கோட்டையை சேர்ந்தவர். இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு அதாவது விபச்சாரத் தடைச்சட்டம் அமுலானதும் பிழைப்பிற்காக திருநெல்வேலிக் குக் குடியேறினார். அங்கே தொடங்கிய தொழில்தான் இது! புதுக்கோட்டையிலிருந்து போகும் போதே நான்கு குமரிப் பெண்களை உடன் அழைத்துப் போய்விட்டார். அதிக மூலதனம் போட்டு நாணயமாக நடத்தும் வியாபாரத்தை விட இதில் அபரிமித லாபம் கிடைப்பதை ராசாக்கிளி தெளிவாக உணர்ந்து கொண்டார்.

பத்து வருஷங்களுக்குள்ளாக ராசாக்கிளி திருநெல்வேலி யில் ஒரு செல்வந்தராகி விட்டார். பணக்காரர்களை மதித்துப் பழக்கப்பட்ட பாமரர்கள், ராசாக்கிளியை மட்டும் எப்படிப் புறக்கணிக்க முடியும்! அவர் நடந்து வந்தால் எழுந்து நிற்பது, அவர் பேச்சைத் தட்டாமல் கேட்டு நடப்பது என்பதெல்லாம் அந்தத் தெருவுக்கே கைவந்த கலையாகி விட்டது. எதிர்த்துப் பேசினால் எந்த அதிகாரியிடமாவது பிடித்துக் கொடுத்து விடு வார்; பிறகு அவரே போய் மீட்டுக்கொண்டு வருவதாக பாசாங்கு செய்வார்; எப்படியோ ராசாக்கிளி திருநெல்வேலி யில் ஒரு 'பாப்புலர்' மனிதராகி விட்டார்.

படிக்காதவர்கள் சில நேரங்களில் சிந்தனையாளர்களைப் போல் பதில் சொல்லிவிடுகிறார்கள். ராசாக்கிளி தொழில்

விபச்சார மாளிகை நடத்துவது; யாராவது அவரைக்கேட்டால் "வட்டிக் கடைக்காரன் பணத்தை வாடகைக்கு விடுவதைப் போல சைக்கிள் கடைக்காரன் சைக்கிளை வாடகைக்கு விடுவதைப்போல நான் ரதிக்கிளி மாதிரிப் பெண்களை வாடகைக்கு விடுகிறேன்; இதுவும் ஒரு தொழில் தானே! திருடினால் குற்றம், கொலை செய்தால் குற்றம் பிறருக்கு இன்பத்தைக் கொடுத்து அதற்கு பணம் வாங்கிக்கொள்வது எப்படி குற்றமாகும்? சுவையான ஹோட்டலில் சாப்பிட்டால் ஏற்படும் திருப்தியைவிட எனது மாளிகைக்கு வந்தால் அதிகமான மனத்திருப்தி கிடைக்கும்'' என்று விளக்கம் தருவார் ராவுத்தர்.

ராசாக்கிளிக்கு என்றைக்கும் போலீசில் பயம் இருந்ததில்லை ஏனென்றால் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் ராசாக்கிளியின் வசந்த மண்டபத்திற்கு வராத போலீஸ் அதிகாரிகளே இல்லை.

சுபத்ரா திருநெல்வேலிக்கு வந்து பத்து நாட்களாகி விட்டன. அசோகவனத்துச் சீதையைப்போல ராசாக்கிளி அவளைத் தனிமைப் படுத்திவைத்திருந்தார். இடையிடையே தூதுகள், மிரட்டல்கள் நடந்தன. எதற்கும் சுபத்ரா பணியவில்லை.

"சுபத்ரா, நான் யாருக்கும் இவ்வளவு அவகாசம் அளித்ததில்லை! இன்னும் இரண்டே தினங்கள் உனக்குத் தருகிறேன். அதற்குள் உன் மனதை நீ சரிப்படுத்திக் கொள்ளவேண்டும். எனக்கு ஐந்து வருஷங்களாகக் கைராசிக்காரராக இருந்துவரும் காசியப்பர் நாளை மறுதினம் வருகிறார்'' என்று எச்சரித்துப் போய் விட்டார் ராசாக்கிளி.

அந்த நாளும் வந்து விட்டது. காசியப்பர் ஜவ்வாதுப் பொட்டு கமகமக்க குறித்த நாளில் வந்து விட்டார்.

ராசாக்கிளி காசியப்பருக்கு புது மாப்பிள்ளைக்கு அணிவிப்பதைப்போல் மாலை அணிவித்து வரவேற்றார்.

மாடியில் சுபத்ராவின் அறையில் வாசனைகள் தெளிக்கப் பட்டிருந்தன. ஊதுபத்திகள் ஒரு பக்கம் கண்ணீரைப் புகை

யாகக் கக்கிக் கொண்டிருந்தன. சுபத்ராவிற்காக வாங்கி வந்த ஒரு பந்து மல்லிகைப்பூ மேஜையில் சீண்டுவாரற்றுக் கிடந்தது. வெள்ளிக் கூஜாவில் நயம் பசும்பாலும், அதனருகே இரு ஆப்பிள் பழங்களும் காத்திருந்தன.

ராவுத்தர், காசியப்பரை மரியாதையுடன் உள்ளே அழைத்து வந்தார்.

"சுபத்ரா; நானும் போகுது போகுதுனு பார்க்கிறேன். நீயோ உச்சாணிக் கொம்பிலே ஏறிக்கிட்டே போறே! உன்னை விட ராணிகளையெல்லாம் பாத்தவரு இவரு! எங்க முதலாளி கிட்டே இன்னுக்கி நீ முறையா நடந்துக்கல்லையினு என் சுய ரூபத்தைக் காட்டித்தான் ஆகணும்! என்னிடத்திலே மாட்டை விரட்டும் தாருக்கம்பு, குதிரையோட்டும் நீளச்சவுக்கு, மனுசனை வதைக்கிற திருக்கைவாரு — எல்லாமே இருக்குது!" என்று தனது கொடிய குரலால் நெருப்பைப் பொழிந்து விட்டு ராசாக் கிளி கிடுகிடுவென்று இறங்கிப் போய் விட்டார்.

கதவுகள் சாத்தப்பட்டன. மல்லிகைப்பூவின் நறுமணமும் ஊதுபத்திகளின் வாசனைப்புகையும் வெளியேற வழியில்லாமல் ஆலிங்கனம் செய்து கொண்டன. ஆனால் காசியப்பரும் சுபத்ராவும் ஒருவரை ஒருவர் தீண்டாமல் சண்டைக்காரர்களைப் போல பிரிந்தே உட்கார்ந்திருந்தார்கள்.

நேரம் செல்லச் செல்ல காசியப்பருக்கு வியர்வை கொட்டத் தொடங்கியது. ஜவ்வாது கரைந்து ஒழுகியது.

மனிதன் சாப்பிடுவதற்கே பசி என்ற உணர்ச்சி தேவைப் படும் போது சுகபோகங்களுக்கு மட்டும் அப்படிப்பட்ட உணர்ச்சி தேவைபடாமல் போகுமா? அதனாலேயே காசியப்பர் மிருகத்தனமாக நடந்து கொள்ளவில்லை. அவர் அச்சம் கலந்த உணர்ச்சியில். சுதந்திரமில்லாத உணர்ச்சியில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தார். அவர் உள்ளம் என்றும் இல்லாத அளவுக்குப் படபடத்தது.

"உன் பெயரையாவது உன் வாயால் சொல்லேன்; உன் குரலாவது எனக்கு இன்பமூட்டட்டும்."

சுபத்ராவிடமிருந்து எந்த பதிலுமில்லை!

காசியப்பர் கனிவாகப் பேசினார். "உனக்கு இஷ்டமில்லா விட்டால் எனக்கும் அவசியமில்லை. ஏதோ ராவுத்தர் வழக்கம் போல் அழைத்தார்; வந்தேன். உன்னைப் பார்த்தால் எனக்கும் இரக்கம்தான் வருகிறது. எனக்கும் பிள்ளைகள் இருக்கின்றன. ஆனால் எனக்கு மனைவி இல்லை. இறந்துவிட்டாள். அதனால்தான் நான் இப்படி அலைகிறேன்" காசியப்பர் அருள் வந்தவரைப் போல சுபத்ராவின் எழிலில் மயங்கி உண்மைகளைக் கொட்டிக் கொண்டிருந்தார்.

இந்தக் கட்டத்தில் சுபத்ரா பேசத் தொடங்கினாள். அது காசியப்பருக்கு மீனாட்சியம்மனே வாய் திறந்து பேசுவது போலிருந்தது.

"என்னை நீங்கள் மன்னித்து எப்படியாவது காப்பாற்ற வேண்டும். நான் பி. ஏ. வரை படித்தவள். எனக்கு திருவனந்த புரத்தில் ஒரு இண்டர்வியூ. அதற்காக எர்ணாகுளத்திலிருந்து புறப்பட்டு திருவனந்தபுரத்திற்கு வந்தேன். வழியில் இரண்டு போலீஸ்காரர்கள் மடக்கி இங்கே கொண்டுவந்து சேர்த்து விட்டார்கள்.

காசியப்பர் எதுவும் பேசாமல் தலையணையில் சாய்ந்தபடி இருந்தார்.

"பாவங்களுக்குத் தண்டனை உண்டென்றால் புண்ணியங் களுக்கு சக்தி இல்லாமல் போகாது. அந்தப் புண்ணியத்தை நீங்கள் எனக்குச் செய்யுங்கள்." என்றாள் சுபத்ரா.

"சுபத்ரா, நீ இந்த முரடனிடமிருந்து தப்புவது மிகவும் கஷ்டம். உன் இரத்தத்தை உறிஞ்சிவிட்டுத்தான் இவன் உன்னை விடுவான். என்னால் உனக்கு செய்ய முடிந்த உதவி நீ என்னிடம் பவ்யமாக நடந்து கொண்டாய் என்று சொல்லுவதுதான். அவன் அதிகாலையில் வந்து — செட்டியார் கொடுத்த பணம் எங்கே என்று கேட்பான். அதற்காக உன் கையில் இருநூறு ரூபாய்களைத் தந்து விட்டுப் போகிறேன்" என்று முற்றிலும் மாறியவராய் காசியப்பர் பேசினார்.

சுபத்ரா பி. ஏ. படித்த சர்டிபிகேட்டும், அவளது இண்டர் வியூ கடிதம்தான் காசியப்பரை ஒரு தந்தை ஸ்தானத்திற்குக் கொண்டுபோய் விட்டது.

காசியப்பர் புறப்படும்போது சுபத்ரா ஒரு துண்டுச் சீட்டை அவரிடம் கொடுத்தாள் அவர் அந்தச் சீட்டை அந்த இடத்தில் பிரிக்க விரும்பாமல் வெளியேறிவிட்டார்.

சுபத்ராவின் குடும்பம் கண்ணீரில் மிதந்தது. அவளுடைய தாய், தகப்பன், சகோதரன் எல்லோருமே இருட்டறையில் அடைக்கப்பட்ட கொக்குகளைப் போல் திகிலடைந்து போய் விட்டார்கள்.

"எங்கள் சுபத்ரா மினு மினு என்று இளமைப் பூரிப்பில் மின்னிக் கொண்டிருந்தவளாயிற்றே, அவள் எந்தக் கழுகின் கையில் சிக்கினளோ, உயிரோடுதான் இருக்கிருளோ, இறந்து தான் போய் விட்டாளோ?" என்று அவர்கள் தினசரி புலம்பிக் கொண்டிருந்தார்கள்.

இரண்டு மாதங்கள் கழித்து அவர்களுக்கு ஒரு கடிதம் வந்தது. காசு இல்லாமல் தவிக்கும் ஹாஸ்டல் மாணவனுக்கு தெருவில் ஒரு மணிபர்ஸ் கிடைத்ததைப்போல் மகிழ்ச்சியோடு கடிதத்தைப் பிரித்தார்கள்.

"அன்புடையீர், வணக்கம். நான் உங்களில் யாருக்கும் அறிமுகமில்லாதவன். இருந்தாலும் நான், பிள்ளைப் பாசத்தை உணர்ந்தவன் என்ற முறையில் இந்தக் கடிதத்தை எழுதியுள்ளேன்.

செல்வி சுபத்ரா திருநெல்வேலியில் கிருஷ்ணராசபுரத்தில் உள்ள ஒரு விபச்சார மாளிகையில் சிக்கிக் கொண்டு ஒற்றைச் சிறகினல் துடித்துக்கொண்டிருக்கும் பறவையைப் போல தரையில் குதித்துக் கொண்டிருக்கிருள். அந்த விபச்சார விடுதி ராசாக்கிளி என்ற முரடனல் நடத்தப்பட்டு வருகிறது.

இப்படிக்கு
காசியப்பர்."

கடிதம் கிடைத்த மறு கணமே சசிகுமார் திருநெல்வேலிக் குச் சென்றான். அங்கே தக்க உதவியோடு சசி அந்த விபச்சார மாளிகைக்குப் போனான். ராசாக்கிளி வழக்கம்போல இன்முகத் தோடு சசியை வரவேற்றான்.

முதலில் சசிக்கு டீ வந்தது—அடுத்து வெற்றிலைபாக்குத் தட்டு வந்தது. சசி எதையும் தொடவில்லை. அவனது விழிகள் கதவு இடுக்குகள், ஜன்னல் திரைகள்—இவைகளையே துளாவிக் கொண்டிருந்தன.

"தம்பி மாடிக்குப் போகலாமா?" பரிவோடு கேட்டான் ராசாக்கிளி.

கூட வந்தவர்களிடம் ஒரு சிக்கினை கொடுத்து விட்டு சசி, ராவுத்தரைப் பின் தொடர்ந்து மாடிக்குப் போனான்.

ஒரு சின்ன அறை; அதில் இரண்டு பேர் படுக்கக்கூடிய ஒரு கட்டில். அந்தக் கட்டிலைச் சுற்றித் தழுவியபடி ஒரு ரோஜா நிறக் கொசு வலை.

இதெல்லாம் சசிக்கு புது அனுபவம். துப்பறியும் நாயைப் போல் அவன் மோப்பம் பிடித்துக்கொண்டு சென்றானே தவிர தப்புச் செய்யப் போகிறோம் என்ற எண்ணத்திற்கு அவன் உள்ளத்தில் அணுவளவும் இடம் கொடுக்கவில்லை.

"பேபி!"

ஒருத்தி வந்தாள்.

"இவளைப் பிடிக்கிறதா? இவள் மைசூர்க்காரி."

பிடிக்கவில்லை என்பதற்கு அறிகுறியாக சசி தலையை ஆட்டினான்.

"பாப்பா!"

இன்னொருத்தி வந்தாள்

"இவள் கும்பகோணம், நன்றாக பரதநாட்டியம் ஆடுவாள்!'

“இவளையும் எனக்குப் பிடிக்கவில்லை. வேறு ஆள் இருக்கிறதா?”

ராசாக்கிளியிடம் யாரும் இப்படிப் பேசியதே இல்லை. காண்பித்தவளை அழைத்துக்கொண்டு கட்டிலறைக்குப் போய்விடுவதுதான் வருகிறவர்களின் பழக்கம்.

“தம்பி, நீ சென்ற மாசமே வந்திருக்க வேண்டும். சுபத்ரா என்ற ஒரு மலையாளப் பெண் இருந்தாள். ரதிகூட அவளுக்கு வேலைக்காரியாகத்தான் இருக்கமுடியும். அவள் ஓடிப்போய்விட்டாள்” என்று ராசாக்கிளி சொன்னபோது சின்னக் குழந்தை வைரக்கடுக்கனைத் தண்ணீரில் எறிந்துவிட்டதைப் போல சசி திகைத்துவிட்டான்.

“என்ன தம்பி இப்படிப் பார்க்கிறே?”

“அவளைத்தான் நான் தேடி வந்தேன்; ஆனால் அவள் பறந்துவிட்டாள். அவள் கெட்டுப்போய் விட்டாளா?”

இதைக் கேட்டு ராசாக்கிளி பலமாகச் சிரித்தான். அது பழைய காலத்துப் பாதுஷாக்களின் சிரிப்பைப்போல சுவர்களில் மோதி எதிரொலித்தது.

‘என்ன தம்பி இப்படிக் கேக்கிறே! கழுதைகள் காணமல் போனா குட்டிச்சுவர்களில் பார்க்கணும்; காவடிகள் காணமல் போனால் குன்றக்குடியிலே தேடணும்; அது மாதிரித்தான் இந்த மாளிகையும். கெட்டுப்போன பெண்கள் இங்கே வருவாங்க; இல்லாட்டா கெட்டுப்போக விரும்புகிற பெண்கள் இங்கே வருவாங்க! இங்கே வந்தீங்கன்னா இரண்டு வகையானவர்களையும் சந்திக்கலாம்.”

இதைக் கேட்டதும் சசிக்குத் தலை சுற்றியது.

“சுபத்ரா முறிந்த பாலாகிக் கெட்டுப்போய் விட்டாளா?”

“இருக்காது; அப்படியானால் அவள் ஏன் இங்கிருந்து ஓட வேண்டும்? நெய்யில் பால் மறைந்து கிடப்பது உண்மையானால் செத்துப்போன பால்தான் நெய்யாகிறது என்பதும் உண்மை,

ஆகையால் என் தங்கை நெய்யாவதற்காக ஓடிப்போயிருக்கலாம் அல்லவா?"

இந்த மனப்போராட்டத்துடன் சசி அந்த மாளிகையை விட்டு வெளியேறினான்.

"கிண்ணு!"

"அத்தான்"

"இதோ புத்தகம் ஒரு கர்ப்ப ஸ்திரீக்கு என்னென்ன அறிகுறிகள் தோன்றும் என்பதெல்லாம் இந்தப் புத்தகத்தில் இருக்கின்றன. நீ இதைப் படித்து அதன்படி நடந்து கொள்ளவேண்டும். சிலபேர் வாழ்க்கை முழுவதும் நடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நீயும் நானும் லட்சியத்திற்காக கொஞ்ச நாட்களுக்கு நடிக்கவேண்டும் என்று செல்லமாக அவள் கன்னத்தில் தட்டினான். பசுவின் உடம்பெல்லாம் பரவியிருக்கும் ரத்தம்தான் மடுவிற்கு பாலாக வந்து பயனளிப்பதுபோல் பெண்ணின் உடம்பெல்லாம் துளிர்த்து நிற்கும் இளமை அனைத்தும் ஒன்று திரண்டு அவள் கன்னத்தில் குவிந்து தன் கணவனை மகிழ்விக்கிறது. அதிலும் கண்ணுத்தாள் தேவசுந்தரி மாதிரி அழகுடையவள். நடுத்தர வயதுக்கு அவள் வந்துவிட்டிருந்தாலும் குழந்தையில்லாத காரணத்தால் குன்றாத இளமையோடு விளங்கினாள். அவளது உடலின் ஒவ்வொரு பகுதியும் ஜல்லிக் கட்டுக் காளையின் அவயங்களைப்போல் திணவெடுத்து நின்றன. அரும்பு மல்லிகைகளை ஆரமாகத் தொடுத்தது போன்ற அவளது பல்வரிசை அரைகுறையாகத் தெரியும்போது திருவில்லிபுத்தூர் ஆண்டாளே தரிசனம் தருவதுபோல் இருக்கும். பீமனின் வலிமையைக் கண்டு துரியோதனாதியர் பொறாமைப்பட்டதைப் போல கண்ணுத்தாளின் அழகைப் பார்த்து பொறாமைப்படாத பெண்களே இல்லை!

கண்ணுத்தாள் அதிகமாக வெளியில் வருவதில்லை. தன் உடம்பை யாரும் புரிந்து கொள்ளும்படியாக அவள் நடந்து கொள்வதைத் தவிர்த்து வந்தாள். கள்ளத்தனமாகக் கர்ப்பம்

தரித்தவர்கள் யாருக்கும் தெரியாமல் வயிற்றை மறைத்துக் கொள்வதைப்போல, கர்ப்பமே தரிக்காத கண்ணுத்தாளும் வயிற்றை மூடிக்கொண்டே நாட்களைக் கடத்தினாள். துன்பங் களும் கடமைகளும் பெண்களுக்குத்தான் அதிகம்: பாயசம் சாப் பிட்ட நாக்கில் நெய் படிவதில்லை; ஆனால் அதைச் சாப்பிடும் போது கையில் ஒட்டிக் கொள்ளும் நெய்யைத் துடைப்பது ஒரு வேலையாகவே வந்து விடுகிறது. அது மாதிரித்தான் மனித வாழ்க்கையும் சுவையெல்லாம் ஆண்களுக்கு; சுமையெல்லாம் பெண்களுக்கு.

ஒன்பது மாதம் ஆகிவிட்டது. ஊரிலிருந்து கடிதங்கள் வந்த வண்ணமிருந்தன. கண்ணுத்தாளைப் பிரசவத்திற்கு ஊருக்கு அனுப்பி வைக்கும்படி கண்ணப்பன் வீட்டிலிருந்தும், கண்ணுத் தாள் வீட்டிலிருந்தும் எழுதிக்கொண்டே இருந்தார்கள். கடிதங் களைப் படிக்க படிக்கக் கண்ணப்பனுக்கே ஒரு உணர்ச்சி பிறந்து விட்டது. கண்ணுத்தாள் உண்மையிலேயே கர்ப்பமாக கிடப்பது போன்ற உணர்வு அவனுக்கு வந்து விட்டது.

“அத்தான்!”

“என்ன கண்ணு?”

“மற்ற ஏற்பாடுகளையெல்லாம் செய்து விட்டீர்களா?”

“என்ன ஏற்பாடு?...... ஓ கோ அதைக் கேட்கிறாயா?”

இருவரும் புதிய தம்பதிகளைப்போல் பேசிக்கொண்டார்கள்.

“ஏய் கண்ணு, நீ உன் விருப்பத்தை எனக்குச் சொல்ல வில்லையே!... உனக்குப் பையன் வேண்டுமா, பெண் வேண் டுமா?”

“அடேயப்பா, நினைத்ததைப் பிறக்க வைக்கும் விஞ்ஞானி யைப் போல் கேட்கிறீங்களே!”

“உன்னைப் பொருத்த வரையில் நான் ஒரு விஞ்ஞானிதான் கண்ணு! நீ சிரித்துக் கொண்டே வாழவேண்டும்; நான் அதைக் கண்டு ரசித்துக் கொண்டே பொழுதைப் போக்க வேண்டும்’ இப்போது நான் இறங்கியிருப்பது அந்த அராய்ச்சியில்தான்.”

"அத்தான்!"

"உன் உள்ளம் மென்மையானது; மிகவும் நுணுக்கமானது அதனால்தான் உனது கவலைகளை அகற்ற பின்னலை அவிழ்ப்பது போல நான் நிதானமாகப் போய்க் கொண்டிருக்கிறேன்."

"எல்லாம் எனக்காகத்தான் செய்தீர்களாக்கும்! உங்களுக்கும் சேர்த்துத்தானே?"

"அது என்னவோ உண்மைதான்! ஊரார் முன்னே நானும் தலை நிமிர்ந்து நடப்பேன் அல்லவா!"

"இப்பவே கோட்டை கட்டாதீர்கள். எல்லாம் மங்களமாக முடியட்டும்!"

"இனி ஒன்றும் பயமில்லை. எல்லாவற்றையும் டாக்டர் கொரியனுக்கு ஒளிவில்லாமல் எழுதி விட்டேன். என்னைப் போலவோ, அல்லது உன்னைப்போல் மூக்கும் முழியுமாகவோ விக்ரகம் போல் ஒரு குழந்தையை ஏற்பாடு செய்து கொடு என்று எழுதியிருக்கிறேன்."

"தைமாதம் பத்தாம் தேதி வாக்கில் எனக்கு பிரசவமாகலாம் என்று அத்தைக்கு எழுதியிருக்கிறேன். அதை அனுசரித்து நாம் ஏற்பாடு செய்யவேண்டும்."

"குறித்த நேரத்தில் உனக்குப் பிரசவமாகும்; பயப்படாதே!" என்று கொஞ்சலாகச் சொல்லிவிட்டு கண்ணப்பன் திருவனந்தபுரத்திற்குப் புறப்பட்டான்.

அவன் போய்க் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் சசிகுமார் வந்தான்.

"தலைவர் எங்கே?"

"அவர் திருவனந்தபுரம் போயிருக்கிறார்! என்ன, விசேஷம் உண்டா சசி?"

"இரண்டு வருஷத்திற்கு முன் காணாமல் போன என் தங்கை

சுபத்ராவிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது; அது சம்பந்தமாக தலைவரை யோசனை கேட்க வந்தேன்."

"அப்படியா, ரொம்பவும் நல்லது சசி! உங்கள் அப்பாவும் அம்மாவும் மிகவும் சந்தோஷப்பட்டிருப்பார்களே!"

"இல்லை! சுபத்ரா இறந்து விட்டதாக எண்ணி ஒருவாறு அவர்கள் கவலையை மறந்திருந்தார்கள். இப்போது அவள் திரும்பியது அவர்களை வாட்டி வதைக்கிறது."

"இது என்ன வேடிக்கை சசி! காணமல் போன மகள் திரும்பிவந்ததில் என்ன சங்கடம்? ரத்தபாசம் கூடவா உன் பெற்றோர்களுக்கு இல்லாமல் போய் விட்டது?"

"இல்லை சிஸ்டர்! எனக்கு அதை வெளிக்காட்டிக் கொள்ளவே வெட்கமாக இருக்கிறதே!"

"சும்மா சொல்லு! என்னிடம் சொல்லுவதற்கு உனக்குக் கூச்சம் வரலாமா? என்ன நடந்தது சசி?"

சசி, தலை கவிழ்ந்தபடி சட்டைப் பைக்குள்ளிருந்து ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினான். அது சுபத்ரா எழுதிய கடிதம்.

கண்ணுத்தாள் மனதுக்குள்ளேயே கடிதத்தைப் படித்துப் பார்த்தாள். அவள் முகம் கறுத்தது.

எதிரே நின்ற சசி, பத்து நாட்கள் பட்டினி கிடந்தவனைப் போல் சோர்ந்து போயிருந்தான்.

கண்ணுவால் அவனுக்குச் சமாதானம் சொல்லத் தெரியவில்லை. கையிலிருந்த கண்ணாடிப் பாத்திரம் தரையில் விழுந்து நொறுங்கி விட்டதைப்போன்ற உணர்வு சசிக்கு! எந்த விஷயத்தையும் ரகசியமாக வைத்துக்கொண்டால் குடும்பம் தப்பித்துக் கொள்ளும் என்ற புத்திமதியை சசிக்கு எப்படிச் சொல்லுவது என்ற மனக்குழப்பம் கண்ணுவுக்கு!

உலகில் இரண்டு பெண்களைத்தான் நல்லவர்கள் என்று

சொல்லுவார்கள். ஒருத்தி செத்துப் போனவள், இன்னொருத்தி காணமல் போனவள். இதில் சுபத்ரா இரண்டும் கெட்டவளாக வந்து விட்டதாக சசிக்கு நினைப்பு.

சில நேரங்களில் மனப்பூர்வமான ஆறுதல் மொழிகள் கூட வெறும் சடங்கு வார்த்தைகளாகி விடுகின்றன. கணவனை இழந்து கஷ்டப்படும் இளம் பெண்ணுக்கும், அவமானம் தாங்காமல் அலறித்துடிக்கும் பெரிய மனிதனுக்கும் ஆறுதல் சொல்லுதல் பிச்சைக்காரனுக்குச் செல்லாக் காசுகளை வழங்குவதைப் போலாகி விடுகிறது.

சசி நல்லவன். பண்பாளன். அவன் தகப்பன் மலையாளியானாலும் தாய் தமிழச்சி என்பதால் அவனுக்கு கண்ணப்பனிடமும் கண்ணுத்தாளிடமும் தனி அன்பும் மரியாதையும் இருந்தது.

சுபத்ரா மூட்டிய தீ அவன் உள்ளத்தில் அணையாத நெருப்பாக ஜுவாலை விட்டு எரிந்தது.

டாக்டர் கொரியன் பரபரப்பாக இருந்தார். மெட்டர்னிட்டி வார்டு சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

மருத்துவமனைக்குள் நுழைந்த கண்ணப்பனுக்கு— ஏதோ ராஜகுடும்பத்தின் பிரசவம் நடப்பதுபோல் தோன்றியது. போனவுடன் அவன் டாக்டர் கொரியனைச் சந்திக்கமுடியவில்லை. அரை மணி நேரம் கழித்துத்தான் கொரியன் வார்டை விட்டு வெளியே வந்தார்.

"ஹல்லோ! கண்ணப்பனா?"

"எஸ் டாக்டர்!"

"நல்ல நேரத்தில் வந்து விட்டாய். உன் கடிதத்தைப் பார்த்தேன். உனக்கு எப்படியும் உதவி செய்ய வேண்டும் என்று தீர்மானித்தேன். இன்றைக்கு அது நிறைவேறி விட்டது."

"உண்மையாகவா? குழந்தையை நான் பார்க்கலாமா? யாருடைய குழந்தை அது?"

"அதெல்லாம் நீ தெரிந்துகொள்ளக்கூடாது; தேவையு

மில்லை! ஆனால் ஒன்று! நீ ஆண் குழந்தை கேட்டாய்; உனக்கு இன்று கிடைக்கப்போவது பெண் குழந்தைதான். குழந்தை மிகவும் அழகானது. சிருஷ்டியின் ரகசியங்களையெல்லாம் இறைவன் அந்தக் குழந்தையிலேயே திணித்திருக்கிறான். கன்னத்தில் ஒரு மச்சம்; குங்குமச்சிமிழ் போல் குவிந்த மூக்கு; வைரக்கற்களுக்கு மத்தியில் நீலம் பதித்தது போல ஒளி பொருந்திய விழிகள்."

"பெற்றோர்களைத் தெரிந்துகொண்டால் நன்றி கூறலாம்!"

"அந்த வகையில் குழந்தை துர்பாக்கியசாலி; தாயார் இறந்து விட்டாள். சுபத்ரா அவள் பெயர்!"

"சுபத்ரா!"... ஒரு கணம் யோசித்தான். சசியின் தங்கை பெயர் சுபத்ராதானே! அவளாகத்தானிருக்கும். மனதுக்குள்ளே ஒரு அரிப்பு!

"ஏன் டாக்டர், அந்தக் குழந்தைக்குத் தந்தை என்ன ஆனார்?"

"அவன்ஒரு பெரிய பணக்காரனாம்! இரண்டு வருஷங்களுக்கு முன்புதான் இருவருக்கும் திருச்செந்தூர் கோயிலில் திருமணம் நடந்திருக்கிறது."

"அவன் ஏன் இவளைக் கைவிட்டான்? சுபத்ரா ஏதாவது விவரம் சொன்னாளா?"

"உனக்கு எதற்கு அந்த ஆராய்ச்சி எல்லாம்? ரிஷிமூலம் எவ்வளவு அருவருப்பானதோ அதைவிட ஆஸ்பத்திரியில் வாங்கும் குழந்தைகளின் பூர்வீகம் அருவருப்பானது" என்றார் டாக்டர் கொரியன்.

பொங்கி வழியும் பூரிப்போடு, கண்ணாத்தாளை அழைத்து வருவதற்காக கண்ணப்பன் காற்றாய்ப் பறந்தான் எர்ணாக்குளத்திற்கு.

"கண்ணா"

மகிழ்ச்சியோடு வரவேற்ருள் கண்ணுத்தாள்.

"ஊருக்குத் தந்தி கொடுக்க வேண்டியதுதான்; உனக்குப் பெண்குழந்தை பிறந்திருக்கிறது; தாயும் சேயும் நலம்!" என்ருன் கண்ணப்பன். அவன் உள்ளம் தர்மயுத்தத்தில் வெற்றி கண்டவனைப்போல் உவகையில் திளைத்து விட்டது.

"புறப்படு! இப்பவே நாம் திருவனந்தபுரத்திற்குப் புறப் படவேண்டும். அங்கு பத்து நாட்கள் படுக்கையில் இருக்கவேண் டும்!" ஊரிலிருந்து எல்லோரும் ஆஸ்பத்திரிக்கே வரவேண்டும். ஏன் கண்ணு, ஏதாவது தாலாட்டுத் தெரியுமா உனக்கு?"

"என்னத்தான் இப்படிக் கேட்கிறீர்கள். ஒரு பெண் புஷ்ப வதியானவுடன் ரகசியமாக மனப்பாடம் செய்வதே தாலாட் டுத்தானே! அதுதானே ஒரு பெண்ணுக்குத் தாய் வீட்டுச் சொத்து!"

"எங்கே பாடிக்காட்டு பார்ப்போம்!"—கண்ணப்பன் புது மாப்பிள்ளையைப் போல் கொஞ்சினுன்.

அதற்கு கண்ணுத்தாள்,

**"ஸ்ரீரங்கம் ஆடி**
**திருப்பாக் கடலாடி**
**மாமாங்கம் ஆடி**
**மதுரைக் கடலாடி**
**சங்கு முகமாடி**
**சாயா வனம் பார்த்து**
**முக்குளமும் ஆடி**
**முத்தி பெற்றுவந்த கண்ணே"**

— என்று இசை கூட்டிப் பாடிக்காட்டினுள்.

"கோயிலூர்!"

கண்ணப்பன் குழந்தையுடன் ஊருக்கு வந்துவிட்டான். ஊரில் ஒரே பரபரப்பு! உறவினர்கள் மத்தியில் விதவிதமான கிசுகிசுப்பு!

"கண்ணுத்தாளின் பொண்ணைப் பாத்தியா? அவ சித்தப் பனை அப்படியே உரிச்சுவச்சமாதிரிப் பொறந்திருக்கா!"

"எனக்குக்கூட அந்த மாதிரித்தான் தெரியுது... பேத்தி தாத்தா மாதிரிப் பொறக்கலாம், தவறினு அம்மாவைப் பெத்த ஆயா மாதிரிப் பொறக்கலாம்; சித்தப்பன் மாதிரி பொறக்கிறது இதுதான் முதல் தடவை!"

"ஏண்டி இதுகூடவா ஒனக்கும் புரியல்லே? இவ்வளவு நாளாகப் பொறக்காத புள்ளே இப்ப மட்டும் எப்படி பொறந்த தாம்!... இப்ப புரியுதா விஷயம்?"

"எனக்கு ஒண்ணும் புரியாமெ இல்லே; அதை என் வாயாலே சொல்லக்கூடாதேனு யோசிச்சேன்"

"அதெல்லாம் அவுங்க வீட்டுக்குள்ளே பண்ணிக்கிட்ட ஏற்பாடு!"

இந்தக் கிசுகிசுப்பெல்லாம் கண்ணப்பனுக்கும் தெரியாமல் இல்லே.

குழந்தையின் மூக்கு, விழிகள், கன்னத்திலே கிடந்த மச்சம் எல்லாமே சொக்கநாதனின் அச்சாகத்தான் இருந்தது.

கலைத்துவிட்ட தேன் கூட்டைப் போல் கண்ணப்பனின் உள்ளம் இதனுல் கலவரமடைந்தது.

மூன்று மாதம் கழித்து குழந்தைக்குப் பெயர் சூட்டு விழா நடந்தது. அந்த விழாவிற்கு டாக்டர் கொரியனேப் பிரதம விருந்தாளியாகக் கலந்துகொள்ளும்படி கண்ணப்பன் கேட்டிருந்தான்.

அழைப்பை ஏற்றுக்கொண்டு டாக்டரும் வந்திருந்தார். சொக்கநாதனும் வந்திருந்தார்.

விழா இனிதாக முடிந்தது. டாக்டர் விடை பெற்றுப் போகும் போது,

"கண்ணப்பா, இங்கே வந்த பிறகுதான் எனக்கு ஒரு உண்மை தெரிந்தது."

"நீ என்ன சொல்லப் போகிருய் என்பதை நான் யூகிக்காமல் இல்லே டாக்டர்?"

“உன் தம்பியைப் பார்த்த பின்னர்தான், கண்ணாத்தாளின் மடியில் தவழும் குழந்தை சொக்கநாதனுக்குப் பிறந்தது என்பதைத் தெரிந்துகொண்டேன்.”

“அது எப்படி உனக்குத் தெரிந்தது?”

“சுபத்ரா என்னிடம் அட்மிட் ஆகும்போது கொண்டு வந்த அவர்கள் கல்யாணப்படத்தில் இவர்தான் இருக்கிறார்' என்றார்.

கண்ணப்பன் கண்கள் கலங்கின. அப்போது கண்ணாத்தாள் உள் வீட்டில் குழந்தையைத் தொட்டிலில் போட்டுத் தாலாட்டிக் கொண்டிருந்தாள்.

“உனக்கு இப்போது இன்னொரு பொறுப்பும் கூடுகிறது. இந்த ரகசியமும் கண்ணாத்தாளுக்குத் தெரியக் கூடாது; ஏனென்றால் ஒரு உத்தமி மலடியாக வாழ விரும்பினாலும் விரும்புவாளே தவிர மானம் இழந்தவளாக வாழ விரும்பவேமாட்டாள்” என்றார் கொரியன்.

உடலை அடக்கி, நாவை அடக்கி, மனத்தை அடக்கி தெய்வப் பிறவியைப்போல வாழ்ந்த கண்ணாத்தாள் இறுதிவரை ரகசியத்தை வெளியிடாமல் அந்தக் குழந்தையைத் தன் குழந்தையைப் போலவே சீரோடு வளர்த்துப் பெரியவளாக்கி திருமணமும் செய்து கொடுத்து விட்டாள். குழந்தை மலையாளத்திலே பிறந்ததால் பிற்காலத்தில் அவளுக்கு ‘மலையாளத்து ஆச்சி’ என்ற பட்டப்பெயரும் வந்து விட்டது.

★

# அருந்ததி கொலை வழக்கு

இன்ஸ்பெக்டர் இன்னாசி முத்து அன்றுதான் பொறுப் பேற்றார். வந்த அன்றே அவர் மேஜையில் இருந்த ஒரு கடி தத்தை உடைத்துப் படிக்க நேரிட்டது. அந்தக் கடிதம் தலையு மில்லாமல் வாலுமில்லாமல் மொட்டைக் கடிதமாக இருந்தது. அவருடைய சர்வீஸில் இப்படி எத்தனையோ மொட்டைக் கடி தங்களைப் படித்திருக்கிறார். பொறாமையினாலும் அவதூறாக எதிரிகளை மாட்டிவிடுவதற்காகவுமே இப்படி மொட்டைக் கடி தங்கள் எழுதுவது பழக்கமென்று இன்ஸ்பெக்டருக்குத் தோன்றி னாலும் அந்தக் கடிதத்தின் சாரத்தை அவரது உள்ளத்தின் ஒரு மூலையில் போட்டு வைத்துக்கொள்ளத்தான் செய்தார்.

**அன்புள்ள இன்ஸ்பெக்டர் ஐயா,**

**ஊருக்குக் கிழக்கே ஒரு மைல் தூரத்தில் களத்துமேடு ஒன்று இருக்கிறது. அந்த மேட்டிற்கு வடக்கே தற்போது புதிதாக அமைந் துள்ள மாங்கொல்லையில் தங்கக் கட்டிகள் புதைக்கப்பட்டிருக் கின்றன. நீங்கள் உடனே புறப்பட்டுச் சோதித்தால் அவை கிடைக் கும், இது சத்தியம்.**

இப்படிக்கு
**மாயக்கள்ளன்.**

இன்ஸ்பெக்டர் கடிதத்தைப் படித்துவிட்டு, முதலில் சிரித் தார்.

“பைத்தியக்காரன்! நான் எத்தனையோ பேருக்குக் காது குத்தியிருக்கிறேன். இவன் எனக்குக் காது குத்தப்பார்க்கிறான். புதையல் இருக்கிறதாம்! புதையல்! இந்தத் தர்மப்பிரபு புதை யலை எடுத்துச் சர்க்காருக்குக் கொடுக்க நினைக்கிறாராம். எந்தப் பித்துக்குளிப் பயலாவது புதையல் இருப்பது தெரிந்தால் தன்

பெண்சாதியிடம் கூடச் சொல்லாமல் ரகசியமாகத் தோண்டி எடுப்பானே தவிர போலீசுக்கா சொல்லுவான்?''—என்று முணு முணுத்துக் கொண்டு அந்தக் கடிதத்தை மேஜைக்குள் தூக்கி யெறிந்தார்.

இன்ஜுசிமுத்து அந்த ஊருக்குப் புதிதாக வந்த இன்ஸ்பெக் டர். அதற்கு முன்பு அவர் சென்னையில் உத்தியோகம் பார்த் தார். திடீரென்று அவர் எதிர்பாராத வகையில் அவரை மதுரை மாவட்டத்திற்கு மாற்றிவிட்டார்கள். புதிய இடத்திற்கு வந்த தும் அந்த ஸ்டேஷனிலேயே ஊறிப்போயிருந்த போலீசுக்காரர் களிடம் உள்ளூர் விவகாரங்களையெல்லாம் கேட்டறிந்து கொண்டிருந்தார். அது போலீசு அதிகாரிகளின் பழக்கம். புதிய ஊரில் யார் யாரிடம் எப்படி எப்படி நடந்து கொண்டால் என் னென்ன நடக்கும் என்பதற்கு அதெல்லாம் ஒரு அனுபவ ரீதி யான ஜாதகம்.

சேர்மன் சிங்காரவேலு மிகவும் நல்லவர். ஆனால் இரவு நேரங்களில் மட்டும் தெருவிலே உலாத்திக்கொண்டு திரிவார். அவரைப் போலீசார் ஒன்றும் கேட்கக்கூடாது. அப்படி யாரா வது கேட்டுவிட்டால் தண்ணீர் இல்லாத காட்டிற்கு மாற்றி விடுவார்.

''இந்த ஊரிலேயே பெரிய பணக்காரர் தசரதன் செட்டி யார். எல்லோரும் அவரைத் தசரதச் சக்கரவர்த்தி என்று அடை மொழி போட்டு அழைப்பார்கள். ஏழைக்கு உபகாரி. இருந்தா லும் வீட்டு வேலைக்காரியைக் கூட விட்டு வைக்கமாட்டார்.

''அபிமன்யு இந்த ஊர் அரசியல்வாதி. ஆர்ப்பரிக்கப் பேசு வார். தனவந்தர்களையெல்லாம் ஆழக் குழிதோண்டிப் புதைக்க வேண்டும் என்பார், ஆனால் தசரதச் சக்கரவர்த்திக்கு மட்டும் அவர் பெட்டிப் பாம்பாய் விடுவார்.

''அரிச்சந்திரன் ஒரு இன்பார்மெண்ட். வெளித்தகவல்களை ஸ்டேஷனுக்குச் சொல்வதைப் போலவே நமது இலாகாத் தக வல்களையும் எதிரிகளுக்குச் சொல்லிவிடுவான். இரண்டுபக்கமும்

பீஸ் வாங்கும் பயங்கரப் பேர்வழி அவன். அவன் பேசுவதை கேட்க வேண்டுமே தவிர அவனுக்கு நாம் எதுவும் பதில் சொல்லி விடக் கூடாது.

— இன்ஸ்பெக்டர் இன்னாசி முத்து உத்தியோகம் பார்க்க வந்த இடத்தில் நெளிவு சுளிவுகளை இவ்வாறு கேட்டுத் தெரிந்து கொள்ளப் பதினைந்து நாட்கள் ஆகிவிட்டன. அதற்குள்ளாக இன்னொரு மொட்டைக் கடிதம் வந்து விட்டது. இந்தக் கடிதம் முதல் கடிதத்தை விடப் பயங்கரமானது. ஆனால் முதல் கடிதத்தை எழுதிய நபரேதான் இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறார் என்பதை இன்னாசிமுத்து தெரிந்து கொண்டார். படிக்கத் தெரிந்த ஒருவன் படிக்கத் தெரியாதவனைப்போல் அந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறான்.

"அன்புள்ள ஐயா,

இது எனது இரண்டாவது கடிதம். பண ஆசையினால் உடனே சென்று அந்த இடத்தைத் தோன்டி எடுப்பீர் என்று கருதி மாங் கொல்லையில் புதையல் இருப்பதாகப் போன கடிதத்தில் எழுதியிருந் தேன். உண்மை அது வல்ல. இந்தக் கடிதத்தில்தான் உண்மையை எழுதியிருக்கிறேன். நான் குறிப்பிட்டிருந்த அதே இடத்தில் தங்கக் கட்டி போன்ற ஒரு இளம் பெண்ணை வெட்டிப் புதைத்திருக்கிறார் கள். தயவு செய்து தாங்கள் இதை மொட்டைக் கடிதமாகக் கருதா மல் அந்த இடத்திற்கு விரைந்து சென்று தோண்டிப் பார்த்து உங்கள் கடமையை நிறைவேற்றுங்கள். கடிதங்களில் கையெழுத்து அவசியம் என்பதைவிட அந்தக் கடிதத்தில் அடங்கியிருக்கும் உண்மைகள்தான் போலீசு இலாகாவிற்கு மிகவும் தேவையானவை. ஆகவே கடிதம் யார் எழுதியது என்ற ஆராய்ச்சியில் இறங்காமல் கடிதத்தில் கண்டுள்ள தகவலைத் துப்பறிந்து உண்மைக் குற்ற வாளியைக் கண்டுபிடிப்பீர்களென்று நம்புகிறேன்.

இப்படிக்கு,
மாயக்கள்ளன்.

—இந்தக் கடிதம் இன்னாசிமுத்துவைக் கொஞ்சம் குழப்பத் தான் செய்தது. கடிதம் சரியோ தவறோ அந்த இடத்தைச்

சோதித்துப் பார்த்து விடுவது என்று அவர் முடிவு செய்து விட்டார். ஆனுல் அந்த இடத்திற்கு எப்போது போவது, எப்படிப் போவது என்பதை அவர் தீர்மானிப்பதில் தடுமாற்றம் அடைந்திருந்தார். தான் அந்த இடத்திற்குப் போகப் போகிற விஷயம் ஸ்டேஷனில் யாருக்கும் தெரியக் கூடாது என்று அவர் விரும்பினுர். ஏனென்ருல் போலீசு ஸ்டேஷனில் உள்ள ஒவ்வொரு கதவும் பேசக் கூடியது என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

அன்று இரவு அந்த இடத்திற்குப் போவது என்று தீர்மானித்து விட்டார். அதனுல் அன்று காலையிலிருந்தே அவர் ஸ்டேஷனுக்குப் போகவில்லை. தன்னுடையதிட்டத்தின் ஒரு சிறு அசைவு கூட அடுத்தவர்களுக்குத் தெரியக் கூடாது என்பதில் இன்ஞசி முத்து மிகுந்த அக்கறையோடிருந்தார். அதனுல்தான் அவர் கான்ஸ்டபிளிலிருந்து இன்ஸ்பெக்டர் ஆகியிருந்தார். இன்ஞசி முத்துக்கு அவரது மேலிடத்தில் நல்ல மதிப்பு இருந்தது.

சூரியன் அஸ்தமனமாகி விட்டது. மேலதிகாரிகளுக்கு எழுதி வெளியூரிலிருந்து ஐந்து போலீசுக்காரர்களை ரகசியமாக வரவழைத்துக்கொண்டு கடிதத்தில் குறிப்பிட்டிருந்த அந்த மாங்கொல்லைக்குப் புறப்பட்டார். யாரும் போலீசு உடை அணியவில்லை. இன்ஞசி முத்து தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு ஒரு மிராசுதாரைப் போலவும், கான்ஸ்டபிள்கள் அவரது நண்பர்களைப் போலவும், அவர் பின்னுல் சென்ருர்கள். இடத்தைத் தோண்டிப் பார்ப்பதற்கு ஒரேயொரு வெட்டியானை உடன் அழைத்துச் சென்ருர்கள். நல்ல இருட்டு! ஒருவர் முகம் ஒருவருக்குத்தெரியவில்லை. இன்ஞசிமுத்து கையில் வைத்திருந்த பாட்டரி விளக்கின் உதவியால் அனைவரும் மாங்கொல்லைக்குள் இறங்கிஞர்கள்.

இன்ஞசிமுத்து துப்பறிவதில் ஆற்றல் பெற்றவர். அந்த இடத்தைப் பார்த்ததும் தனக்கு வந்த கடிதங்களில் ஏதோ ஒரு உண்மை ஒளிந்து கொண்டிருக்கிறது என்று அவர் நினைத்தார். ஏனென்ருல் ஒரு நல்ல நெல் வயலில் திட்டமிடப்பட்டுத் திடீரென்று இருபத்தைந்து மாங்கன்றுகள் வைக்கப்பட்டிருந்தது தான் இன்ஞசிமுத்துவிற்குச் சந்தேகத்தைத் தூண்டியது. அந்த

இத்தனை மாங்கன்றுகளில் எந்த மாங்கன்றுக்கு அடியில் பிணத்தைப் புதைத்திருப்பார்கள் என்பதைக் கண்டுபிடிப்பது இன்னாசிமுத்து கோஷ்டிக்கு அடுத்த குழப்பமாக இருந்தது.

எந்தத் துறையிலும் திறமைசாலிகள் இல்லாமலில்லை. அதிலும் தமிழ்நாட்டின் காவல் துறையில் திறமைசாலிகளுக்குப் பஞ்சம் ஏற்பட்டதில்லை. கை விளக்கால் ஒரு முறை அந்த வயலை துழாவிப் பார்த்த இன்னாசிமுத்து குறிப்பிட்ட ஒரு மாங்கன்று அருகில் நின்று கொண்டு 'இந்தக் கன்றைத் தோண்டிப் பார்க்கலாம்' என்றார். அந்தக் கன்றைச் சுற்றி அழகாகப் பாத்திகட்டி புல் பூண்டுகளையெல்லாம் செதுக்கி வைத்திருந்ததால் இன்னாசி முத்துக்கு அந்தக் கன்றின் மீது சந்தேகம் ஏற்பட்டது.

வெட்டியான் வியர்க்க வியர்க்கத் தோண்டினான். அவருடைய கணக்கும், உழைப்பும் வீண்போகவில்லை. சிறிது நேரத்திற்குள்ளாக துர்நாற்றம் கிளம்பிவிட்டது. போலீசுக்காரர்கள் உற்சாகமாக வெட்ட ஆரம்பித்தார்கள். அடுத்து நீண்ட கருங் கூந்தல் மண்வெட்டித்தகட்டைப் பின்னிக்கொண்டு வெளியே வந்தது. அதற்குப்பிறகு வெட்டுவதை நிறுத்திவிட்டு, எல்லோருமாகச் சேர்ந்து கையில் தோண்டத் தொடங்கினார்கள். அரை மணி நேரத்திற்குள்ளாக அவர்களுக்கு உருவம் கிடைத்துவிட்டது. அழுகியும், அழுகாமலுமாக ஒரு பெண்ணின் பிரேதம் தோண்டியெடுக்கப்பட்டது. நடுத்தர வயதுடைய அந்தப்பெண் தங்க விக்கிரம் போலிருந்தாள். நைந்து பிதிர்ந்துபோன வாயில் புடவை அவள் அணிந்திருந்தாள். வெயிலில் காய்ந்த வாழை யிலையைப் போல அவள் உடம்பின் பசுமை வற்றிப் போயிருந்தது. அவள் அடித்துக் கொலை செய்யப்பட்டிருந்தாளா அல்லது விஷம் கொடுத்துச் கொல்லப்பட்டிருந்தாளா என்று போலீசு கோஷ்டியால் கண்டு பிடிக்க முடியவில்லை. அந்த சடலத்தின் எந்த இடத்திலும் வெட்டுக்காயங்கள் இல்லை. பிரேதத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தார்கள். ஒன்றும் புலப்படவில்லை. அவளது வலது கரத்தில் ஒரு பச்சை குத்தியிருந்தது. 'தசரதச்

சக்கரவர்த்தி' என்று அவள் பச்சை குத்தியிருந்தாள். இன்ஞசிமுத்து அதை ஒரு முறை படித்துப் பார்த்துவிட்டு திரும்பத் திரும்ப வாயால் முணுமுணுத்துக் கொண்டிருந்தார்.

அவர் அந்த ஊருக்கு வந்து பொறுப்பேற்றதும் "வீட்டு வேலைக்காரியைக்கூட விட்டு வைக்கமாட்டார்" என்று தசரதச் சக்கரவர்த்தியைப் பற்றிக் கேள்விப்பட்ட குறிப்புக்கள் அவருடைய உள்ளத்தில் கோடு கிழித்துக் கொண்டேயிருந்தன.

சடலத்தை மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பி அதனுடைய கருத்தை அறிந்தார் இன்ஞசிமுத்து. சடலத்தில் ஊமைக்காயங்கள் இருப்பதாகவும் அந்தப் பெண் சுருளச் சுருள அடித்துக் கொல்லப் பட்டிருப்பதாகவும் டாக்டர்கள் எழுதியிருந்தார்கள். அதற்குப் பிறகுதான் இன்ஞசிமுத்து கொலைவழக்கைப் பதிவு செய்தார்.

இன்ஞசிமுத்து, அவருடைய உத்தியோக காலத்தில் எந்த வழக்கிலும் தோல்வி கண்டதில்லை. அவர் நேர்மையில் துளியும் விலகியதில்லை. சொந்தம், நட்பு, தயவு, தாட்சண்யம் எல்லாவற்றையும் வீட்டில் இறக்கி வைத்துவிட்டுத்தான் ஸ்டேஷனுக்குப் போவார். இந்த வழக்கில் அவர் சபதம் எடுத்துக் கொண்டிருந்தார். குற்றவாளியைக் கண்டுபிடித்து அவனைத் தூக்கு மேடைக்கு அனுப்பியே தீர்வேன் என்று அவர் விடுத்த வீரசபதம் அந்த நகரத்தின் மூலை முடுக்குகளெல்லாம் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

தசரதச் சக்கரவர்த்தி என்று செல்லமாக அழைக்கப்பட்ட திரு. தசரதன் செட்டியார் கொச்சியிலுள்ள அவரது கடையில் இரண்டு மாதம் தங்கிவிட்டு ஊருக்குத் திரும்பியிருந்தார். அவர் இல்லாத நாட்களில் ஊரில் என்ன நடந்தது என்று அவருக்குத் தெரிய நியாயமில்லை அல்லவா! அதனுல் தசரதன் செட்டியார் வழக்கம்போல் அவரது காரியங்களில் ஈடுபட்டிருந்தார். வட்டிக் கடை, கமிஷன் கடை, மரக்கடை, விவசாயம் - இப்படிப் பல தொழில்கள் தசரதனுக்கு. எல்லாமே அவரது நேரடிப்பார்வையில் நடந்து வந்தன.

தசரதன் செட்டியாருக்கு குறிப்பிட்டுச் சொல்லும் அள விற்கு எதிரிகள் யாரும் அந்த ஊரில் இல்லை. அப்படி யாராவது தலையெடுத்தாலும் அவர்களை முளையிலேயே கிள்ளி விடுவார் செட்டியார். ஊருக்குப் புதிய அதிகாரிகள் யாராவது வந்தால் அவர்களுக்கு விருந்து வைத்து வலைபோட்டு விடுவார். அல்லது அவர்களாகவே வந்து செட்டியாரைப் பார்க்கும்படி செய்து விடுவார்.

இன்ஸ்பெக்டர் இன்னுசிமுத்து இந்த இரண்டு வழிகளிலும் சிக்காமல் இருந்தது தசரதனுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது இருந்தாலும் செட்டியாருக்கு ஒரு தெம்பு—என்றைக்காவது ஒரு நாளைக்கு இன்ஸ்பெக்டர் வந்துதானே தீரவேண்டும் என்று அடமாக நினைத்துக் கொண்டார்.

அன்று தீபாவளி.

ஊரில் உள்ள ஏழை பாழைகளெல்லாம் தசரதன் செட்டி யாரை வணங்கி நன்கொடை பெற்றுப்போனார்கள். குமாஸ் தாக்கள், குட்டிஅதிகாரிகள் அனைவருக்கும் தசரதன் செட்டியார் புத்தாடை வழங்கினர். கோவில் பட்டாச்சாரி குருசாமி குருக் கள் கூட செட்டியாரைப் பார்ப்பதற்கு வந்திருந்தார். செட்டி யாருக்கு மனத்திலே ஒரு உறுத்தல் — இவ்வளவு பேர் வந்தும் இன்னுசிமுத்து வரவில்லையே என்று! சிறிது நேரத்திற்குப் பிறகு செட்டியாரின் கார் டிரைவர் உள்ளே ஓடிவந்து "இன்ஸ்பெக்ட ரய்யா வருகிறார்" என்று சொன்னான்.

அப்போதுதான் செட்டியாருக்கு மனம் குளிர்ந்தது.

சிலரது கோபம் நுரை போன்றது. சூடு ஆற ஆற நுரையும் வற்றிப்போகும். செட்டியாரும் அப்படிப்பட்டவர்தான். 'உங் களைப் போல் உண்டா' என்று சொல்லி விட்டால் அவருக்குத் தலையில் மகுடம் சூட்டியது மாதிரி இருக்கும். இன்ஸ்பெக்டர் வருகிறார் என்று சொன்னவுடனே, அவரே உள்ளே எழுந்து போய் ஒரு தட்டில் ஒரு ஜரிகை வேட்டியை எடுத்து வைத்துக் கொண்டு வந்தார். செட்டியார் ஆசனத்திற்கு வருவதற்கும் இன்ஸ்பெக்டர் உள்ளே வருவதற்கும் சரியாக இருந்தது.

"வாங்க! வாங்க! நான் எதிர்பார்க்கவேயில்லை! மொத மொத நல்ல நாள் அன்றைக்கு வந்திருக்கிறீர்கள்" — என்று

மிகுந்த உற்சாகத்தோடு செட்டியார் இன்ஸ்பெக்டரை வர வேற்றார்.

பெண்ணின் சிரிப்பைக் காட்டிலும் போலீசின் சிரிப்புக்குப் பலவீனம் அதிகம் என்பதை உணர்ந்த இன்ஞசிமுத்து செட்டியாரின் உபசரிப்புக்கு எதுவும் பதில் சொல்லாமல் புருவத்தை நெறித்துக்கொண்டே உள்ளே நுழைந்தார்.

செட்டியாருக்கு மனம் சுருக்கென்றது. இருந்தாலும் அதை வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. "நீங்கள் இன்றைக்கு இந்தப் புத்தாடை அணிந்து கொள்ளவேண்டும். உங்களுக்காகவே வாங்கி வந்திருக்கிறேன்." செட்டியாரின் பேச்சை இன்ஸ்பெக்டர் காது கொடுத்துக் கேட்கவில்லை.

"எனக்குத் தீபாவளி கிடையாது. நான் வேதகாரன்...... மேலும் நான் வந்த விஷயம் வேறு நீங்கள் கொஞ்சம் ஸ்டேஷன் வரை வந்துவிட்டு வரவேண்டும்."

"அப்படியா! ஆயுதபூஜையன்றைக்குத்தானே ஸ்டேஷனிலேயே விழாக் கொண்டாடுவார்கள்! நீங்கள் வந்து தீபாவளிக்கும் விழாக்கொண்டாட ஏற்பாடு செய்திருக்கிறீர்களா! இதோ வந்துவிடுகிறேன்" — என்று கூறிவிட்டு, உள்ளே போய் ஒரு பட்டுச் சால்வையை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு செட்டியார் இன்ஸ்பெக்டருடன் வெளியே கிளம்பினார்.

மாலையிலேயே நகரில் பரபரப்பு ஏற்பட்டுவிட்டது. தெருவில் ஒருவரையொருவர் சந்திக்கிறவர்கள் தசரதன் செட்டியாரைப்பற்றியே பேச ஆரம்பித்தார்கள். கோயில், குளத்தங்கரை வயல், காடு, கடைவீதி எந்த இடமும் பாக்கியில்லாமல் தசரதன் செட்டியாரைப் பற்றியே பேசினார்கள்.

"தசரதன் செட்டியாரைப் பிடித்துக்கொண்டுபோய் போலீசிலே அடைச்சுப்புட்டாங்க! அவர் வச்சிருந்த வைப்பாட்டியைக் கொன்று புதைச்சுப்புட்டாராம். புதுசா வந்திருக்கும் இன்ஸ்பெக்டரய்யா புலிமாதிரி பாஞ்சு செட்டியாருக்கு விலங்குமாட்டி மதுரை ஜெயிலுக்கு அனுப்புச்சுட்டாராம்."

—இந்த உரையாடல் பலகாரக்கடையில் பத்துத் தேய்க்கும் வேலைக்காரியிருந்து படித்தவர்கள் மட்டம் வரை பரவி நகரமே புடைத்துப் போய்விட்டது.

வீடுகளில் வைக்கப்படுவதைப்போல அரசு அலுவலகங்களிலும் ஜன்னல் வைக்கப்படுகின்றது. ஆனால் அலுவலக ஜன்னல்கள் காற்றோட்டத்திற்குப் பயன்படுவதைவிட ரகசியங்களை வெளியே அனுப்புவதற்குத்தான் பயன்படுகிறது. இல்லாவிட்டால் தசரதன் செட்டியாரை ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு போனதும் அவர் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டதும் அரை நொடிக்குள் நகரில் பரவியிருக்க முடியுமா?

இன்ஸ்பெக்டர் இன்னுசிமுத்து இரவு பகலாக உழைத்துத் துப்புக்கண்டுபிடித்து விட்டார். அவர் கண்டுபிடித்தது முற்றிலும் உண்மை என்பதற்கு ஆதாரமாக தசரதன் செட்டியாருடைய இடது கையில் அருந்ததி என்று பச்சை குத்தப்பட்டிருந்தது. கொலை செய்யப்பட்ட அழகியின் பெயர்தான் அருந்ததி.

“அருந்ததி செட்டி நாட்டுப் பகுதியைச் சேர்ந்தவள். சின்ன வயதிலேயே அவள் பரதநாட்டியம் கற்றுக் கொண்டிருந்தாள். தசரதன் செட்டியார் வியாபாரத்திற்குச் செட்டி நாட்டுப் பகுதிக்குச் சென்றபோது அருந்ததியின் நட்புக் கிடைத்தது. செட்டியார் எப்போதும் தங்கும் விடுதியின் அடுத்த வீடுதான் அருந்ததியின் வீடு. கல்யாணமாகாத ஒரு வாலிபன் தன்னை விரும்பினால் அவன்மீது முழுநம்பிக்கை வைத்துவிடுவது தமிழ் நாட்டுப் பெண்களிடமிருந்துவரும் ஒரு கெட்டபழக்கம். அதைப் போலவே, கலியாணமாகாத ஒரு பெண்ணின் மீது ஆசை வைத்தால் பழங்களை பார்த்துவிட்டு ஓடிவிடும் அணிலைப் போல் தப்பித்துவிடலாம் என்ற விஷப்புத்தி தொன்றுதொட்டு இளைஞர் மத்தியில் இருந்துவருகிறது. இவ்வாறு பாசத்திற்கும், பாஷாணத்திற்கும் இடையில் சிக்கிக் கொண்டவள்தான் அருந்ததி.

தசரதன் செட்டியார் அருந்ததியைத் திருமணம் செய்து கொள்வதாய் வாக்குறுதியளித்து திருச்செந்தூர் முருகன் கோயிலில் மாலை மாற்றிக்கொண்டார், அங்கேயே காதல்

போதையில் தசரதன் பெயரை அருந்ததியும், அருந்ததியின் பெயரை தசரதனும் கைகளில் பச்சை குத்திக் கொண்டார்கள்.

செட்டியார் தனி வீடு பிடித்து அதில் அருந்ததியைக் குடியமர்த்தினார்.

அவருக்கு முறைப்பெண் ஒன்று இருந்தது, அந்தப் பெண்ணை அவர் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று செட்டியாரின் தாய் மாமன் அச்சுறுத்திக் கொண்டிருந்தார். ஆனால் செட்டியார் அருந்ததியின் அன்பான உபசரிப்பில் நிம்மதியாகப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தார். தசரதன் செட்டியரை அருந்ததியின் பிடிப்பிலிருந்து விடுவிக்க முடியாதென்றுணர்ந்த அவரது தாய் மாமன் அருந்தியின் மீது எப்படியாவது களங்கம் கற்பிக்க வேண்டுமென்று தீவிரமாக முனைந்திருந்தார். அதற்கு ஒரு நல்ல வாய்ப்பு செட்டியாரின் மாமனுக்குக் கிடைத்துவிட்டது. ஒரு முறை அருந்ததி அவளுடைய தாய் வீட்டுக்குச் சென்றிருந்தபோது அவள் சொன்னபடி திரும்பி வரவில்லை. இதை ஒரு சாக்காக வைத்துத் தசரதன் செட்டியாரிடம் அவளைப்பற்றி அபாண்டமாகப் பழிகளைச் சுமத்தினார். அருந்ததி அவளது சொந்த ஊர்ப் பக்கத்தில் நாட்டுக்கோட்டைச் செட்டியார் பலரிடம் காசுக்காகக் கள்ள உறவு வைத்திருப்பதாகவும், அதனால்தான் அவள் அடிக்கடி சொந்த ஊருக்குப் போவதாகவும் ஒரு கட்டுக்கதையைத் தயார்செய்து தசரதன் செட்டியார் நம்பும்படி அவரது மாமன் வெற்றிகரமாகச் செய்து விட்டார்.

இப்போது செட்டியாருக்கும் அருந்ததிக்கும் உறவில்லை. அருந்ததி மதுரையில் குடியேறிவிட்டாள். ஆடவர்கள் பிழைக்க வழியில்லா விட்டால் திருட ஆரம்பிக்கிறார்கள், பெண்கள் பிழைக்க வழியில்லா விட்டால் கற்பை விற்கிறார்கள் பாவம்!

காதலுக்காக பெற்றோரைக் கூடத் துச்சமென மதித்த அருந்ததி இப்போது இரவு ராணியாகிவிட்டாள். அவளுடைய வாழ்க்கை இப்படி அமையுமென்று அவள் கனவு கூடக் கண்டிருக்கமாட்டாள். காதலில் மூழ்கி அவள் கண்ட சுகம் அவளது

கையிலுள்ள தசரதச் சக்கரவர்த்தி என்ற பச்சை எழுத்துக்கள் தாம்.

அருந்ததிக்கு எடுத்துப்பேச ஆளில்லை. திருச்செந்தூர் முருகனைத்தவிர அவளுக்குச் சாட்சியில்லை. கலப்பு மணம் அதிகாரப் பூர்வமற்றது என்று பேசப்பட்ட காலம் அது. அதனாலே அவள் எச்சில் இலையாகத் தூக்கியெறியப்பட்டு வாலிபர்களுக்கு வியாபார விருந்தாக ஆகி விட்டாள்.

தசரதன் செட்டியார் அவரது முறைப்பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். அவருடைய இரண்டாவது மனைவி தசரதன் செட்டியாருக்கு அருந்ததியின் நினைவை மாற்ற எவ்வளவு தான் முயற்சி எடுத்தாலும் அவரது கையிலுள்ள அருந்ததி என்ற பெயரை மாற்றமுடியவில்லை. குளிக்கும்போதும் கடிகாரத்தில் மணி பார்க்கும் போதும் அருந்ததி என்ற எழுத்துக்கள் அவரை மட்டுமல்ல அவரது இரண்டாவது மனைவியையும் உறுத்திக்கொண்டிருந்தன.

“அருந்ததி எங்கோ இருக்கிறாள். உயிரோடுதான் இருப்பாள். எப்போதாவது ஒரு நாள் அவளைச் சந்திக்க வேண்டிய கட்டம் வரலாம். அப்போது அவள் நம்மைப்பற்றி என்ன நினைப்பாள்!” என்ற பீதி தசரதன் செட்டியாரின் மனத்தில் வளர்ந்து கொண்டுதானிருந்தது.

அவர் பயந்தது நடந்து விட்டது. திடீரென்று ஒரு நாள் பொழுது சாய்ந்த நேரத்தில் செட்டியார் வீட்டிற்கு அருந்ததி வந்துவிட்டாள். செட்டியாருக்குக் கைகால்களெல்லாம் உணர் விழந்து விட்டன. என்ன பேசுவது என்றே அவருக்குத் தெரியவில்லை. குற்றம் செய்தவர்களின் முகத்தைப்போல அவரது முகம் ரத்த ஓட்டமின்றி வெளிறிவிட்டது.

“இப்படி நீ வரலாமா? இது உனக்கும் நல்லதில்லை, எனக்கும் நல்லதில்லை.”

“நான் உங்களுக்குத் தொல்லையைத் தருவதற்கு வரவில்லை எப்படியோ நான் கெட்டுவிட்டேன். என் உடம்பும் கெட்டுப் போய் விட்டது.

என்னை நீங்கள் மீண்டும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காக வரவில்லை. எங்கேயாவது வைத்தியம் பார்த்து என் உடம்பை நீங்கள் காப்பாற்றி விட்டால்போதும். எப்படியிருந்த என் உடம்பு இப்படிப் போய்விட்டதே என்று ஒரு நொடியாவது நீங்கள் எண்ணிப்பார்ப்பீர்களென்று நம்புகிறேன்''—கண்களில் நீர்கசிய அருந்ததி வார்த்தைகளை உதிர்த்தாள்.

''சரி, உன் மனதுக்கும், உடலுக்கும் நிம்மதியைத் தரவேண்டிய பொறுப்பு என்னுடையது. நீ ஊருக்கு வெளியே உள்ள சிவன் கோயில் பக்கமாகப் போய் நில். நான் பின்னடியே வருகிறேன்''—என்று சொல்லி அவளை அனுப்பி வைத்துவிட்டு குழம்பிய உள்ளத்தோடு நன்றாக இருட்டு வந்த பிறகு செட்டியார் சிவன்கோயில் பக்கமாகப் புறப்பட்டார்.

இரவு நெடுநேரமாகிவிட்டது. எவ்வளவுதான் கஞ்சனாக இருந்தாலும், வள்ளலாக இருந்தாலும் வீரனாக இருந்தாலும் கொடியவனாக இருந்தாலும் அவன் தவறு செய்கிறபோது அவன் உடம்பில் ஓடும் இரத்தம் முழுவதும் வெறும் நீராகி விடுகிறது. மனம் கலகலத்துப் போகிறது. அவயவங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் போய் விடுகின்றன.

கண்களில் மின்மினி பறக்கிறது. காதுகள்கூட அடைத்துப் போகின்றன. செடியில் மலர்ந்திருந்த ரோஜாவைப் பறித்து மணத்தை நுகர்ந்து மகரந்தத்தை பருகிவிட்டு எந்தக் கையால் அன்போடு பறித்தாரோ அதே கையால் அந்த மலரைக் கசக்கி எறிவது என்பது எவ்வளவு கொடுமையான செயல்! ஆம்! தசரதன் செட்டியார் தன்னுடைய படுக்கை அறையில் பைங்கிளியாக இருந்தவளை எப்படியோ கொன்று விட்டார்.

இரவிலே வாசற்படியை விட்டு இறங்குவதற்கு அஞ்சக்கூடிய செட்டியார் எப்படி ஒரு பெண்ணைத் தன்னந்தனியாகக் கொன்றுபோட முடிந்தது! கடலுக்குள்ளே பாறை இருப்பதை போல மனிதனுடைய மனதுக்குள்ளே முரட்டுக் குணம் இருக்கத்தான் செய்கிறது.

இறந்துபோன அருந்ததியை அவளுடைய புட்வையாலே மூடி வைத்துவிட்டு செட்டியார், வீட்டிற்கு ஓடிவந்துவிட்டார். மறுநாள் இரவு வரை அவர் ஊரிலே இல்லை. மதுரைக்குப் போய் விட்டு இரவு 9 மணிக்குத் திரும்பினார். வந்ததும் வராததுமாக பனிச்சட்டை, பனிக்குல்லா இவைகளை அணிந்து கொண்டு வெளியே புறப்பட்டார். அவரோடு அவரது பண்ணைக்காரன் கண்ணுச்சாமியும் உடன் போனான். ஊரைக் கடக்கும் வரை செட்டியார் வாயைத் திறக்கவில்லை. சிவன்கோயில் முடுக்குத் தாண்டிய பிறகுதான் அவர் பேச ஆரம்பித்தார்.

"கண்ணுசாமி! உன்னுடைய தகப்பனார் காலத்திலேயி ருந்து உன் குடும்பமே எங்களுக்குப் பணிவிடை செய்து வரு கிறது. நீ விசுவாசமுள்ளவன். நன்றி மறவாதவன். அதனால்தான் உன் வீட்டில் இன்னும் விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. இன்னும் நீ சுகமாக இருக்க வேண்டுமென்று நான் விரும்பு கிறேன்"— என்று கண்ணுச்சாமியின் உள்ளங் குளிரப் பேசிக் கொண்டே வந்த செட்டியார் புதியதாக அமைக்கப் போகும் தனது மாங்கொல்லையின் புதருக்குள் மறைத்து வைத்திருக்கும் அந்தச் சடலத்தை அன்றிரவே புதைத்து விட வேண்டுமென்று கூறினார். மனிதனுக்கு முதுகைத் தடவினால் தலை கனத்து விடு கிறது. உன்னைப்போல் உண்டா என்றால் தன்னைக்கூட விற்று விடுவார்கள். அதுவும் ஏற்கனவே முதலாளிகள் அடிமைத்தனத் தில் ஊறிப்போயிருக்கும் ஏழைகள் முகப் புகழ்ச்சியிலிருந்து ஒரு நாளும் தப்பிக்க முடியாது.

"இந்தப் பிரேதம் சவக்கிடங்கிலிருந்து விலைக்கு வாங்கப் பட்டது. அங்கேயே பொட்டலமாக கட்டிக் கொடுத்துவிட்டார் கள். நான்கூட முகத்தைப் பார்க்கவில்லை; முகத்தைப் பார்த் தால் மூன்று நாளைக்குச் சாப்பிட முடியாது. எனக்கே அப்படி யென்றால் உனக்கும் அப்படித்தானே. யார் பெற்ற பிறவியோ? நமக்கு எதற்கு அதெல்லாம். பொட்டலத்தோடு அப்படியே புதைத்துவிடு.

இன்ஸ்பெக்டர் இன்னாசிமுத்து துப்பறிந்ததில் இவ்வளவு விவரங்களும் அவருக்குக் கிடைத்தன. தசரதன் செட்டியார் மீது

இன்ஞசிமுத்து குற்றப்பத்திரிகை தயாரிக்கத் தொடங்கி விட்டார். போதிய ருசுக்கள் கிடைத்து விட்டதாக அவர் மகிழ்ச்சி கொண்டார். சமூகத்தை ஏமாற்றிக்கொண்டிருக்கும் இப்படிப் பட்ட பெரும் புள்ளிகளைத் தண்டிப்பதில்தான் தனக்குப் பெருமை இருப்பதாகக் கருதினுர். ஆனுல் அவர் விருப்பம் நிறைவேறவில்லை.

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு அவருக்கு மாறுதல் உத்தரவு வந்து விட்டது. நக்ஸல்பாரிகள் அட்டகாசம் புரிந்துகொண்டிருந்த ஒரு பயங்கரப் பிரதேசத்திற்கு இன்ஞசிமுத்துவை மேலிடம் மாற்றி விட்டது. இன்ஞசிமுத்து கடமையிலிருந்து சிறிதும் பிசகாதவர். அதனுல் அவருடைய மாறுதல் உத்தரவில் ஏதாவது அரசியல் இருக்குமோ என்று எண்ணிப்பார்க்கக்கூட அவர் விரும்பவில்லை. தனக்குப் பதிலாகப் போறுப்பேற்க வந்திருந்த முகுந்தராசனிடம் எல்லாக் குறிப்புக்களையும் ஒப்படைத்து விட்டு இன்ஞசிமுத்து விடை பெற்றுக்கொண்டார்.

கொலை வழக்குத் தொடங்கியது.

அரசுத் தரப்பிலும் தசரதன் செட்டியார் தரப்பிலுப் பிரபல வழக்கறிஞர்கள் வாதாடினுர்கள். செட்டியாரின் வக்கீல் காந்தராஜ் ஒரு புகைப்படத்தின் நெகெட்டிவை எடுத்து வைத்துக்கொண்டு கூண்டிலே நின்ற புகைப்படக்காரரிடம் பல கேள்விகளைக் கேட்டார்.

"இது நீங்கள் எடுத்த படந்தானு?"

"ஆம்! நான் தான் எடுத்தேன். சப்இன்ஸ்பெக்டர் தான் பிரேதத்தைப் படம் எடுக்கச் சொன்னுர்.

"நன்ருகப் பார்த்துச் சொல்லுங்கள். இது நீங்கள் எடுத்த படந்தானு!"

"ஆம் நானேதான் எடுத்தேன்"

"இது ஆண்பிள்ளையின் படமாக இருக்கிறதே!"

"ஆம். நான் எடுத்ததுதான் அது."

— நீதி மன்றத்தில் சிரிப்பொலி கிளம்பியது. நீதிபதியைத் தவிர அனைவரும் சிரித்தார்கள்.

"யுவர் ஆனர்! கொலை செய்யப்பட்டதாக நடந்து கொண்டிருக்கும் வழக்கோ ஒரு பெண்ணைப் பற்றியது. ஆனால் புகைப் படக்காரர் எடுத்த படமோ ஓர் ஆணின் படமாக இருக்கிறது. சாகாமல் எங்கோ தலைமறைவாக இருக்கும் ஒருத்தியை இறந்ததாகப் பொய் வழக்கு ஜோடித்து என் கட்சிக்காரரைத் தூக்குத் தண்டனைக்கு அனுப்பப் பார்த்திருக்கிறார்கள்"— என்று காந்தராஜ் அடித்துப் பேசினார்.

அடுத்து பிரேதத்தைப் புதைத்த கண்ணுச்சாமி கூண்டிலே ஏற்றப்பட்டான்.

"நீதான் பிரேதத்தைப் புதைத்தாயா?"

"ஆம் நானேதான் புதைத்தேன்."

"அந்தப் பிரேதம் ஆணா, பெண்ணா என்று பார்த்தாயா?"

"அது ஒரு பெரிய பொட்டலமாக இருந்தது. நான் அவிழ்த்துப் பார்க்கவில்லை."

— இதற்கு மேல் காந்தராஜ் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை.

"யுவர் ஆனர்! பிரேதத்தைப் புதைத்த கண்ணுச்சாமியும் பிரேதத்தைப் பார்க்கவில்லை என்று கூறுகிறார். போலீசு அதிகாரிகள் தவிர, பிரேதத்தோடு நேரடியாகத் தொடர்பு கொண்டவர்கள் போட்டோக்காரரும், கண்ணுச்சாமியும் தான். அவர்களிருவருமே கொலை செய்யப்பட்டுக் கிடந்தது ஒரு பெண் அல்ல என்று சாட்சியம் கூறியிருக்கிறார்கள். ஆகவே இது ஜோடனை வழக்கு என்பது நிரூபணமாகி விட்டது. இறந்ததாக சொல்லப்படும் அருந்ததி எங்கோ இருக்கிறாள். அவளைத் தசரதன் செட்டியார் எப்போதோ விவாகரத்துச் செய்துவிட்டார். அந்த உட்பகையைப் பயன்படுத்திச் செட்டியாரின் விரோதிகள்

ஒரு பிரேதத்தின் மூலமாக என்னுடைய கட்சிக்காரருக்குக் கொடிய தண்டனை வாங்கித் தர முயற்சித்திருக்கிறார்கள். மேன்மை தங்கிய நீதிபதி அவர்கள், நிரபராதியான தசரதன் செட்டியாரை விடுதலை செய்து நீதியை நிலைநாட்ட வேண்டுகிறேன்.''— இதற்குமேல் காந்தராஜ் எதுவும் பேசவில்லை.

சட்டங்களை ஆளும் சாட்சியங்களின் இரும்புக் கவசத்திலிருந்து தப்பிக்க முடியாத நீதி மன்றம் காந்தராஜின் வாதத்திற்கே வெற்றி மாலை சூட்டி விட்டது.

கொலையைத் துப்புக் கண்டுபிடித்த இன்ஞசிமுத்து முயற்சி தோல்விகண்டது. அருந்ததியினுடைய சடலத்தின் புகைப்படம் ஸ்டேஷனுக்குள்ளே இடம் மாறி உட்கார்ந்து கொண்டது.

இந்தத் தகவல்களையெல்லாம் ரத்த வெறிபிடித்த நக்ஸல் பாரிகள் மத்தியில் தியாக உணர்வோடு பணியாற்றிக்கொண்டிருந்த இன்ஞசிமுத்து பத்திரிகைகளில் படித்து மனதுக்குள்ளேயே அழுதுகொண்டார்.

★

# கையாள்

உறுமிக் கொட்டும், நையாண்டி மேளமும் ஊரையே கிடுகிடுக்கச் செய்தன. வாழைமர வளைவுகளும் மாவிலைத் தோரணங்களும் ஒரு பெரிய வீட்டுக்காரருக்குச் சிறப்புச் செய்வது போல ஜாடை காட்டிக் கொண்டிருந்தன. வண்டிகளிலும், கால் நடையாகவும் திமுதிமுவென்று கூட்டம் வந்து குழுமிய வண்ணமிருந்தது. அவர்கள் ஒவ்வொருவரும் தலையில் ஒரு பெட்டி பச்சரிசியும், விடைக்கோழியும் சுமந்து கொண்டு வந்தார்கள்.

புதுப்பணக்காரர் சாமித்துரை வீட்டு வாசலில் விரிந்து பரந்த அளவில் பரப்புக்காவணம் போடப்பட்டிருந்தது. சாமித்துரைத் தேவர் சட்டைகூட அணியாமல் பந்தலில் நடந்தபடி பரிபாலனம் செய்து கொண்டிருந்தார். அவர் உடுத்தியிருந்த பட்டு வேட்டியும், கழுத்திலும் கைகளிலும் அணிந்திருந்த கனத்த சங்கிலியும் சந்தனப் பொட்டும், தலையில் அவர் தேய்த்திருந்த எண்ணெச் சொழப்பும் சாமித்துரைத் தேவரை ஒரு அசல் புதுப்பணக்காரர் என்று தண்டோராப் போட்டுக்கொண்டிருந்தன. முப்பதாண்டுகளுக்கு முன்பு ஊரைவிட்டுத் துரத்தியடிக்கப்பட்ட சாமித்துரைத் தேவர் சைகோனுக்குச் சென்று எப்படியோ பணக்காரராகி விட்டார்.

ஏழையாக இருந்தாலும் பணக்காரனாக இருந்தாலும், படித்தவனாக இருந்தாலும் முட்டாளாக இருந்தாலும் அவனவன் தகுதிக்கும் அறிவுக்கும் ஏற்ற வகையில் பழிவாங்கும் சுபாவம் இருக்கத்தான் செய்கிறது! அப்படி இல்லாவிட்டால் அன்று தன்னை ஒட்டுத்திண்ணையில் உட்கார அனுமதிக்காதவர்களையெல்லாம் இன்று ஒரு காசுக்குக் கூட மதிக்காமல் ஊரையே

அமர்க்களப்படுத்துவாரா சாமித்துரை! பேரீச்சங்காய்க் கொத்துக்களும், பெரிய பெரிய நொங்குக் குழைகளும் மிஞ்சிப்போய் குன்றுபோல் குவிந்து கிடந்தன. ஊர்ப் பிள்ளைகளெல்லாம் அதைப் பங்கு போட்டுக்கொள்ள அடித்துக் கொண்டதைப் பார்த்து சாமித்துரை தன் மனத்தில் உறைந்து கிடந்த அடத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைத்துக் கொண்டிருந்தார்.

"எந்தச் சாமித்துரையை இந்த ஊர் அகம்பாவிகள் அலட்சியப்படுத்தினார்களோ, அந்தக் கொடுமைக்காரர்களை நான் இன்று ஏளனமாகப் பார்க்கிறேன். ஊருணிக்குள்ளே கிடந்த பிணத்தை 'நீதான் கொலை செய்தாய்' என்று எங்கப்பாவின் மீது பழி சுமத்திய ஊரல்லவா இது. பாழாய்ப்போன நீதிபதி சந்தர்ப்ப சாட்சியங்களை வைத்து அதை ருசுப்படுத்தி விட்டாரே! அவர் தூக்கு மேடை ஏறியதும் ஒரு வழிக்கு நல்லது தான்! என் மனத்தில் கொதிப்பும் ஒரு விதமான கொள்கையும் அவருக்கு இந்தக்கதி நேராவிட்டால் எனக்கு ஏற்பட்டிருக்குமா? ஒரு சில நல்ல காரியங்கள் தீமைகளை உண்டாக்கி விடுவதைப் போல, ஒரு சில தீயவைகளும் நன்மைகளை வழங்கி விடுகின்றன.

— சாமித்துரை ஓடியாடிக் காரியம் பார்த்துக்கொண்டிருந்தாலும் அவர் மனம் மட்டும் இப்படித்தான் சுழன்றுகொண்டிருந்தது.

"ஐரா! ஏம்மா, ஐரா! உள்ளே இன்னும் என்ன செய்யிறே?"

"வந்திட்டேம்பா! மாரியூரிலேயிருந்து இப்பத்தான் மாமி வந்தாங்க! அவுங்களுக்கு காபி போட்டுக் கொடுத்துட்டு வர்றேன்!" ஐராவதி அருகில் வந்து சொன்னாள்.

ஐராவதி, பர்மாவில் ஓடும் புகழ் வாய்ந்த ஒரு நதியின் பெயர். சாமித்துரை பர்மாவில் இருந்தபோது பிறந்த பெண்ணுக்கு ஐராவதி என்று பெயர் சூட்டினார் சாமித்துரை. மனிதன் ரத்தத்தில் நல்லவையும் கெட்டவையும் சேர்ந்தே ஊறிக்கிடக்கின்றன. சாமித்துரை என்னதான் மூர்க்கனாக இருந்தாலும், பிள்ளைகளுக்கு நதிகளின் பெயர்களை வைக்கும் தமிழ் மரபை

அவர் மறக்கவில்லை! பர்மியப் பெண்கள்கூட தங்கள் தாய் நாட்டின் ஒரு ஜீவநதியின் பெயரைச் சூட்டிக்கொண்டதில்லையே!

அம்மா ஐரா, எல்லா நகைகளையும் எடுத்துப் போட்டுக் கொள். உன் தாயார் படத்துக்கு முன்னாலே ஒரு தடவைக்கு மூணு தடவை விழுந்து கும்பிடு, அவள் உன்னை எப்படி வளர்த்தாளோ, அதுபோலத்தான் அவள் என்னையும் வளர்த்தாள். அதுவும் என் கொடுமையையும், முன் கோபத்தையும் அடியும் உதையும் தாங்கிக்கொண்டு எனக்குச் சம்ரட்சணை புரிந்தாளே உன் தாயார்! நான்கூட அவளைக் கும்பிட்டால் என்ன என்று தோன்றுகிறது ஐரா!'' என்று சாமித்துரை கண்கலங்கினார்.

''அப்பா!

''என்னை அழவைக்கவும், சிரிக்க வைக்கவும் உன் அம்மாவின் ஆத்மா ஒன்றால்தான் முடியும் ஐரா! அவளது பணிவிடைகளால் நான் சாந்தியடைந்திருக்கிறேன். அவளது பொறுமையால் வெட்கப்பட்டிருக்கிறேன். அவள் என்னிடம் காட்டிய பக்தியால் நான் சிலிர்த்திருக்கிறேன். இன்று அவள் உன் கல்யாணத்தைப் பார்க்காததினால் நான் கண்கலங்கித் தவிக்கிறேன். அம்மா இல்லையே என்று நீ எவ்வளவு கவலைப்படுகிறாயோ, அதைவிட, என் வாழ்க்கையின் பங்காளி இன்று இல்லாமல் போய்விட்டாளே என்று நான் வேதனைப்படுகிறேனம்மா!''

—எப்போதும் சினத்தால் சிவந்த கண்களைப் பெற்றிருக்கும் சாமித்துரை அன்று சோகத்தால் சுருண்டுபோய்ப் பேசினார். தந்தையின் கலக்கம் ஐராவதியின் மனத்தையும் கிளறிவிட்டுவிட்டது.

ஆறு, அது உற்பத்தியாகுமிடத்திலிருப்பவர்களுக்கு மட்டும் சொந்தமாகி விடுவதில்லை. எங்கெங்கு ஓடுகிறதோ அங்கிருப்பவர்களை எல்லாம் குளிர்வித்து அவரவர்களுக்கு பாத்தியமாகி விடுகிறது. அதுபோலவேதான் பெண்களும், அவர்கள் பிறந்த இடத்திற்கு மட்டும் உரிமையானவர்களாக இருப்பதில்லை.

அவர்கள் புருஷனுக்கும் சுகத்தை தரவேண்டியவர்கள்; பிள்ளை களுக்கும் அன்பைச் சொரிய வேண்டியவர்கள்; தாய் தகப்ப னுக்கும் பெண்ணாக இருக்கவேண்டியவர்கள்.

வைராக்கியத்தில் மிதந்து கொண்டிருந்த சாமித்துரையை யும் உணரவைத்திருந்தது அந்தப் பெண்மை!

"சரி சரி உள்ளே போம்மா! மேளச்சத்தம் கேக்குது; மாப் பிள்ளை வீட்டுக்காரர்கள் வருவாங்கபோலேயிருக்கு!" என்று சாமித்துரை துக்கத்தைக் கலைத்துவிட்டு வேலையைக் கவனித் தார்.

"சாமித்தொரை!"

"வாங்க மாமா! எங்கே நீங்கள் வராமல் போய் விடுவீங்க ளோன்னு நெனைச்சேன்!"

"அது எப்படியப்பா வராமல் போவேன். நான் கேள்விப் பட்டது ஒரு மாதிரி, நீ நடத்துறது ஒரு மாதிரியாப் போச்சே!"

"நீங்க என்ன கேள்விப்பட்டீங்க? நான் எப்படி அதை மாத் திப்புட்டேன்? ஐராவதி பொறந்தப்போ நான் என்ன முடிவு செஞ்சேனோ அந்த முடிவைத்தான் இப்ப செஞ்சுக்கிட்டிருக் கிறேன்! நீங்க என்னதான் மாமா கேள்விப்பட்டீங்க!"

"நீ உன் மகளை அக்கினிச்சாமித்தேவர் மகன் வீரபாண்டிக் கிக் கொடுக்கப் போறதா ஊரெல்லாம் ஒரே பேச்சா இருந் ததே! பொண்ணும் மாப்பிள்ளையும் கூட இஷ்டமாக இருந்த தாகச் சொன்னுங்களே!"

"ஏன் மாமா நீங்ககூட அதை நம்பீட்டீங்க போலயிருக்கே! ஐராவதி கொண்டையன் கோட்டை மறவனுக்குப் பிறந்த வள்ன்னுகூட நினைச்சுப் பார்க்கலையா நீங்க? நமக்கு மானம் ரோஷம் இல்லையா மாமா! ஐராவதி நெனைப்பு அப்படித்தான் இருந்ததுன்னு அவள் தலையை அன்னைக்கே சீவி எறிஞ்சிருப் பேனே!"

“இல்லே சாமித்துரை, ஊரிலே அப்படித்தான் சொல்லிக் கிட்டாங்க! அதுனலே கேட்டேன். இப்ப அவங்க கல்யாணத் துக்குக் கூடிக்கிறல்லேயா?”

“இல்லே! வீரபாண்டி நம்பகிட்டேத்தான் இருந்தான். திடீர்னு ஆளேயே காணோம்! ஒருவேளே நீங்க நெனேக்கிற மாதிரி அவன் திட்டம் போட்டிருப்பான். நம்ப முடிவு சரியில்லே யின்னு தெரிஞ்சதும் வெட்கப்பட்டு தலேமறைவாகப் போயிருப் பான். அவன் அப்பன் செஞ்ச தீங்கு சாமானியப்பட்டதா? அக் கினிச்சாமி செஞ்ச கோட்டுலேயால் தானே அப்பா தூக்கு மேடையேறினர். நான் மறந்திடுவேனு மாமா அதையெல் லாம்!”

“அப்படி நெனேக்கிறவனு இருந்தா, நீ ஏன் அவன் மகனே உன் கிட்டே சேக்கணும்! அவனே சேத்துக் கிட்டு அவனேக் கையாளு மாதிரி வச்சுக்கிட்டு நீ ஊரெல்லாம் அலேஞ்சது னலேதான் நீ உன் மகளே அவனுக்குக் கொடுக்கப்போறேன்னு பேசிட்டாங்க!”

“மாமா, நான் அதுக்காகவா அவனேக் கையாளு மாதிரி வச்சிருந்தேன்! இல்லேயே! எங்கள் குடும்பத்தைக் கேவலப்படுத் தியவனேயே நான் வண்டிக்காரனுப்போட்டு அவமானப்படுத்தி புட்டேன்னு ஊர் நினேக்கட்டும்னு அப்படிச் செஞ்சேன். ஊர் என்னடான்னு இப்படி நெனேச்சுக்கிட்டுது! பரவாயில்லே! இப்ப வாவது நீங்கள் புரிஞ்சுக்கிட்டீங்கல்ல; அது போதும் எனக்கு. நீங்க எனக்குத் தாய்மாமன். நீங்களே இருந்து ஐராவதி கல் யாணத்தை நடத்தி வச்சுப்புடுங்க! காலேயிலே ஆறு மணிக்கு முகூர்த்தம் வச்சிருக்கு!” என்று மனதைத் திறந்து அள்ளிக் கொட்டினர் சாமித்துரை.

மாப்பிள்ளே அழைப்பு முடிந்தது. சாப்பாட்டில் முதல் பந்தி யில் மாப்பிள்ளே வீட்டுக்காரர்கள் சாப்பிடத் தொடங்கினர்கள். சாமித்துரைத்தேவர் புறங்கைகளேக் கட்டிக்கொண்டு சாப் பாட்டு விசாரணேயில் ஈடுபட்டிருந்தார். அப்போது அவரது

தாய்மாமன் திருவுத்தேவர் அருகில் வந்து பதட்டத்துடன் ஏதோ சொன்னார்.

"என்ன மாமா சொல்றீங்க! போலீசா! பெரிய வீட்டிலே கல்யாணம்ன்னு அவர்கள் எல்லாம்தான் வருவாங்க! இன்னும் உங்களுக்குப் பழைய பயம் போகலேபோலேருக்கே மாமா!"

"இல்லேப்பா! கொலைக் கேசாம்! ஒன்னைக் கைது பண்ண வந்திருக்காங்கலாம்!" திருவுத்தேவர் கோபக்குறியோடு சொன்னார்.

சாமித்துரை கல்யாணப் பந்தலைத் திரும்பிப் பார்த்தார். மணமேடைக்கு அருகில் பெரிய பெரிய போலீஸ் அதிகாரிகளெல்லாம் நின்று கொண்டிருந்தார்கள்.

சாமித்துரை மீது கொலை வழக்குப் பதிவாகி விட்டது. அக்கினிச்சாமித் தேவர் மகன் வீரபாண்டியை, சாமித்துரை கொலை செய்து எங்கோ புதைத்து விட்டார் என்பது குற்றச் சாட்டு. கிராமத்திலுள்ள வாயாடிகளுக்கு இது கிடைத்தால் போதாதா? "இருக்கும்; சாமித்துரை பழைய விரோதத்தை நெஞ்சிலேயே வச்சிருந்து தீர்த்துக் கட்டிப்புட்டான்" என்று கள்ளுக்கடை, சாராயக் கடைகளிளெல்லாம் பேச்சுக் கச்சேரி வைக்கத் தொடங்கி விட்டார்கள்.

சாமித்துரை, மறுநாள் காலை வரை அவகாசம் கேட்டார். மகள் கழுத்தில் தாலியேறுவதைப் பார்த்து விட்டு வந்துவிட வேண்டும் என்ற ஆசை அவருக்கு. போலீசார் விட்டு விடுவார்களா என்ன? அவர்கள் உள்ளமே அலாதிதான்! அந்த உள்ளத்திற்கு எந்த டாக்டரும் வைத்தியம் செய்ய முடியாது; எந்த மனோதத்துவமும் பலிக்கவும் செய்யாது. போலீசாருக்கு நமது உதவியிருந்தால் உங்களைக் கடவுள் அவதாரம் என்று வர்ணிப்பார்கள். அவர்களிடம் நாம் சிக்கிக் கொண்டாலோ தாகத்திற்குக்கூட தண்ணீர் தரமாட்டார்கள். அதனால்தான் அடிக்கடி குணம் மாறுகிறவனையும், காரணமில்லாமல் எரிந்து விழுகிறவனையும் 'போலீஸ் புத்திக்காரன்' என்று பெரியவர்கள் சாடுகிறார்கள் போலும்!

சாமித்துரைத் தேவர் மறுநாள் பகல் வரை உள்ளூர்ப் போலீஸ் நிலையத்திலேயே தான் காவலில் வைக்கப்பட்டிருந்தார். மகளுக்கு தாலி கட்டியதை அவர் கண்ணால் பார்க்கா விட்டாலும் மேளச்சத்தத்தை போலீசாரால் கேட்க விடாமல் தடுத்துவிட முடியுமா?

இரவெல்லாம் சாமித்துரை தூங்கவே இல்லை எப்போது விடியுமென்று உட்கார்ந்து கொண்டே இருந்தார். பொழுது விடிந்தது. கல்யாண வீட்டு இரைச்சல் போலீஸ் நிலையம் வரை எட்டியது.

"கெட்டிமேளம் கெட்டிமேளம்" என்று தாய்மாமன் திருவுத் தேவர் கூறியது சாமித்துரைக்கு நன்றாகக் கேட்டது. அப்போதுதான் சாமித்துரை பெருமூச்சு விட்டார். சாமித்துரை களங்கியதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. கொலைக்குற்றம் அவ்வளவு ஆபத்தானது. இருட்டுக்குள்ளே தூங்கிக் கொண்டிருக்கும் காட்டுப் பன்றியிடம் விழிப்போடு இருக்கும் வேட்டைக்காரர்கள்கூட சிக்கிக் கொண்டு விடுவதைப்போல, கொலைக்குற்றம் யார் மீது, எந்தப் பக்கத்தலிருந்து பாயும் என்று சொல்ல முடியாது. நீரில் மூழ்கிக் கொண்டிருப்பவனைக் காப்பாற்றப் போகிறவர்கள் கூட இறந்து விடுவதில்லையா?

வீரபாண்டி, அக்கினிச்சாமித் தேவரின் மகன். வல்லடி வழக்குகளில் அவன் பெயர் போனவன். அவன் தந்தை அக்கினிச்சாமியும் அப்பேர்ப்பட்டவர்தான். வேண்டாதவர்கள் மீது பொய் வழக்கு ஜோடிப்பது இவர்கள் தொழில்.

பல ஆண்டுகளுக்கு முன் அந்தக் கிராமத்து ஊருணியில் ஒரு பெண்ணின் சடலம் மிதந்தது. அந்த சடலத்திற்கு ஒரு முன் விரோதத்தைக் கற்பித்து அதில் சாமித்துரைத் தேவரைச் சிக்க வைத்த குடும்பம் அக்கினிச்சாமித் தேவரின் குடும்பம். அதனால், ஒன்றுமறியாத சாமித்துரையின் தந்தை தூக்கு மேடையேறிட நேர்ந்தது.

இப்போது தலைமுறை மாறிவிட்டது. அக்கினிச்சாமித் தேவர் இறந்த பின், அவர் மகன் வீரபாண்டி குடும்பத் தலைவனாகி விட்டான்.

அதைப் போலவேதான் தந்தையை பறிகொடுத்த சாமித்துரை வெளிநாட்டுக்குச் சென்று பொருளீட்டிக்கொண்டு கிராமத்திற்குத் திரும்பியிருந்தார்.

ஐராவதி, சாமித்துரையின் ஒரே மகள். அவளுக்கு மணம் செய்து வைக்கத்தான் சாமித்துரை தாய் நாட்டுக்குத் திரும்பியிருந்தார்.

சாமித்துரை ஊருக்கு வந்ததும், வீரபாண்டி தானே வந்து அறிமுகம் செய்து கொண்டான். காடு, கழனிகளில் இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொண்டார்கள்.

இதை வைத்துக்கொண்டு, ஊரார் கதை பின்ன ஆரம்பித்தார்கள்.

''என்ன இருந்தாலும், சாமித்துரை இவ்வளவு ரோஷம் கெட்டவனுக இருக்கக் கூடாது. தந்தையின் உயிரைக் குடித்த — அக்கினிச்சாமியின் மகனுக்கா பெண்ணைக் கொடுப்பது'' என்று ஒரு சாராரும்.

''வீரபாண்டி, அவன் பங்கிற்கு சாமித்துரையின் குடியைக் கெடுக்கத் தொடங்கி விட்டான் போலேயிருக்கு''—என்று மற்றவர்களும் பேச ஆரம்பித்து விட்டார்கள்.

இது எப்படியோ, சாமித்துரையின் பண்ணையாள் படியானுக்குத் தெரிந்திருந்தது. அவன் பங்கிற்கு, காதும் மூக்கும் வைத்து சாமித்துரையின் காதில் போட்டு விட்டான்.

''ஐராவதியும், வீரபாண்டியும் அடிக்கடி சந்திக்கிறுர்கள். நிலைமை மோசமாகிக் கொண்டு வருகிறது'' என்று படியான் சொன்னதும் சாமித்துரை சாமியே வந்து விட்டது போல் கொதித்துப் போனுர்.

''தடியை எடுத்தவன் தண்டல்காரனுகலாம்; ஆனுல் அவனே தர்ம தேவதையாகிவிட முடியுமா? படியா, தர்மம் உன் ரூபத்தில் வேலை செய்யப் போகிறது என்று நினைக்கிறேன்''

என்று கூறிய சாமித்துரை படியானை அழைத்துக்கொண்டே கொல்லைப் பக்கமாகப் போனுர்.

சாமித்துரை, ஐராவதி திருமணத்திற்கு நாள் வைத்து விட்டார். மாப்பிள்ளை ஒரு ஏழை விவசாயியின் மகன். தனக்கு ஆண் வாரிசு இல்லாததால், தன் மகளுக்கே சொத்துக்களனைத்தையும் கொடுத்துவிடத் தீர்மானித்தார் சாமித்துரை.

திருமணத்திற்கு நாள் வைத்ததிலிருந்து ஊரில் வீரபாண்டியின் நடமாட்டமே இல்லை. கொழும்பிற்குப் போய் விட்டதாகக் கள்ளுக்கடையில் பேசிக் கொள்ளப் பட்டது. அந்தக் கிராமத்தில் எந்தத் தகவலும், முதலில் கள்ளுக் கடையில்தான் வெடிக்கும். அதற்குப் பிறகுதான் ஊருக்குள்ளே பரவும்.

ஆனுல், வீரபாண்டியைப் பற்றிய செய்திக்கு, கள்ளுக் கடையிலேயே மறுப்புக் கிளம்பியது.

"வீரபாண்டியாவது, இலங்கைக்குப் போவதாவது; அங்கே அவனுக்கு யார் இருக்கிருர்கள்? வீரபாண்டி தலை மறைவாக இருப்பதற்கு ஏதோ ரகசியமான காரணம் இருக்கத்தான் செய்யும்! வீட்டிலே போய்க் கேட்டால் எங்களுக்குத் தெரியாது என்கிருர்கள். பஞ்சாயத்துக் கொட்டகையிலே கேட்டால் 'அவனுக்கென்ன புதுமோகம் பிடித்து அலைகிருன்' காதலியோடு ஏர்வாடி சந்தனக் கூடுக்குப் போயிருப்பான். என்று கேலி பேசுகிருர்கள்" என்று கள்ளுக்கடையில் பேச்சுக்கள் அடிப்பட்டன. எப்படியோ கள்ளுக்கடைப் பேச்சு கச்சேரிக் கொட்டகை வரை போய்விட்டது. சீக்குப் பிடித்து மடிந்த சடலத்திற்கே ஸ்தலபுராணம் எழுதக் கூச்சப்படாத போலீஸ் இலாகா காணுமற் போன ஒரு இளைஞனைப்பற்றி ஊரில் அடிபடுகிற வதந்திகளை காது கொடுத்துக் கேட்காமல் இருக்குமா? அவ்வளவுதான்! தென்னந்தோப்பு, கண்மாய்க் கரை, களத்துமேடு எங்கு பார்த்தாலும் போலீஸ் மோப்பம் பிடிக்க ஆரம்பித்து விட்டது. வீரபாண்டியன் வீட்டுக்கு தினசரி போலீசார் போய் வந்தபடி இருந்தார்கள். விசாரணையும் வலைவீச்சும் ஓய்ந்தபாடில்லை!

ஐராவதியின்கல்யாணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு படியான், ஆடுகள் வாங்குவதற்காக தூத்துக் குடிக்குப் போயிருந்தான். அவன் ஊர் திரும்பும்போது இருட்டி விட்டது. வைப்பாற்றுப் படுகையில் ஆடுகளை அமர்த்திவிட்டு அங்கேயே அவன் தூங்கி விட்டான்.

பாதி ஜாமத்தில் ஆடுகள் மிரண்டு பதறின. படியான் அந்த அதிர்ச்சியில் கண்விழித்துப் பார்த்தான். யாரோ இரண்டு பேர் ஆடுகளின் பக்கமாக வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

"யார் நீங்கள்? நான் பொல்லாதவன்; மரியாதையாக ஓடி விடுங்கள்!" என்று படியான் குரல் கொடுத்தான்.

பதில்பேச்சு எதுவும் இல்லை. உருவங்கள் மட்டும் அருகில் நெருங்கிக் கொண்டிருந்தன.

படியான் அரிவாளைச் சரி செய்து கொண்டான்.

"என் கையில் இருப்பது மக்கு அரிவாள் என்று நினைப்பா? இது பலரைப் பதம் பார்த்தது. இன்னும் வீரபாண்டியின் ரத்தம் கூடக் காயவில்லை! ஜாக்கிரதை!"

படியானின் இந்தக் கர்ஜனையைக் கேட்டதும் அந்த உருவங்கள் ஒதுங்கி விட்டன.

படியான் அதற்குமேல் தூங்கவில்லை. அப்போதே ஆடுகளை ஓட்டிக்கொண்டு ஊருக்குக் கிளம்பி விட்டான். அவன் கிராமத்திற்குள் நுழையும்போது கிழக்கு வெளுத்து விட்டது.

மதுரையிலிருந்த டி.எஸ். பிக்கு தகவல் வந்தது, வீரபாண்டி காணமல் போயிருப்பது உண்மை அல்ல; அவன் கொலை தான் செய்யப்பட்டிருக்கிறன். அதற்குப் போதிய துப்புக் கிடைத்திருக்கிறது—என்று டி. எஸ். பிக்கு ரகசியக்கடிதம் வந்திருந்தது. அதைப் படித்ததும் டி. எஸ். பி. மகிழ்ச்சியோடு அந்தக் கிராமத்திற்குக் கிளம்பினர். அவர் நுழையும் போதே அந்தக் கிராமம் பரபரப்படைந்திருந்தது. ஆண், பெண் எல்லோரும் ரகசியமாகக் கிசுகிசுத்துக் கொண்டிருந்தார்கள். கலவரமடைந்த

இளங்கன்றைப் போல போலீஸ் வாகனங்கள் இங்குமங்கும் ரோந்து சுற்றிக் கொண்டிருந்தன.

டி. எஸ். பி. போலீஸ் நிலையத்திற்குள் நுழைந்ததும் படியானையும் சாமித்துரைத் தேவரையும் கைது செய்யும்படி உத்தரவிட்டார். அதற்குப் பிறகு தான் சாமித்துரைத் தேவர் கைது செய்யப்பட்டார்.

கொலை வழக்கு மதுரையில் நடந்தது.

படியான் அப்ரூவர் ஆகிவிட்டான் என்ற பேச்சு ஊரெல்லாம் அடிபட்டது

"பாவம் சாமித்துரை, அவன் அப்பன் மீதும் கொலைக்குற்றம்; இவன் மீதும் கொலைக்குற்றம். குடும்பத்திற்கு எவனோ ஏவல் வைத்திருக்கிறான்" என்று அனுதாபப்பட்டார்கள்.

அப்ரூவர் படியான் வேறு சிறைக்கு மாற்றப்பட்டான். சாமித்துரையுடன் சேர்ந்திருந்தால் உண்மை வெளிப்படாது. என்று எண்ணி, போலீசார் படியானை அடுத்த ஊர் சிறைக்குக் கொண்டு போய் விட்டார்கள்.

"கிராமம், பேயறைந்தது போல் நிசப்தமாக இருந்தது. தெருவில் இரண்டுபேர் சேர்ந்தாற்போல் நடக்கக்கூடப் பயந்து கொண்டிருந்தார்கள். பாம்பு என்றால் படையும் நடுங்கும் என்ற பழமொழி இரத்தத்திலேயே ஊறி விட்டதைப்போல, 'கொலைக் கேசு' என்ற பதமும் உலகத்தையே மிரட்டும் பூச்சாண்டியாகி விட்டது.

சாமித்துரைக்கு, மதுரையில் பிரபல கிரிமினல் வழக்கறிஞர் ஆஜரானார். அவர் ஒரு அசாத்திய திறமைசாலி. கொலை செய்து விட்டு ஆயுதத்தோடு வருகிறவனைக்கூட 'உனக்கு விடுதலை வாங்கித் தந்து விடுவேன்' என்று அசட்டுத் தைரியத்தைக் கொடுத்து வைப்பார். அப்படி நம்பிக்கையூட்டுவதுதான் வக்கீல் தொழிலின் வெற்றி ரகசியம் என்பார்.

"சாமித்துரை! நீ கவலைப்படவேண்டிய அவசியமே இல்லை. போலீசார் போட்ட வழக்கு எல்லாம் ஜெயித்து விடுமா என்ன?

நீ யாரை கொலை செய்தாய்? நிரூபிக்க வேண்டாமோ? கொலை என்றால், கொலை செய்யப்பட்ட சரீரமாவது வேண்டாமா? உன்னைக் கேட்டால், வீரபாண்டி கொழும்பிற்குப் போய் விட்டான் என்கிறாய். போலீசாரோ, அவன் கொலை செய்யப்பட்டு விட்டான் என்கிறார்கள். சொல்லிவிட்டால் போதுமா?'' என்று, சாமித்துரையை சிறையில் சந்தித்து தைரியமூட்டினார்.

இதே நேரத்தில் சர்க்கார் வக்கீல், படியானைச் சந்தித்து விசாரணை நடத்தினார்.

''நீ உண்மையைச் சொன்னால்தான் தப்பிக்கலாம்; இல்லாவிட்டால் உனக்கும் தூக்குத் தண்டனைதான்'' என்றார் சக்கார் வக்கீல்.

படியான் தேம்பித்தேம்பி அழுதான்.

''அழுது என்ன பயன்! உன் கையில் வெட்டுக்காயம் இருக்கிறது. அது அரிவாள் வெட்டு என்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள். அதுமட்டுமல்ல, அன்றொரு நாள் இரவு, — என் கையில் இருக்கும் அரிவாள் மக்கு அரிவாளல்ல; இது வீரபாண்டியை சரிபார்த்த அரிவாள்— என்று கூவி இருக்கிறாய். இவைகளையெல்லாம் ஒட்டு மொத்தமாக வைத்துப் பார்க்கும் போது இந்தக் கொலை உன்னைத்தவிர வேறு யாராலும் நடந்திருக்காது என்று நினைக்க இடமிருக்கிறது'' என்று சர்க்கார் வக்கீல் பீதியை உண்டாக்கினார்.

படியான் நிலை குலைந்து விட்டான். அவன் முகத்தில் வியர்வை துளிர்த்தது. சர்க்கார் வக்கீல், மறு நாளைக்கு வருவதாகச் சொல்லிவிட்டுப் போனார்.

இரண்டு நாட்கள் கழித்து சாமித்துரையின் வக்கீலுக்கு ஒரு திடுக்கிடும் தகவல் கிடைத்தது. படியான், கொலையுண்ட பிணம் புதைக்கப்பட்ட இடத்தைக் காண்பிக்கப் போவதாக அறிந்தார் சாமித்துரையின் வக்கீல். அவ்வளவுதான், வக்கீலுக்கு வழக்கின் மீது இருந்த நம்பிக்கையில் பாதி போய்விட்டது. வீட்டு வராந்தாவில் கைகளைப் பிசைந்துகொண்டு இங்கு மங்குமாக உலாத்தினார்.

“படியானைப்பற்றி சாமித்துரை நல்ல அபிப்பிராயத்தைச் சொன்னானே! படியான் அப்படியா மாறி விடுவான். உண்ட வீட்டுக்குத் துரோகம் செய்யவே மாட்டான் படியான்” என்று வக்கீல் தனக்குத்தானே சமாதானம் சொல்லிக்கொண்டார்.

“சரி, பிணமே கிடைக்கட்டுமே! பிணம் கிடைத்துவிட்டால் குற்றம் உறுதியாகி விடுமா என்ன? கொலை செய்தவனே அப்ரூவரானால் விடுதலையாகலாம் என்பது நீதியானால், கொலைக்கு உடந்தையாக இருந்தவன் மட்டும் எப்படி குற்றவாளியாவான்?” வக்கீல் தானாகப் பேசத் தொடங்கிவிட்டார். அவரது மனைவி வந்து, வேடிக்கை பார்த்த பின்புதான் வக்கீல் தானாகப் பேசிக்கொண்டிருந்ததை நிறுத்தினார்.

போலீஸ் வாகனங்கள், ஊரைப் புழுதிக்காடாக்கின. அப்போது அவ்வளவாக ஜீப்புகள் இல்லை. லாரிகளே இருந்தன.

குறிப்பிட்ட இடத்தில் லாரியை நிறுத்திவிட்டு போலீஸ் படை ஒரு கண்மாய்க்கரை வழியாகப் போய்க்கொண்டே இருந்தது. அவர்களுக்கு மத்தியில் படியானும் போய்க்கொண்டிருந்தான். அவன் கைகள் பின் பக்கமாகக் கட்டப்பட்டிருந்தன. கொஞ்ச தூரம் போனதும் “இந்த இடம் தான்; இங்குதான் புதைத்தோம்” என்றான் படியான்.

படியான் காட்டிய அந்த இடத்தில் புதிய பள்ளம் இருப்பதற்கான அறிகுறிகள் இருந்தன.

உடனே போலீஸ் அதிகாரி அந்த இடத்தைத் தோண்டும்படி ஒரு போலீஸ்காரருக்கு உத்தரவிட்டார். போலீஸ்காரர் வியர்க்க வியர்க்க வெட்டினார். ஆனால், உள்ளே பிணம் இல்லை! வெறும் குழியாகத்தான் அது இருந்தது.

போலீஸ் அதிகாரி படியான் பக்கம் திரும்பி வெறிக்கப் பார்த்தார்.

“நான் என்ன எசமான் செய்யறது; இங்கே தான் புதைச்சோம்! புதைச்சு பதினைந்து நாளாச்சு! அதுக்குள்ளே என்

னென்ன நடந்துச்சோ!" என்று தரையைப் பார்த்துக் கொண்டே பேசினுன் படியான்.

போலீசாருக்கு, வழக்கின் உயிரே போய் விட்டதாக நினைப்பு வந்து விட்டது.

லாரி, போனபாதையிலே திரும்பியது. முயலை விரட்டிப் போன நாய், ஏமாந்ததைப் போல லாரி மிகவும் மெதுவாக வந்து கொண்டிருந்தது.

லாரி, ஏரிக்கரை மேல் வந்து கொண்டிருக்கும்போது முன் சீட்டில் இருந்த போலீஸ் அதிகாரிக்கு ஏதோ ஒரு வாடை தட்டுப்படுவதுபோல் தோன்றியது. உடனே வண்டியை நிறுத்து என்ருர்.

லாரி நின்றதும், அனைவரும் கீழே இறங்கினுர்கள். சித்திரை மாதமானதலால் ஏரி காய்ந்து போய் வெடித்துக் கிடந்தது. எல்லோரும் முகத்தைத் தூக்கிக் கொண்டு மோப்பம் பிடித்தார்கள்.

"சார் நிச்சயமாக இது பிணவாடைதான்!" என்ருர் ஒரு போலீஸ்காரர்.

போலீஸ் அதிகாரியும் அதை ஆமோதித்தார். எல்லோரும் ஏரிக்குள் இறங்கினுர்கள். வெகு தூரத்தில் ஒரு இடத்தில் சில கழுகுகள் உட்கார்ந்திருப்பதையும், சில கழுகுகள் தாவித்தாவிப் பறந்து இடம் மாறுவதையும் போலீஸ் அதிகாரி பார்த்துவிட்டார். அவ்வளவுதான்! எல்லோரும் அங்கே ஓடினுர்கள்.

அந்த இடத்தில் ஒரு தலையில்லாத முண்டம் பிய்த்தெரியப் பட்டுக் கிடந்தது. கழுகுகள் அந்த உடலைச் சின்னு பின்னமாக்கி வைத்திருந்தன. சில அவயங்களை நரிகள் இழுத்துப் போயிருப்பதற்கான தடங்கள் தெரிந்தன. இதைப் பார்த்த பின்புதான் போலீசாருக்கு உயிர் வந்தது. அந்த இடத்தில் இருந்த ஒற்றைக் கால் செருப்பையும் ஒரு மேல்த்துண்டையும் போலீசார் கைப் பற்றிக் கொண்டு வந்தார்கள்.

வழக்குத் தொடங்கியது. சர்க்கார் தரப்பில், கொலேக்கு ருசு இருப்பதாகவும் வீரபாண்டியின் செருப்பும், துண்டும் கைப் பற்றப்பட்டிருப்பதாகவும் செருப்பில் பதிந்திருக்கும் கால்தடம் வீரபாண்டியுடையதுதான் என்று சந்தேகமின்றி ருசுப்படுத்தப் பட்டிருப்பதாகவும், கண்டெடுக்கப்பட்ட துண்டில் உள்ள வண் ணுன் குறி வீரபாண்டியின் குறிதான் என்று அவனது குடி வண்ணுன் வாக்குமூலம் கொடுத்திருப்பதாகவும் ஆகவே இந்தக் கொலேக்குக் காரணமாக இருந்த சாமித்துரை கடுமை யாகத் தண்டிக்கப்பட வேண்டியவர்தான் என்று வாதாடப்பட் டது.

சாமித்துரையின் வக்கீல் அதிகம் பேசவில்லே.

"இந்தக் கொலேக்கும் சாமித்துரைக்கும் சம்பந்தமே இல்லே; குடும்பப் பகையை மையமாக வைத்து இந்தக் கொலே வழக்கு ஜோடிக்கப்பட்டிருக்கிறது" என்ற வாதத்தை மட்டும் எடுத்து வைத்தார் அவர்.

மறு கிழமைக்குத் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது.

தீர்ப்பு அன்று எல்லோரும் நீதிமன்றத்திற்குப் போயிருந்தார் கள். ஐராவதி, கணவனே அழைத்துக்கொண்டு மீனுட்சி அம்மன் மொட்டைக்கோபுரத்து முனி, மதுரை வீரன் முதலிய கோயில் களுக்கெல்லாம் போய்விட்டு நீதிமன்றத்திற்கு வந்தாள். அதற் குள்ளாகத் தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது.

சாமித்துரைக்குத் தூக்குத் தண்டனே!

வழக்கு உயர்நீதி மன்றத்திற்கு வந்தது.

வழக்கறிஞர் வி. எல். எத்திராஜ் சாமித்துரைக்காக வாதாடினுர்.

தியாகராசபாகவதருக்காக வாதாடிய வழக்கறிஞர் எத்தி ராஜ் புகழ்பெற்றிருந்த சமயத்தில் இந்த வழக்கும் விசாரணேக்கு வந்தது.

வழக்கு ஒரே நாளில் முடிந்து விட்டது.

"கண்டெடுக்கப்பட்ட செருப்பு வீரபாண்டியுடையதாக இருக்கலாம். அங்கு கிடைத்த மேல் துண்டு கூட வீரபாண்டியுடையதாக இருக்கலாம். ஆனால் அங்கு பிய்த்தெரியப்பட்ட பிரேதம் வீரபாண்டியுடையதா? அதுதான் அங்கே கேள்விக் குறி! அது வீரபாண்டியின் உடல்தான் என்று சர்க்கார் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. வீரபாண்டியின் துண்டும், செருப்பும் அந்த இடத்தில் கிடைத்தன என்பதற்காக அது வீரபாண்டியின் பிரேதமாகிவிடுமா?

"வீரபாண்டி, இலங்கைக்குப் போகப் போவதாகத் தன்னிடம் கூறினார் என்று கிராம அதிகாரி கூறியிருக்கிறார். ஒரு வேளை, அவர் இலங்கைக்குக்கூடப் போயிருக்கலாம். அவ்வாறு அவர் இலங்கைக்குப் போயிருந்தால் இந்தத் தூக்குத் தண்டனைக்கு யார் பொறுப்பாளி? வீரபாண்டியன், எப்போதாவது ஊருக்குத் திரும்பி விட்டால், சாமித்துரையின் உயிர்ப்பலிக்கு உத்தரவாதம் நம்மால் தர முடியுமா? ஆகவே, கண்டெடுக்கப்பட்ட பிரேதம் வீரபாண்டியுடையதல்ல என்று இந்த நீதிமன்றம் தீர்மானித்து சாமித்துரையை விடுதலை செய்யக் கேட்டுக் கொள்கிறேன்."

— இதுதான் வழக்கறிஞர் வி. எல். எத்திராஜ் வாதத்தின் சாரம்.

மறு நாளே தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது.

சாமித்துரை விடுதலை!

★

# சித்தி

"காமு!''

''என்ன செய்யச் சொல்றேள்!''

''என்னடியம்மா எரிஞ்சு விழறே!''

"பின்னே என்னவாம்! பிள்ளை வருவான், பிரியமா இருப்பான்னு சொன்னீங்களே! ஒங்க பிள்ளை என்ன அப்படியா இருக்கான்! என்னைப்பார்த்ததும் மொகத்தை மூணு மொளம் நீட்டிக்கிடுறானே!''

"அடி பைத்தியம்! இதுக்கா இப்படிப் பொருமிப்பேசிறே அவன் லண்டன் ரிட்டர்ண்டு! உடனே மாறிடுவானுக்கும்! பொறேன் கொஞ்சம்''

''எங்க ஆத்திலேகூட அமெரிக்கா ரிட்டர்ண்டெல்லாம் இருக்கா! அவாளெல்லாம் இப்படியா புடுச்சுவச்ச மாதிரி இருக்கா! நீங்கதான் எங்கிட்டே மறைக்கிறேள்!''

''சேச்சே! காமு, லண்டனுக்கும் அமெரிக்காவுக்கும் வித்தியாசம் உண்டுடி! லண்டன், தமிழ்நாடு மாதிரி கல்ச்சுரல் கண்ட்ரி!''

புருஷன் பேச்சைக் கேட்டு காமு மனதுக்குள்ளேயே சிரித்தாள்.

''பிரதிவாதி பயங்கரம் பிச்சாழ்வார்கூட உலகம் தெரியாமல் இருக்காரே'' என்று அவள் வாய் முணுமுணுத்தது.

## லண்டன் கோபிநாத்

எங்க அப்பா இப்ப்டி ஆவ்ரார்ன்னு நான் எதிர்பார்க்கலே நான் லண்டனுக்குப் போயி அஞ்சு வருஷம்கூட ஆகல்லே.

அதுக்குள்ளே அப்பா தலைகீழா மாறிட்டார். பிச்சாழ்வார் என்றால் ஜட்ஜுகளுக்குச் சிம்ம சொப்பனம். ஓரக்கப் பேசி ஜட்ஜுகளின் முடிவையே மாற்றிடுவார். அவர் எடுத்த கேசு தோற்றதேயில்லே. ஆனால் இப்ப தோத்திட்டார். அதுவும் ஒரு பெண்ணிடம் தோத்திட்டார். பிள்ளைகளைக் கண்டிக்க ஆளில்லாட்டா அவங்க கெட்டுடுவாங்கன்னு சொல்றது உண்மைதான். அது மாதிரி வீட்லே மூத்த பையன் ஊரிலே இல்லாட்டா சில பெற்றோர்களும் கெட்டுடுவாங்கங்றதும் உண்மைதான்.

. எங்க அம்மா காலமான உடனே எங்க அப்பா துணையில் லாம இருந்தார். அவருடைய கோட்டைக் கழட்டி வைக்கக் கூட ஆளில்லை. எனக்கே அது சஞ்சலமாத்தான் இருந்தது. நான் லண்டனுக்குப் புறம்படும் போது என்னை வழியனுப் பிக்க எங்க அப்பா விமான நிலையத்திற்கு வந்திருந்தார். அன்னைக்கு அவரை விட்டுப் பிரியும் போதுதான் "நீங்க கலி யாணம் பண்ணிக்கறதுலே எனக்கு எந்த ஆட்சேபணையு மில்லே"ன்னு சொல்லிட்டுப் புறப்பட்டேன். எங்க அப்பா என்னுடைய பேச்சை சர்க்கார் உத்தியோகம் மாதிரி எடுத் துக்கிட்டார். ஆசையும் சபலமும் வயசையும் வெட்கத்தை யும் தோற்கடித்துடுங்கிறத எங்க அப்பா நிரூபிச்சுட்டார். நான் லண்டனுக்குப் போன மறுமாதமே எங்க அப்பா கலி யாணம் செஞ்சுக் கிட்டார். விவாஹ முகூர்த்தப் பத்திரி கையை எனக்கு அனுப்பி வைத்தார். எனக்கு வந்த சித்தியின் பெயரைக் காமேஸ்வரி என்று தெரிஞ்சுக் கிட்டேன். அந்தப் பெயர் மீது எனக்கு அலாதியான பிரியம் உண்டு. நான் திருச்சியில் படிக்கும்போது என்னோடு படிச்ச ஒரு பெண்ணின் பெயர் காமேஸ்வரி. அவள் அந்தக் கல்லூரிக்கே காதலியாக விளங்கினாள். ஆனால் அவள் என்னை மட்டும் நேசித்தாள். அவள் மட்டும் நேசித்தாள் போதுமா? எனக்கு ஏதோ அதில் முழு விருப்பம் இல்லை. ரெண்டு பேரும் விரும்பாமல் கலியா ணம் செஞ்சுக்கிறது 'ஒன்வே டிராபிக்' மாதிரி ஒரு குற்றம் தானே! கல்லூரிக் காதல், பள்ளிக்கூடத்துக் காதல்—இவை யெல்லாம் சங்கராந்தி காலத்திலே நடக்கிற கரும்பு வியா

பாரம் மாதிரி. அந்த மோகம் நீண்ட நாளைக்கு நிலைப்ப தில்லை.

எங்க அப்பா அனுப்பிய கலியாணப் பத்திரிகை நினைவுக் குக் கொண்டு வந்தது. ஆனால் அதே காமேசுவரிதான் எங்க அப்பாவுக்கு ரெண்டாந்தாரமாக வாய்ப்பாள் என்று நான் சொப்பனம்கூடக் காணவில்லை. நான் தாய்நாட்டுக்கு திரும் பும்போது என்னை வரவேற்பதற்காக எங்க அப்பாவும் காமேஸ்வரியும் வந்திருந்தாங்க. அவளைப் பார்த்ததும் எனக் குப் பழைய நினைவுகள் ஓடிவந்தன.

சே! அதையெல்லாம் இப்ப நினைக்க எனக்கே வெட்கமா யிருக்கு. இப்ப அவளே எனக்கு சின்னம்மா ஆய்ட்டாளே! அவளுடைய காதுக்குப் பக்கத்தில் இருந்த மச்சத்தைக் காலேஜ் மாணவர்கள் கருப்பு வைரம் என்று புகழ்ந்தார்கள். அதே மச்சம் எனக்கு மாணவர்களின் கோஷங்களை ஞாபகப் படுத்தின.

நான் விமான தளத்திலே இறங்கியதும் எங்க அப்பாவை நமஸ்கரித்தேன். சம்பிரதாயத்திற்காக சித்தியையும் நான் நமஸ்கரிக்க வேண்டுமல்லவா! அதையும் செய்தேன். பத்து வருஷத்துக்கு முன்னாடி நம்ம வீட்லே வேலை பார்த்தவன் கோடீசுவரனாகி அவனிடம் போயி நாமே கடன் கேட்க வேண்டியிருந்தால் எப்படியிருக்குமோ அந்த நிலை தான் எனக்கு ஏற்பட்டது.

மாடியிலே எனக்கு ஒரு தனியறை. அந்த அறைக்குள் ளேயே நான் முடங்கிக் கிடந்தேன். நான் மேல் நாட்டிலே படிச்சவையெல்லாம் இங்கே வந்ததும் மறந்தே போச்சு. கீழ் வீட்டிலே காமேஸ்வரி இருந்தாள். எங்க அப்பாவும் கீழே தனியறையிலே இருந்தார்.

நானும் காமேஸ்வரியும் பேசிக்கொள்ளாதது எங்க அப்பாவுக்குத் தெரிஞ்சிருந்தது. ஆனால் அதை எங்க அப்பா பெருந்தன்மையா எடுத்திருப்பார். பையன் கூச்சப்படுறான்னு நினைச்சிருப்பார். உண்மை அதில்லையே.

என்ன நினைச்சாரோ தெரியல்லை எங்க அப்பா, திடீர்னு ஒரு நாள் காலை என் அறைக்கு வந்தார். திடுக்கிட்டுப் போனேன்.

## பிரதிவாதி பயங்கரம் பிச்சாழ்வார்

ஊரிலே உள்ளவன் கொலைக்கேஸெல்லாம் எனக்குத் துப் பறியும் கதை மாதிரி. சிரிச்சுக்கிட்டே கேட்டுக்கிட்டிருப்பேன். சில நேரங்களிலே குறுக்கேயும் பேசுவேன். எதிரியைக் கொன்றுபோட்டு சில பேர் அரிவாளுடனே இந்த வீட்டுக்கு வருவா. அப்பக்கூட நான் கலங்கியதில்லை —'அட சண்டாளப் பயலே, அரிவாளை எங்காச்சம் புதைச்சுட்டு வரப்படாதா?' என்றுதான் கேட்பேன்.

கோர்ட்லேகூட நான் நீதிபதிகளுக்குப் பயப்படறதில்லை. சேம்பர்லே மேஜையிலே குத்திப் பேசுவேன். பிராசிகியுஷன் தரப்பை அலறவைப்பேன். சிரிக்கத் தெரியாத நீதிபதிகளைக் கூட சிரிக்க வைப்பேன். அப்படிப்பட்ட நான் என்னை விட இருபது வயது இளைய பெண்ணிடம் சிக்கிக்கிட்டுத் தவிக்கி றேன். புராணங்களிலே இந்த மோகினிகளைப்பற்றிச் சொல்லி யிருப்பதெல்லாம் உண்மைதான். இனிமே எந்த சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்கூட அதை மாத்த முடியாது.

வீடு கலகலப்பாயிருந்தா வீட்டிலே உள்ள ஆம்பளைங் களுக்கு ஓரளவு நிம்மதி தான். ஒரே பொண்ணிடம் ஒரு மாளிகையிருந்தால் கோழிப் பண்ணைக்குள்ளே மலைப்பாம்பு புகுந்த மாதிரிதான். அதுக்கு நான் ஏற்பாடு செஞ்சிருக்கேன். கோபிநாத்திற்கு கலியாணம் செஞ்சு வைச்சுடுவதுன்னு முடிவு பண்ணிப்பிட்டேன். அவன் ஒருக்காலும் என் சொல் லைத் தட்டமாட்டான். அவன் மனசுலேயும் ஒரு குறை இருக்கு. இப்ப அவனுக்கு இலையிலே சாப்பாடு போட ஆளில்லை. காமுவைப் போடச் சொன்னால் அவள் அடம் பிடிச்சுடுரு. 'சித்தி எனக்கு சாப்பாடு போடுன்னு கோபி கூப் பிட்டாத்தான் நான் வருவேன்'ரு. இந்த வைத்தியத்திற்கு

எந்தச் சட்டப் புத்தகத்திலேயும் செக்ஷன் இல்லே. ஒரே செக்ஷன் அவனுக்குக் கலியாணம் செஞ்சு வைக்கிறதுதான்.

அவனிடம் ஒபினியன் கேட்பதற்காக அவனுடைய அறைக்குள் போனேன். அவன் மறுப்புச் சொல்லவில்லே. 'ஆல்ரைட்' என்று சொல்லி விட்டான்.

ஆனல் அவள்?

"அவனே வந்து, சித்தி, எனக்குப் பெண் பார்க்க வாங்க என்று சொன்னுத்தான் நான் வருவேன். பொண்ணைப் பார்ப்பேன்"— என்கிருளே அவள்.

கொலேகாரனை எல்லாம் சத்தம் போட்டுப்பேசி விடுதலே செய்யவச்ச பாவம், காமேஸ்வரி ரூபத்திலே என்னை ஆட்டி வைக்கிறது.

சரி, இதுக்கு ஒரு முறை மாடிக்குப் போவோம்னு மேலே போனேன். அவனிடத்திலே சொன்னேன். அவனே எஞ்சினியர். வீட்டை சப்டிவிஷன் பண்ணுங்கங்கிருன். அதுக்கும் நான் ஒப்புக்கிட்டேன். கோர்ட்டிலே பிராசிகியூசன் சொல்ற எதையும் ஒத்துக்கிராத நான், வீட்டிலே தலேயாட்டிப் பொம்மையாய்ட்டேன்.

திரும்ப வந்து காமுவிடம் பேசினேன். உன் புள்ளே ஒத்துக்கிட்டான். அடுத்த வாரம் பொண் பார்க்கப் போருேம். அவனே வந்து உன்னேக் கூப்பிடுவான். நீ எதுவும் தடை சொல்லாமல் அவனிடம் இதமாகப் பேசணும்.

## காமேஸ்வரி

நான் ஒன்றும் பயித்தியம் பிடித்தவள் இல்லே. சைகாலஜி படிச்சு பாஸ் பண்ணியிருக்கேன். எனக்கு அழகு இருக்கு. எனக்குப் பணம் இருக்கு. பின்னே ஏன் நான் ஒரு கிழவனுக்கு வாழ்க்கைப் பட்டேன்னு நினேக்கலாம், அதுலே தான் என் லட்சியம் இருக்கு. நான் காலேஜிலே படிக்கிறப்போ கோபிநாத்தை விரும்பினேன். அவனுடைய புத்திசாலித்தனத்தை

மெச்சினேன். அவனுடைய சுருண்ட கூந்தலும் குறு குறுத்த பார்வையும் என்னை அவன் பக்கம் தள்ளிக்கொண்டே இருந்தன. ஆனால் அவன்......

"உன்னை நான் விரும்பவில்லை. நான் லண்டனுக்குப்போய் ஒரு லண்டன் பியூட்டியை மணம் செய்து கொள்ளப்போகிறேன்" — என்று சபதம் செய்தான்.

நான் அப்போதே அவனுக்கு ஒரு சாலஞ்ச் விட்டேன். நான் உன்னை எங்கே போனாலும் விடப்போவதில்லை என்று சொன்னேன். என்னுடைய சாலஞ்ச் இப்போது வெற்றிபெற போகிறது. அவன் அருகில் வந்து விட்டேன். எத்தனையோ பட்டதாரிகள் என்னை விரும்பியும் நான் பிச்சாழ்வாருக்கு ஒப்புக்கொண்டதற்கு இதுதான் காரணம். பிச்சாழ்வார் மரத்தில் இருந்து பிரிந்து போன வாழை மட்டை என்பது எனக்குத் தெரியும். எத்தனையோ முறை கோபிநாத்தைப் பார்ப்பதற்குக் கல்லூரிக்கு வந்திருக்கிறார். அவர் என்னைப் பார்த்திரா விட்டாலும் நான் அவரைப் பார்த்திருக்கிறேன்.

சம்பிரதாயங்கள் மிகவும் கொடியவை. கண்ணுக்குப் புலப்படாத அந்தக் கட்டுப்பாடுகள் ஒரே கடற்கரையில் ஒரே பட்டு விரிப்பில் ஒன்றாகப் படுத்துக்கொண்டு சந்திரோதயத்தைப் பார்த்துச் சுவைத்த எங்களை எப்படியோ பிரித்து விட்டது அந்தச் சம்பிரதாயம். சம்பிரதாயங்களை உடைப்பவர்களைச் சீர்திருத்தச் சிற்பி என்கிறார்கள். நான் ஏன் அதை உடைக்கக் கூடாது.

நாளைக்கு கோபிநாத் என்னைப் பார்க்க என் அறைக்கு வருகிறானும். அவனுக்குப் பெண் பார்க்க என்னைக் கூப்பிட வருகிறானும் வரட்டுமே, எந்த முகத்தோடு வருகிறான் பார்ப்போம். அநேகமாக வரமாட்டான். நான் வச்சிருக்கும் பேப்புர் பாம் பெண் வீட்டிலே இந்நேரம் வெடிச்சிருக்கும். அது இங்கே நாளைக்குத்தான் வேலை செய்யும். பிரதிவாதி பயங்கரத்தினுடைய அரட்டல் உருட்டலெல்லாம் நான் போட்டிருக்கும் வெடிகிட்ட நிக்காது.

அதோ கார் சத்தம் கேட்கிறது.

பிரதிவாதி பயங்கரம் வந்து விட்டார். இனி அவர் 'காமு 'காமு' என்று அலறுவார். பாவம்! நீதியையும் சட்டத்தையும் பயமுறுத்தி கொண்டிருக்கும் அவர் என்னிடம் ஏமாந்து கொண்டிருக்கிறார்.

## பிரதிவாதி பயங்கரம்

இதென்ன அபசகுனம் மாதிரி. பெண் பார்க்க புறப்படற நேரத்திலே இப்படி ஒரு லெட்டர் வந்திருக்கே! பெரிய குடும்பம்னு நினைச்சு பெண் கேட்டேன். பொண்ணு புரபசராக இருக்கான்னு சொன்னாங்க. ஜாதகமெல்லாம் கணஜோராக இருந்தது. இப்படி என்னை அவமானப்படுத்து வாங்கன்னு நினைக்கலே. "கல்யாணம் வச்சுக்கிறதா இல்லே. ஆகச்சே நீங்க பெண் பார்க்க வரவேண்டாம்"னு எழுதியிருக்காங்களே? ஒரு வேளை நம்ம பையனை விட உயர்ந்த படிப்பிலே பெரிய மிராசு வீட்டிலே வரன் குதிர்ந்திருக்குமோ! கிடைக்கட்டுமே! அதுக்காக பேசின பேச்சை மாத்திப்பிடுறதா? மனிதனுக்கு வாக்குறுதின்னு ஒன்னு வேண்டாமா? என்ன இருந்தாலும் ஜட்ஜ் ஜகனுதன் இப்படி அல்பத்தனமா நடப்பான்னு நெனைக்கலே.

கோபிகிட்டே நான் எதை சொல்றது? அவனே ஒரு முன் கோபி. போலீசு இலாக்காவுக்கு போக வேண்டியவன் எப்படியோ பொருளாதாரம் படிச்சுப்புட்டான். விஷயத்தைச் சொன்னு வெட்டிக் கொன்னுடுவான். கலியாணம் வேண்டாம்னு சொன்னவனை நான் கட்டாயப் படுத்தினேன். அது மட்டுமா? கண்ணெடுத்துப் பார்க்காதிருந்த அவன் சித்தியை பெண் பார்க்க நீதான் அழைக்கணும்னு சொன்னேன். நான் போய் அவன் கிட்டே தலைகுனிஞ்சு நிற்கனும். எத்தனையோ நீதிபதிகளை பதைபதைக்க வச்சுருக்கிறேன். இப்ப நான் பதைபதைச்சுப்போய் நிற்கிறேன். கோபிகிட்டே போயி இதைச் சொன்னு அவன் என்ன சொல்லுவான். நீங்க நேராப்போயி என்ன காரணம்னு தெரிஞ்சுக்கிட்டு வாங்கம்

பான். அதுவும் நியாயம்தான். சின்ன மனுஷன் தப்புச் செஞ்சாத் தரங்கெட்டவன்னு சொல்வோம். அதையே பெரிய மனுஷன் செஞ்சா சூழ்நிலை சந்தர்ப்பம்னு சொல்வோம். கோர்ட்— ஆப்— லா கூட இப்படி வளைஞ்சுத்தான் கொடுக்கிறது.

கோபி ஒரு பாரின் ரிட்டர்ண்டு. புரொக்ரசிப் மைண்ட் உள்ளவன். திடீரென்று அவனுக்கு கோபம் வந்து சமுதாயத்தைப் பழிக்கிறேன்னு பேசிப்புட்டு ஒரு கைம்பெண்ணை வீட்டுக்கு கூட்டியாந்திருவான்னு பயமா இருக்கு. கோபமா இருக்கும் பாம்புக்கு குழந்தைன்னு தெரியுமா? குளவின்னு தெரியுமா? கோபி அப்படி டைப்.

## ஜட்ஜ் ஜகனுதன்

பிரதிவாதி பயங்கரம் பிச்சாழ்வார்னு பயப்படாத ஜட்ஜுகள் கிடையாது. பப்ளிக் பிராசிகியூட்டர்களுக்கெல்லாம் அவர் பெயரைக் கேட்டாலே ஒரே நடுக்கம். அடேயப்பா அவர் ஒரு அவதாரம். சட்டத்தை நுனி நாக்கிலே வைத்திருக்கிற மகாமேதை. இவனுக்குத் தூக்குத் தண்டனை தான் கொடுக்கணும்னு ஜட்ஜ் முடிவு செஞ்சிருக்கிற தீர்ப்பை ஒரே நொடியிலே குறுக்கு விசாரணையிலே தகர்த்திடக் கூடிய மகாபுத்திசாலி.

அவர் பிள்ளைக்கு என் பெண்ணைக் கொடுக்க ரொம்ப இஷ்டம், நானே சர்க்கார் உத்தியோகஸ்தன். அவரோ சர்க்கார் தரப்பை எதிர்க்கிற லாயர். இந்தச் சம்பந்தத்தை வெகு பேர் ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். நான் யாருடைய அபிப்பிராயத்தையும் பொருட்படுத்தவில்லை. நல்ல சம்பந்தம். பொண்ணு குறையில்லாமே இருப்பான்னு நினைச்சேன், ஆனால் அவளுக்குக் கொடுத்து வைக்கலே.

ரெண்டு நாளைக்கு முன்னடி எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதுலே அடங்கியிருந்த விஷயம் என்னைத் திடுக்கிடச் செய்தது. "நீங்க உங்க பொண்ணுக்கு பார்க்கிற மாப்பிள்ளை ஓர்

அலி'' என்று அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. அந்தக் கடிதம் மொட்டைக் கடிதமாகக் கூட இருக்கலாம். ஆனுல் எல்லா மொட்டைக் கடிதத்தையும் புறக்கணிச்சுட முடியுமா? கலியாணம்கிறது ஒரு நாள் கூத்து மாதிரியல்ல. ஒரு மனுஷன் அவன் சரித்திரத்தை எழுதக் கூடிய பிரச்னே. அதனுலேதான் அவசரப்படாமல் இருக்கலாம்னு நெனேச்சு பிரதிவாதி பயங்கரத்திற்கு ஒரு கடிதாசி எழுதிப் போட்டேன். ஆனுல் அவரு என்ன நினேச்சரோ தெரியலே. என்ன நினேச்சிருப்பாரு. மோசம் பண்ணிட்டாங்க. ஜட்ஜ் ஜகனுதன் காசுக்கு ஆசைப்பட்டு பொண்ணே வெறெங்காவது விலே பேசிட்டான்னு நினேச்சிருப்பாரு.

## கோபிநாத்

முதல் காதல் முற்றிலும் தோல்வியாகுமென்று ஷேக்ஸ்பியர் சொன்னுர். ஏன் அப்படிச் சொன்னுர்? மனிதர்கள் எல்லோருமே அவசரப்பட்டு பருவம் வந்தவுடனே யாரையாவது காதலிச்சு தோத்துப் போயிடுருங்க. மகாகவிஷேக்ஸ்பியர் கூட அப்படித்தானே? இல்லாட்டி அவர் ஏன் அப்படிச் சொல்லி வைக்கணும்? நல்ல வேளே. ஷேக்ஸ்பியருக்கு முதல் காதல் தோல்வியடைந்தது உலகத்திற்கு உண்மையைச் சொல்ல உதவிற்று. அதே ஷேக்ஸ்பியர் முதல் காதல்லே வெற்றியடைந்திருந்தா அவர் சொன்ன ஒரு உண்மை பொய்யாகியிருக்கும். ஏன் தெரியுமா? எந்தக் கவியும் ஒரு பொண்ணோட நின்னதில்லே. மகாகவி மட்டும் எப்படி முதல் காதலிலேயே நின்றிருக்க முடியும்?

என் கதை இதுவரை யாரும் எழுதாத கதை. நான் படிக்கிற காலத்திலே காமுவைக் காதலிக்கலே. ஆனுல் அவள் என்னேக் காதலிச்சா. நான் முடியாதுன்னு சொன்னேன். அவள் விடமாட்டேன்னு சொன்னுள். நான் லண்டனுக்குப் போனேன். அவ என் வீட்டுக்கே வந்திட்டா. அவளேப் பொறுத்த வரைக்கும் முதல் காதல் தோல்வி. ஆனுல் அவள் தோல்வியையே வெற்றியாக்க சதி செய்திட்டா.

நான் பொண்ணு பார்க்கப் போறதா இருந்தேன். புறப் படப் போகும் போது பொண்ணு வீட்டிலே இருந்து ‘வர வேண்டாம்’னு லெட்டர் வந்ததா சொன்னுங்க. அதிலே கூட எனக்கு நிம்மதிதான். ஆனுல் அதிலே ஒரு பாலிடிக்ஸ் இருக்கு துன்னு தெரிஞ்சப்புறம்தான் எனக்கே ரோஷம் வந்தது. இது எனக்கு எப்படி தெரிந்தது? நான் டவுனுக்குள்ளே போய்ட்டு என் அறைக்கு வந்தேன். என் அறையிலே ஜன்னல் வழியே தூக்கியெறியப்பட்ட கடிதம் ஒன்று கிடந்தது. பிரிச்சுப் பார்த்தேன். என் தலையே வெடிச்சுடும் போல இருந்தது. அதுலே-

‘அன்புள்ள கோபிக்கு,

உனக்கு எந்தப் பெண்ணும் கிடைக்காது. என் பாவம் உன்னைச் சும்மா விடாது. எங்கே உனக்குப் பெண் பார்த்தாலும் அங்கே வந்து நான் சனியனுக நிற்பேன். நீ ஆண்மையற்ற அலி என நான் தீர்மானித்திருக்கிறேன். என்னைப் போன்ற ஒரு அழகிய பெண்ணை விரும்பாத மனிதன் ஒரு அலியாகத்தானிருக்க முடியும். இதைத்தான் பெண் வீட்டாருக்கு மொட்டைக் கடிதமாக எழுதிப்போட்டேன், நான் கூறியிருப்பது உண்மையல்ல என்று நிரூபிப்பதற்கு உனக்கு வாய்ப்புக்களே இல்லை. என்னைத் தவிர, இந்தச் சபதத்தில் யார் வெற்றிப் பெற போகிருர் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

இப்படிக்கு,
காமு.

ஒரு பெண் தன்னுடைய விருப்பத்திற்காக மரபுகளையும் சம்பிரதாயங்களையும் உடைத்தெறிகிருள், இதையே ஒரு ஏழைப் பெண் செய்திருந்தால் அவளைச் சுட்டுக் கொன்று விடுவார்கள். எங்களைப் போன்ற பணக்காரர்கள் வீட்டில் இப்படி நடந்தால் “அது ராயல் பேமிலி. அதெல்லாம் சகஜம்”—என்கிருர்கள். நான் மட்டும் இதற்கு ஏன் விதிவிலக்காக இருக்க வேண்டும்? நான் ஒழுங்காக இருந்தால்

போதுமா? எனக்கு மட்டும் மரபு என்ன வேண்டிக் கிடக்கு? தென்னை மரத்திலே இளநீரும் கிடைக்கிறது. புத்தியைக் கெடுக்கும் மதுவும் கிடைக்கிறது. அதைப்போல் மனித மனத்தில் மனிதத் தன்மையும் மிருகத்தனமும் தனித்தனியாக ஒளிந்து கிடக்கின்றன. எது வலிமை பெறுகிறதோ அது வென்று விடுகிறது. என்னை ஒருவன் கோழையென்றால் அவன் எதிரிலேயே நான் பலசாலியென்று நிரூபிக்க தோன்றுகிறது. அதைப்போல் என்னை ஒருத்தி அலியென்றால் அவளிடத்திலேயே நான் ஒரு ஆண்மையுள்ளவன் என்று நிரூபித்துக் காட்ட நினைப்பதில் என்ன தவறு? இது தவறென்றால் ஒரு பெண் சமவயதுள்ள ஒரு ஆடவனிடத்தில் அவனை அலியென்று இடித்துக் காட்டுவது சரியென்று எந்த மடையனும் சொல்ல மாட்டான். இது சரியென்றால் என் கருத்தும் சரிதான்.

## பிச்சாழ்வார்

தர்மம் என்று ஒன்று இருக்கிறது. அது அடிக்கடி ஆடிக்கொண்டிருக்காது. எப்போதாவதுதான் அது வேலை செய்யும். ஆனால் குறித்த நேரத்தில் அது வேலை செய்தே தீரும். என் வாழ்நாளிலேயே நான் இதை அனுபவப் பூர்வமாக அனுபவித்து விட்டேன். கோபியைச் சொல்லிக் குற்றமில்லை. அதைப் போல் காமுவைச் சொல்லியும் குற்றமில்லை. நான் செய்த தீவினைகள் எனக்கு விரோதமாக வேலை செய்து விட்டன.

கோபி மேல்நாட்டிலிருந்து வந்தவுடனேயே விதி வேலை செய்யத் தொடங்கி விட்டது. அவனும் அவளும் சந்தித்துக் கொள்ளவில்லை. பின் எப்படி ரெண்டு பேருக்கும் மனஸ்தாபம் வந்தது? எத்தனையோ கொலை வழக்குகளில் ஊகித்து உண்மையை அறிந்து கொண்ட நான் என் வீட்டில் நடந்த விவகாரத்தை அறிந்து கொள்ள முடியவில்லை. நான் ஜட்ஜ் ஜகனுதன் ஊருக்குப் போய் விட்டுத் திரும்பினேன். அங்கே போன பிறகுதான் தனக்கு வந்த மொட்டைக் கடிதத்தைப் பற்றி ஜட்ஜ் சொன்னார். அப்போது கூட என் புத்தியில் பட

வில்லே. "நீங்க ஒரு பெரிய ஜட்ஜ், இதையெல்லாம் நம்ப லாமா" என்றுதான் சொல்லிவிட்டு வந்தேன். ஆனால் இதில் ஒரு பெரிய நாடகமே நடந்திருக்கிறது என்பது இங்கு வந்த பிறகுதான் தெரிந்தது. சாமு அவள் அறையில் இல்லே. கோபி யின் அறையும் வெளியே பூட்டியிருந்தது. தனித்தனியாக இருந்த கோபியின் படமும் காமுவின் படமும் ஒன்ருக இணைந்து தொங்கவிடப்பட்டிருந்தன. எனக்கு முடிவு தெரிந்து விட்டது. இதைப்போய் நான் யாரிடம் சொல்வது? கேட்ப வர்களுக்கெல்லாம் கோபி மீண்டும் லண்டனுக்குப் போயி ருக்கான்னு சொன்னேன். காமு எங்கே என்று கேட்டால் மகனுக்குச் சமைத்துப்போட, கூட அனுப்பியிருக்கிறேன் என்று சொன்னேன். இதைத்தான் கௌரவமாக என்னல் சொல்ல முடிந்தது.

ஒரு வருஷத்திற்குப் பிறகு லண்டனிலிருந்து எனக்கு ஒரு புகைப்படம் வந்தது. அழகிய ஆண் பிள்ளையை மடியில் வைத் துக்கொண்டு காமு உட்கார்ந்திருக்க, அவளுக்குப் பக்கத்தில் கோபி நிற்க, அந்தப் படம் எடுக்கப்பட்டிருந்தது. எனக்கு மனதிலே தீ மூண்டாலும் ஒரு வகையில் எனக்குச் சந்தோ ஷம் தான். என் மகன் அலியல்ல என்பது நிரூபணமாகிவிட்ட தல்லவா! இந்தப் படத்தை ஜட்ஜ் ஜெகனுதனுக்கு அனுப்ப வேண்டுமென நினைத்தேன். ஆனல் மனச்சாட்சி என்று ஒன்று இருக்கிறதே.

உண்மையை மிஞ்சி வாதத்திலே ஜெயிக்குற பெரிய கிரிமினல் வக்கீலெல்லாம் கடைசி காலத்திலே ஏதாவது மனச் சஞ்சலத்திலே தான் கண்ணை மூடுவாங்கன்னு ஒரு அட்வகேட் ஜென்ரல் எனக்குச் சொன்னது அடிக்கடி என்னை உறுத்திக்கொண்டேயிருந்தது. அது இப்ப பலிச்சுப்போச்சு.

திறமைக்கும் உண்மைக்கும் நடக்கிற போட்டியிலே திறமை ஜெயிக்கிற மாதிரி முதல்லே தெரியும், ஆனல் அது பொய்! உண்மைதான் ஜெயிக்கும்.

★

ஜீவன் பிரஸ் சென்னை - 5.